சரவணை கீழக்கு, மயிலப்புலம், திருப்பொலி கட்டுவன்வான்

அருள்மிகு ஐயனார் திருக்கோவில்

திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர்

ஆலய திருப்பணிச் சபை,
அறங்காவலர் சபை

12.06.2013

சரவணை கீழக்கு, மயிலப்புலம், திருப்பொலி கட்டுவன்வான்

அருள்மிகு ஐயனார் திருக்கோவில்

திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர்



விஜய வருட வைகாசி மாதம் 29ம் நாள் (12.06.2013)

ஆலய திருப்பணிச் சபை, அறங்காவுச் சபை

புற்றீடங் கொண்டு வீட்டக லாதுமண்
பற்றி நின்று பாலிக்கும் ஆரியன்
அற்புதங் கள்செய் அந்தணன் மண்கும்பான்
உற்றெ மைப்புரந் தாள்உமை பாலனே.

ஐயனார் துதி வெண்பா

அல்லல் அடையின் அபயம் அளித்தெமது
தொல்லைமிக நீக்கும் சுடர்ச்செண்டான் – வள்ளல்
அரியர புத்திரனென் றேயகிலம் போற்றும்
கரியனைக் கட்டுவனிற் காண்.

அஞ்சவரின் வந்து அபயம் அளித்தெங்கள்
நெஞ்சிற் றுணிவுவர நிற்பான்சீர் –விஞ்சும்
மதகரியான் கட்டுவன்வான் மாலரனின் அன்பார்
புதல்வ னையன் என்றே புகல்.

வாரணத்தான் ஐயன் வளர்செஞ் சடையுடையான்
பூரணையோ டின்பார் புட்கலையுஞ் – சேரவே
கட்டுவன்வான்மேவிக் கருணைமழை பொழிந்து
பட்டினியைப் போக்குவான் பார்.

எண்ணும் பொழுதெல்லாம் எம்நெஞ்சுறநண்ணும்
அண்ணல் எழிற் கட்டுவன்வான் ஐயன் – பொன்னின்
திருவும் கலைமாதும் சேர்ந்திருக்க நித்தம்
அருள்வான் அவனே அரண்.

அரனென்பார் அரியென்பார்
அயனே என்பார் அகம் மகிழ்ந்து
சரவணைத் திருப்பொலியும் கட்டுவன் வான்பதி
மேய ஐயனார் தாள் பணிவார்.

ஓம் சக்தி

மயிலப்புலம் சரவணை, வேலணை - 05

அருள் மிகு திருப்பொலி கட்டுவன்வான் ஐயனார் திருக்கோவில்

புனருத்தாரண பிரதிஷ்ட

மஹா கும்பாபிஷேக பெருஞ் சாந்திப் பெருவிழா

எண்ணும் பொழுதெல்லாம் எம்நெஞ்சுறநண்ணும்
அண்ணல் எழிற் கட்டுவன்வான் ஐயன் - பொன்னின்
திருவும் கலைமாதும் சேர்ந்திருக்க நித்தம்
அருள்வான் அவனே அரண்

ஐயனார் மெய்யன்பர்களே!

சிவபூமி என அழைக்கப்படும் புண்ணிய பூமியாம் ஈழவளத் திருநாட்டின் இயற்கைச்சூழல் நிறைந்தும் பல சைவ ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டும் தெய்வீக தன்மையும் சைவ ஆசார சீலரும் ஒருங்கே அமையப்பெற்ற சரவணை மயிலப்புலம் திருப்பொலி கட்டுவன்வான் எனும் பகுதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் ஐயனாருக்கும், பின்னையார், எழுந்தருளி, கதும் பலிபீடம் போன்ற தெய்வங்களுக்கும், ஸ்தூபிகளுக்கும் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கும், நிகழும் மங்களகரமான விஜய வருடம் வைகாசி 29ம் நாள் (12.06.2013) புதன் கிழமையும், சித்தயோகமும், சதுர்த்தி திதியும் சிங்கலக்கினமும், பூச நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் காலை (11.20 மணி தொடக்கம் 11.56 மணிவரையுள்ள நேரம்) மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. திருக்குடமுழுக்குப்பெரு விழாவில் தாங்கள் அனைவரும் கலந்து கொண்டு எம் பெருமானின் இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் கேட்டுகொள்கின்றோம்.

கிரியா கால நிகழ்வுகள்

வைகாசி 27ம் நாள் (10.06.2013) திங்கட்கிழமை

காலை 6.00 மணிக்கு: கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு அனுஞ்ஞை, திரவிய சாந்தி, திரவிய விபாகம் கணபதி ஹோமம், திசா ஹோமம், சம்ஹிதா ஹோமம், மூர்த்தி ஹோமம், சாந்தி ஹோமம், கிராம சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், நவகிரக ஹோமம், கங்கா பூசை, வாஸ்து சாந்தி, சூர்யாக்னி சங்கிரகணம், பிரசாதம் வழங்கல்.

மாலை 4.00 மணிக்கு: விநாயகர் பூசை, மிருசங்கிரணம், அங்குரார்ப்பணம், ரஷாபந்தனம், துவஜ பூசை, தூபி தீபி, யந்திர, பிம்ப ஸ்தாபனம், தடஸ்தாபனம், கராகர்ஷணம், சஷண ஹோமம், கும்ப யாக சால பிரவேசம், பேரசலனம், யாக பூசை, அக்னி பூசை, விசேட யாக பூசை வழிபாடு, பிரசாதம் வழங்கல்.

வைகாசி 28ம் நாள் (11.06.2013) செவ்வாய்க்கிழமை

எண்ணைக்காப்பு : 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

காலை 8.00 மணிக்கு: விநாயகர் பூசை, விசேட சாந்தி, பூத சாந்தி, யாக பூசை, விசேட ஹோமம், திரவிய ஹோமம், விசேட பூசை, பிரசாதம் வழங்கல்.

மாலை 5.00 மணிக்கு: விநாயகர் பூசை, பிம்ப சாந்தி பிம்ப ரஷபந்தனம், நியாசம், யாக பூசை, ஸ்பரிசாகுதி, விசேட பூசை வழிபாடு, வஸ்திர தானம், பிரசாதம் வழங்கல்.

வைகாசி 29ம் நாள் (12.06.2013) புதன் கிழமை

காலை 8.00 மணிக்கு: விநாயகர் வழிபாடு, யாக பூசை, விசேட ஹோமங்கள், மஹா பூர்ணாகுதி தீபாராதனை, உபசாரம் சமர்ப்பணம், வேதம் ஸ்தோத்திரம், கணபதி தானம், ஆசீர்வாதம், திராவிட ஸ்தோத்திரம், அந்தர்பலி பதரீபலி, யாத்திரா தானம், தொடர்ந்து ஸ்தூபி கும்பம், யாகசாலை கும்பங்கள், சர்வ வாத்திய சகிதம், வீதி வலம் வர்து ஸ்தூபி அபிஷேகம், தொடர்ந்து ஸ்தூபி கும்பம், யாகசாலைகும்பங்கள் சர்வவாத்திய சகிதம் வீதிவலம் வந்து அபிஷேகம், தொடர்ந்து மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

திருமுடமுழுக்கு நிகழ்வினை தொடர்ந்து மண்டலாபிஷேகம் கால் மண்டலம் (12 நாட்கள்) நடைபெறும் அடியார்கள் பூக்கள், பால்,தயிர், இளநீர், பழவகை, தேன், நெய், தானியங்கள், போன்ற பொருட்களை ஆலயத்திற்கு கொடுத்து ஆலயரின் அருளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

சர்வ பொதகம்
சிவஸ்ரீ த. மஹாதேவர் குருக்கள் (இலுவில்)
சிவஸ்ரீ நா.தர்மராஜசர்மா குருக்கள் (கொக்குவில்)

சுமப்புக் குரு
சிவஸ்ரீ க.சிவசெல்வ சர்மா (சரவணை)

கும்பாபிஷேக குருமார்கள்
பிரதிஷ்டா பிரதம குருக்கள்
சிவஸ்ரீ த. பாலகிருஷ்ணக் குருக்கள் (மாதுவன் வட மேற்கு பத்திராளி கோவில்)
முனைய கும்பாபிஷேக குருமார்கள்
சிவஸ்ரீ த. மோகஸ்வர குருக்கள் (கொழும்பு)
சிவஸ்ரீ பா. துஷ்யந்த குருக்கள் (மாதகல்)

சர்வசாதகர்
பிரம்மஸ்ரீ ப. ராஜகோபாலசர்மா(கோப்பாய்)
யாகம் நெட்சகர்கள்
பிரம்மஸ்ரீ உ., கிருபாகர சர்மா(கொக்குவில்)

அருளாசி உரை
நல்லை ஆதீன முதல்வர்
சோமஸ்கந்தபரமாசார்ய சுவாமிகள்
சிவஸ்ரீ த. பாலகிருஷ்ணக் குருக்கள்

ஆலய குரு
பிரம்ம ஸ்ரீ தே. பாலச்சந்திர சர்மா

பூலலாங்காரம்
பொ.செல்வநாயகம்

மங்கள வாத்தியம்
வி. வடிவேலு குழுவினர்

ஒலி ஒளி அமைப்பு
முத்துமாரி சவுண்சேவிஸ் கோவில் தம்பாட்டி

கட்டட நிர்மாண
த. மாணிக்கவாசகர் நிறுவனர் (அராலி)

இங்ஙனம்
ஆலய பரிபாலனசபை
ஆலய திருப்பணிசபை

Vihadan Printers: 541/2, Galle Road, Colombo-06, Sri Lanka. Tel: 011-2504370

எம் பாக்கியம்

தொழுது தூமலர் தூவி
அழுது காமுற்று
அரற்றுவார் சிலர்
அலகிட்டு மெழுக்குமிட்டு
ஆலய பிரகாரத்தை
அழகுசெய்வார் சிலர்
பொங்கி வரும் பாலில்
அரிசியிட்டு பொங்கல் செய்வார் சிலர்
நாமோ! ஆலம் விழுதுகளில்
தொங்கி விளையாடி
பொழுது போக்கி
அரட்டையடிக்க
ஆலயம் செல்வோம்
பழுதிலாது பாரிது வாழ்வை
பயின்றிட வைத்து
எமை ஆட்கொண்ட
எம்பிரான் ஐயனார்க்கு
விஜய வருட வைகாசித் திங்கள்
இருபத்தொன்பதாம் நாள்
கற்கோவில் அமைத்து
பெருவிழாக் காண விழைந்த காலை
மலர் இதுதன்னை
எம்பிரான் அடியினில் சமர்ப்பிக்க
எம்மீது விழுந்த பாக்கியம் என்னே!
அகவைகள் பழுத்ததால்
ஐயனார் அருளினை
அனுபவித்து உணர்ந்து
செய்ய மேனியன் ஐயனார்
திருப்புகழ் பாடி
தையலார் பூரணை புட்கலை
ஐயன் அருள் திறம் பாடி

உய்ய நல்வழி காட்டிடும்
குருமார் ஆசியும் வேண்டி
மலரிது மலர்ந்தது
காம்பொடு அல்லி புல்லி
குறி தம்பம் என்றும்
மகரந்த மணிகளையும்
தேன் துளிகளையும்
பொதித்த அனைவருக்கும்
அரிகரசுதனின் அருளது பெருகும்
ஆலய வரலாற்றுச்
சான்றுக்காய் இம் மலரும்
சற்றேனும் மணக்குமெனின்
அதுவே எம் பாக்கியமே.

சி. தயாபரன்
மலர்க்குழு சார்பாக

அருளாசிச் செய்தி

இரண்டாவது குரமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய
ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்

சிவனேயச் செல்வர்களே,

வேலணை சரவணை பிரதேசத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஹரிஹர புத்திர ஐயனாருக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஒரு ஆலயத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவது கும்பாபிஷேகமாகும். இவ் அபிஷேகம் இவ்வாலயத்தில் நடைபெறுவது ஊருக்கும் ஆலயத்திற்கும் புனிதத்தினை தருவதாகும். இவ்வபிஷேகத்தினை செய்வதும் செய்விப்பதும் புண்ணியத்தின் பேறே பரமேஸ்வரனால் நமக்கு அருளப்பட்ட ஐயனார் வழிபாடு ஊருக்கு காவலனாகவும் நமக்கு பாதுகாவலனாகவும் எளிமையான வழிபாட்டை கொண்ட தெய்வமாகவும் ஐயனார் விளங்குகின்றார். உலக இன்பங்களை அனுபவித்து வீடுபேற்றை வழங்குகின்ற தெய்வமாக நீண்ட காலமாக வேண்டுவார். வேண்டுவதை ஈயும் பொருட்டு அருள்பாலித்து வருகின்றார். அனைவரும் இங்கு நடைபெறும் கும்பாபிஷேகத்தை கண்டு களித்து பேரின்ப பெருவாழ்வு வாழ்வோமாக. இப்புண்ணிய காரியத்தினை செய்யும் குருமார்களுக்கும் பரிபாலனசபையினருக்கும், திருப்பணிச் சபையினருக்கும், ஊர் மக்களுக்கும் இறையின்பம் கிடைப்பதாக.

"என்னும் வேண்டும் இன்ப அன்பு"

ஆசியுரை

சிவப்பிரம ஸ்ரீ வாமதேவ சிவாச்சாரியார்
ந. பாலசுப்பிரமணியம் குருக்கள் (கொக்குவில்)
யாழ் வண் வடமேற்கு பத்திரகாளி கோவில்
பிரதிஷ்டா பிரதமகுரு

இந்து சமயத்தின் இரு பெரும் பிரிவுகளான சைவம் – வைணவம் இரண்டின் இணைப்பாக ஹரிஹர புத்திர வழிபாடு அமைகிறது. மோகினி உருத்தாங்கிய விஷ்ணுவிடம் சிவனுக்குப் பிறந்த குழந்தை எனப் புராணங்கள் கூறும் இந்த சாஸ்திர வழிபாடு மிகத் தொண்மையானது. சாத்தன் என்ற பெயரில் சங்கத் தமிழ் இலக்கியங்கள் கூறும் இந்த வழிபாடு ஐயனார் என்ற பெயரிலும் இருந்து வருகின்றது.

சாதாரண மக்களால் காவல் தெய்வமாக வழிபடப்படும் கிராமியத் தெய்வமாக இருப்பினும் சிவாகம வழிபாட்டு மரபுகளும் உள்ளன. சிவாலயங்களில் பூர்ணா, புஷ்கலா சமேத ஹரிஹர புத்திரின் பிரதிஷ்டைக்குரிய விதிமுறைகளை சிவாகமங்கள் விரிவாகக் கூறுகின்றன.

சாஸ்தாவின் இன்னொரு வடிவமான ஐயப்பன் வழிபாடு இன்று மிகப் பிரபல்யமாகவும் பக்திபூர்வமானதாகவும் உள்ளது. சபரிமலை ஐயப்பன் யாத்திரை மிகவும் புனிதமானது. இத்தகைய ஒரு பின்னணியிலே இலங்கையின் பல பாகங்களிலும் பல ஐயனார் ஆலயங்கள் தொன்று தொட்டு இருந்து வருகின்றன. இப்போது பல ஐயப்பன் ஆலயங்களும் கட்டப்பட்டிருக்கின்றன.

இந்த வரிசையில் கட்டுவன் பதியில் நீண்ட காலமாக வழிபட்டுவரும் பூர்ணா, புஸ்கலா சமேத ஹரிஹல புத்திரர் ஆலயத்தில் இப்போது மிகச் சிறப்பாக திருகுடமுழுக்கு விழா நடைபெற்று வருகின்றது.

ஆலயங்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப் பெற்று அங்கு புராவர்த்தனப் பிரதிஷ்டை நடைபெறவேண்டுமென்று ஆகமவிதிக்கிணங்க இக் கைங்கரியம் நடைபெறுகின்றது.

இந்த மஹாகும்பாபிசேகத்தின் பயனாக இவ்வூரிலும், நாட்டிலும், அகில உலகிலும் எல்லா நலங்களும் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன் இந்த மஹாகும்பாபிசேகத்தை நடத்தும் ஆலய தர்ம பரிபாலகர்கள், அடியார்கள், பொருள் வழங்கயவர்கள் யாவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

சாமியே சரணம் ஐயப்பா

ஐயப்பன் என்றிடினும் ஐயனார் என்றிடினும் அன்பர்களின் உள்ளத்தில் கோவில் கொண்ட ஸ்ரீ மஹா சாஸ்தா

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி,
ஆன்மீகப் பேராசிரியர், சபரிமலைக் குருஜீ, சிவாகம கலாநிதி,
ஆன்மீக அருள்ஜோதி,
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்
(பெருந்தலைவர், இலங்கை பிராம்மண சமாஜம்
அகில இலங்கை சமாதான நீதவான்)

துவி ஹஸ்தம் பத்ம ஸம்ஸ்தஞ்ச
சுக்ல யக்ஞோப வீதி நம்
பூர்ணா புஷ்களா தேவ்யா யுக்தம்
சாஸ்தார மாஸ்ரயே !

இரண்டு கைகளோடு கூடியவரும், தாமரையில் வீற்றிருப்பவரும், வெண்மையான பூணூலை அணிந்தவரும் பூர்ணா புஷ்களா என இரு தேவியருடன் கூடிய சாஸ்தாவை வணங்குகிறேன்.

தன்னை பக்தியுடன் வணங்கும் அடியார்களின் வேண்டுதல்களை பூரணமாக நிறைவேற்றுகின்ற கருணை கொண்டவர் பூர்ணா புஷ்களா சமேத ஸ்ரீ ஹரிஹரபுத்திரர் எனும் ஐயனார். கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான பகவான் ஸ்ரீ மஹா சாஸ்தா எனும் ஐயனார் பற்றிய வரலாறுகள் புராணங்களிலும், ஆகமங்களிலும் சிறப்பாகக் காணப்படுகிறது.

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாஷமாய், ஆனந்த மூர்த்தியாய், அணுவிற் கணுவாய், பிரம்மாயாய் தோன்றிய சிவனுக்கும், மோகினி வடிவம் கொண்ட மஹா விஷ்ணுவிற்கும் புத்திரராகத் தோன்றியவர் மஹா சாஸ்தா எனும் ஹரிஹரபுத்திரர் ஐயனார்.

மஹா சாஸ்தாவான ஐயனாருக்கு சிவன் பட்டாபிஷேகம் செய்து வைத்தார். அப்போது "அகில உலகையும் காக்கும் ஈஸ்வரன் நீயே" என ஆசிவழங்கினார். சிவன் இதனை

"ஏவ முகத்வா அவநம்ரஸ்ய புவனேஸ்வர தாம் ததௌ" என ஸ்காந்த புராணம் கூறுகிறது. மேலும் சாஸ்தா சிவ விஷ்ணு ஸ்வரூபர் என்பதனை நாம் அறிவோம். ஆனால் ஸ்கந்த புராணமோ அவரை மும்மூர்த்திகளின் வடிவம்

என்பதனை சிவனின் வாயிலாகக் கூறுகிறது. இறைவன் சாஸ்தாவைப் பார்த்து குழந்தாய் நானும் விஷ்ணுவும், பிரம்மாவும் உன் வடிவில் அவதரிக்கிறோம் என கூறுகிறார்.

"த்வத் ரூபேணாவதீர்ணாஸ்ம

பிரம்ம விஷ்ணுரஹம்ஹ்ஹ" என ஸ்காந்த புராணம் கூறுகிறது. எனவே மஹா சாஸ்தாவாகிய ஸ்ரீ ஹரிஹரபுத்திரரான ஐயனாரை வணங்கினால் பிரமா, விஷ்ணு, ருத்ரர் என்னும் மும்மூர்த்திகளையும் வணங்கிய பலனைப் பெறலாம்.

சுப்ரபேதாகமம் சாஸ்தாவின் சிறப்புகளைக் கூறுகிறது.

சாஸ்தா ஸர்வஸ்ய லோகஸ்ய தஸ்மாத் சாஸ்தேதி சோத்யதே!!

சாஸ்தா என்றால் கட்டளையிடுபவர் என்றும் எல்லா உலகையும் ஆளுபவர் என்றும் குறிப்பிடுகிறது. தேவர்களில் சிரேஷ்டமானவர் என "தேவோத்தமர்" என விஷ்ணு புராணம் சிறப்பித்துக் கூறுகிறது. "மந்த்ர மஹோததி" என்ற மந்திர சாஸ்திரங்களை விளக்கிக் கூறுகின்ற நூலில் பக்தியுடன் தன்னை வணங்கும் அடியாருக்கு விரும்பியதை வழங்கும் கலியுகத் தெய்வம் எனப் போற்றுகிறது.

தர்மசாஸ்தா, ஹரிஹரபுத்திரர், ஆர்யர் மஹா சாஸ்தா, பூதநாதர், தேவோத்தமர், புவனேஸ்வரன் என்ற சிறப்புப் பெயர்களோடு திகழும் தர்மசாஸ்தாவின் பூவுலக அவதாரம் ஸ்ரீ மணிகண்டன் ஐயப்பன் ஆகும்.

மஹா சாஸ்தாவாகிய ஸ்ரீ ஹரிஹரபுத்திரர் எனப்படும் ஐயனார் லோக க்ஷேமத்தின் பொருட்டு பல்வேறு அவதாரங்களை எடுத்துள்ளார். அவையாவன :

01. ஸ்ரீ சத்ய ஸஹித சாஸ்தா
02. ஸ்ரீ சம்மோஹன சாஸ்தா
03. ஸ்ரீ விஸ்வ சாஸ்தா
04. ஸ்ரீ வேத சாஸ்தா
05. ஸ்ரீ கால சாஸ்தா
06. ஸ்ரீ யோக சாஸ்தா
07. ஸ்ரீ பிரம்ம சாஸ்தா
08. ஸ்ரீ லக்ஷ்மீ சாஸ்தா
09. ஸ்ரீ வித்யா சாஸ்தா
10. ஸ்ரீ ஞான சாஸ்தா
11. ஸ்ரீ பூத சாஸ்தா
12. ஸ்ரீ சத்ரு மர்த்தன சாஸ்தா
13. ஸ்ரீ சர்வ சாஸ்தா
14. ஸ்ரீ ஜவ சாஸ்தா

15. ஸ்ரீ ப்ரசன்ன சாஸ்தா
16. ஸ்ரீ பீம சாஸ்தா
17. ஸ்ரீ தர்ம சாஸ்தா
18. ஸ்ரீ ஹரி ஹர புத்ர மஹா சாஸ்தா என பதினெட்டு அவதாரங்கள்.

ஸ்ரீ ஹரிஹரபுத்திரர் ஐயனாரின் ஓர் அவதாரமே "தர்மசாஸ்தா ஐயப்பன்"

எனவே ஐயனார், ஐயன், ஐயப்பன், சாஸ்தா, மணிகண்டன், என பல நாமங்கள் கொண்டு ஸ்ரீ ஐயனார் எனும் மஹாசாஸ்தா போற்றி வணங்கப்பட்டு வருகிறார். கிராமங்களின் காவல் தெய்வமாக ஸ்ரீ ஹரிஹரபுத்திரரை தமிழ்நாட்டு மக்கள் ஸ்ரீ ஐயனார் என போற்றி வணங்குவர்.

பிரம்மச்சாரிய கோலத்தில் ஸ்ரீ ஐயப்பன் தர்மசாஸ்தா எனப் பெயர் பெறுகிறார். பூர்ணா புஷ்களா தேவியுடன் ஸ்ரீ ஹரிஹரபுத்திரர் ஐயனார் மஹா சாஸ்தா எனப் போற்றப்படுகிறார். எனவே ஐயனாரும் ஐயப்பனும் ஒருவரே பல்வேறு காரணங்களாலும் காரியங்களாலும் பல்வேறு பெயர்களைப் பெறுகிறார்.

ஐயப்பன் என்றிடினும் ஐயனார் என்றிடினும் அன்பர்களின் உள்ளத்திலே கோவில் கொண்ட மஹா சாஸ்தா முருகப்பெருமானின் பல்வேறு வடிவங்கள் போல உதாரணமாக சுப்பிரமணியசுவாமி, ஸ்ரீபாலமுருகன், தண்டாயுதபாணி, ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி, முத்துக்குமாரசாமி, ஆறுமுகப்பெருமான், ஷண்முகர், கார்த்திகேயன், செந்தில் ஆண்டன் இவை அனைத்துமே முருகப்பெருமானின் அவதாரமே அதேபோல ஸ்ரீ ஐயனார், ஸ்ரீ ஐயப்பன் சாஸ்தா அனைவரும் ஒருவரே.

எனவே நாமும் பூர்ணா புஷ்களா சமேத ஸ்ரீ ஹரிஹர புத்திரரான ஸ்ரீமஹா சாஸ்தா ஐயனாரை பக்தியுடன் வழிபட்டு வாயார சரண கோஷமிட்டு பரிபூரண அருளைப்பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக!

"சுவாமியே சரணம் ஐயப்பா"

ஸ்ரீ பூதநாத சதானந்த
சர்வபூத தயாபர
ரக்ஷ ரக்ஷ மஹாபாயே
சாஸ்தரே துப்யம் நமோ நம்.

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்,
கொழும்பு,
தொ.பே 0779930140.

திருப்பணிச் சபையின்
செயலாற்றுகை அறிக்கை 2012 - 2013

சு. மகேந்திரன்
செயலாளர், திருப்பணிச் சபை.

சிவபூமியாகிய இலங்காபுரியின் வடபால் சைவமும், தமிழும் வளர்க்கும் தீவகத்தின் நடுவண் மிளிரும் வேலணையின் சரவணைக்கிழக்கே மயிலைப்புலம் கிராமத்தில் பனைக்கூடல்களும், தெற்கே மருதமும், வடக்கெ நெய்தலும், சூழ்ந்த திருப்பொலியும் கட்டுவன்வானிலே இன்றைக்கு மூன்று நூற்றாண்டுக்கு முன் கிளுவை மரத்தடியில் ஒளிப்பிழம்பாக காட்சிகொடுத்தது மக்களுக்கு அருள் வழங்கிய அரிகரசுதன் ஐயனாருக்கு இரு நூற்றாண்டுக்கு முன் ஆலயமாக அமைக்கப்பட்டது. நம் முன்னோர்கள் பக்திபரவசமாக நேத்திக்கடன் தீர்க்கவும் தம் விளைநிலத்தின் விளைந்த பொருட்களை கொண்டு எம் பெருமானுக்கு பொங்கல் படையல் இட்டு விழா எடுத்தனர்.

இது இவ்வாறிருக்க நம்முன்னோர் இவ்வாலயத்திற்கு ஒரு பூசகர் தேவையென உணர்ந்து செல்லப்பா குருக்களை அழைத்து வீடு அமைத்துக் கொடுத்தனர். அயல் கிராமக் கோயில்களையும் சைவ ஆகமமுறைகளைப்பேணி நித்திய நைமித்திய பூசைகளை இவரே ஆற்றி வந்தார். திருமணம் புதுமனைப்புகுதல் மற்றம் ஆசௌசய கிரியைகளை இவரே நடாத்தி சமய ஆசார ஒழுக்கங்களை பேணி முன்நின்று உழைத்தார். இவரைத்தொடர்ந்து இவரது மகன் பிரம ஸ்ரீ கணபதிப்பிள்ளை குருக்கள் ஆலயத்தை பரிபாலனம் செய்து வந்தார். 1970ம் ஆண்டு அலய பரிபலானத்தை ஆலய அறங்காவற் சபை பொறுப்பேற்றது. இச்சபைக்கென யாப்புவிதிகள் 1982ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பொங்கல் விழா, சிவராத்திரி, நவராத்திரி, சித்திரக்கதை, திருவெம்பாவை போன்ற விழாக்களை சிறப்பாக செய்து வந்தார். மக்கள் இடம்பெயர்ந்து போன காரணத்தினால் ஆலயம் வழிப்பாடு அற்று போனதாலும், பரிபாலிக்கப்படாமலும் ஆலய கட்டிடங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இவ்வாலயத்தை புனரமைக்க வேண்டுமென உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் இக்கிராம மக்களின் ஆதரவின் காரணமாக திருப்பணிச்சபை 05.06.2012 ஆலய மண்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இச்சபையின் தலைவராக திரு.பொ. ஜெகதீஸ்வரன் அவர்களும், செயலாளராக திரு.சு. மகேந்திரன் அவர்களும், பொருளாளராக திரு.க.இராசலிங்கம் அவர்களும் மற்றும் திருப்பணி சபை உறுப்பினர்களாக திரு.இ. கதிர்வேலுப்பிள்ளை, திரு.ம.சிவம், திரு.வ. நாவேந்தன், திரு.பா. முகிலன் ஆகியோர் நாம் தெரிவுசெய்யப்பட்டனர். காலக்கிரமத்தில் திருப்பணிச் சபை உறுப்பினராக திரு. த. இராசரத்தினம் அவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

தீர்மானங்களும் செயற்பாடுகளும்

05.06.2012 ஆலய மண்டபத்தில் கூடிய திருப்பணிச்சபையில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

01. ஆலய போக்குவரத்துக்கு நிரந்தர வீதி அமைத்தல்
02. திருப்பணி செய்வதற்கான கட்டிடகலைஞர்களை சந்தித்தலும் மதிப்பிடுகளைப் பெறுதலும்.
03. நிதி சேகரிப்புக்காக வெளிநாடுகளில் பொறுப்புள்ளவர்கள் நியமிக்கப்படல்
04. 24.06.2012 அடியார்கள் அனைவரையும் அழைத்து ஆலோசனைகளைப் பெறல்

ஆலய பழைய கட்டிடத்தை அப்புறப்படுத்தி புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான சாதனங்களை கொண்டுவருவதற்கு உகந்த பாதையில்லாமை ஆரம்பத்திலே உணரப்பட்டது. இதனால் ஆலயத்திற்கான மேற்படி பாதையினை நிர்மாணிப்பதை எமது முதற் பணியாக மேற்கொண்டோம். இதற்கான காணி உரிமையாளர்களான திருமதி. க. குருமூர்த்தி, திரு.பொ. பேரின்பநாயகம் ஆகியவர்க ளிடமிருந்து கேட்டுக்கொண்டபோது மனமுகர்ந்து வழங்கினார்கள். பைக்கோவின் உதவியுடன் மரங்கள், பற்றைகள், அகற்றப்பட்டு மூலஸ்தான சிதைவுகளையும், ஊரியையும் கொண்டு புதிய பாதை அமைக்கப்பட்டது.

கருங்கல் கட்டிட நிர்மாண சிப்பாசாரிகள் ஐவரிடமிருந்து பெறப்பட்ட மதீப்பிடுகள் திருப்பணி சபையினால் ஆராயப்பட்டு திரு.சு. மாணிக்கவாசகர் அவர்களின் மதீப்பிட்டை ஏற்றுக்கொள்வதென்று தீர்மானித்து அவருடன் 25.06.2012 அதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது. 14.07.2012 அன்று கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதி சேகிப்புக்காக விஞ்ஞாபனங்கள் அச்சிடப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் இணையத்தளம் மின்னஞ்சல் ஊடாகவும் கோரிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டன. 24.06.2012 அன்று ஏலவே தீர்மானித்தப்படி ஆலோசனைக் கூட்டம் நடாத்தப்பட்டது. இக்கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனைகளில் முக்கியமானவை

1. குறிப்பிட்ட திருப்பணிகள் யாவற்றைக்கும் செயலிலக்கு காலம் 2013.மே மாதமாக இருத்தல் வேண்டும்.
2. ஐப்பசி முதல் நாளில் 1008 சங்குஸ்தாபனம் செய்து அத்திவாரம் மிடல்.

19.08.2012 அன்று ஆலய மண்டபத்தில் கூடிய திருப்பணிச்சபை ஏலவே கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனைகளை முழுமையா செயல்ப்படுத்துவதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்,

01. ஒரு சங்கினை பதிப்பதற்கான கட்டணமாக அடியார்களிடமிருந்து ரூபா 1000 பெறல்.

02. கிராமத்தில் அயலில் மூத்தவர் ஒருவரை கொண்டு சங்குஸ்தாபனத்தை ஆரம்பித்தல்.

30.09.2012 இல் நடைப்பெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

01. சங்குஸ்தாபன நிகழ்ச்சியை பத்திரிக்கையில் விளம்பரப்படுத்தல்.

02. இந்நிகழ்ச்சியை நடத்துவதற்கான குருக்களை தெரிவு செய்தல்.

எல்லாமே பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டது.

இத்தீர்மானங்களுக்கமைய சங்குஸ்தாபனத்திற்கான பற்றுச்சீட்டினை தயாரித்து அடியார்களிடம் விநியோகித்து, அதன் மூலம் அடியவர்களின் பெயர் நட்சத்திரங்களைப்பெற்று செப்புத்தகட்டில் பதித்து, சங்கினுள் வைத்து 28.05.2012 அன்று பெரியவர் திரு. த. தீருகண்டம் அவர்கள் ஆரம்பித்து வைக்க பிரம்மக்குரு சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களால் சங்குஸ்தாபனம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளின் மூலம் கணிசமான நிதி சேகரிக்கப்பட்டது.

14.01.2013 நடைப்பெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

01. வைகாசி மாதத்தில் கும்பாபிஷேகம் நடாத்துதல்

02. ஆகம விதிப்படி மண்டபங்கள், பலிபீடம் ஆகியவற்றின் அமைப்பு விதி பிரமாணங்களுக்கு ஏற்ப புதிதாக அமைக்கப்பட வேண்டுமென்ற சிற்பாச்சாரிகளின் ஆலோசனைகளை நிறைவேற்றல்.

03.02.2013 நடைப்பெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த மண்டபங்கள் அனைத்தும் ஆகம விதிப்படி பிரமாணங்களுக்கு அமைவாக அமைக்கப்பட்டிருக்க வில்லையென்ற சிற்பாச்சாரியர்களின் கருத்து உறுப்பினர்களிடையே மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியதுடன் மண்டபங்கள் சரியான அளவு பிரமாணங்களில் அமைக்கப்பட வேண்டுமென்று ஏகோபித்து முடிவு செய்யப்பட்டு, பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

01. மகாமண்டபம், தரிசன மண்டபம் புதிதாக அமைத்தல்.

02. இதற்கான நிதி தேவைப்பாடுகளை அடியவர்களுக்கு பிரசங்ப்படுத்தல்

03. மடப்பள்ளி பூசுதல், வர்ணம் தீட்டுதல்.

04. மஞ்சக் கிணறு புனரமைத்தல்.

05. பொதுக்கிணத்தை புனரமைத்தல்.

03.03.2013 அன்றைய கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. எதிர்பாராத விதமாக மகாமண்டபம் புதிதாக கட்ட வேண்டியிருந்தால்

ஆலய திருப்பணிச்சபை, அருங்காவற்சபை உறுப்பினர்கள் சிலருடன் குருமார்கள்

இடவசதிகருதி மீண்டும் பாலஸ்தாபனம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. 18.03.2013ல் மீண்டும் உரியமுறையில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

03.03.2013 நடைபெற்ற கூட்டத்திலேயே 12.06.2013 கும்பாபிஷேகத்தை நடத்தும் தினம் உறுதிச்செய்ப்பட்டது. இச்சுபநாள் பிரதமகுரு சிவஸ்ரீ ந. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களினால் கணிக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பிரகாரம் கும்பாபிஷேகம் பத்திரிக்கை அச்சிடப்பட்டது.

28.04.2013 தின கூட்டத்தன்று கும்பாபிஷேக பத்திரிகை விநியோகிக்கப்பட்டதுடன் கும்பாபிஷேக நிகழ்ச்சிகான பணிகள் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

திருப்பணி வேலைகளை சிற்பக் கலைஞர்கள் இரவுபகல் பராது மின் பிறப்பபாக்கியின் உதவியுடன் துரிதமாக செயற்படுத்தினர். இச்சந்தர்ப்பத்தில் பிரதம சிப்பாச்சாரியார் திரு. சு. மாணிக்கவாசகர் பற்றி குறிப்பிட்டேயாக வேண்டியுள்ளது. இவர் இப்பணிக்கு அமர்ப்பிக்கப்பட்டமை ஐயனாரின் பேரருள் என்றே கூறவேண்டும். பொதுவாக ஆலய பணிகளில் ஈடுப்படும் சிற்பவல்லுனர்கள் பிறவிகள் எடுத்து பூவுலகுக்கு வருவதில்லை நேரடியாகவே இறைவனால் இங்கு அனுப்பப்படுகின்றனர். என்ற கருத்து அறிஞர்கள் மத்தியில் நிலவுகின்றது. இத்தகையதொரு சிறப்புபெற்றவர்தான் கலைஞர் திரு. சு. மாணிக்கவாசகர் என்றால் மிகையாகாது. இவர் காலம் நேரம் பாராது பக்தி சிரத்தையோடு ஆற்றிய கருமங்களை நாம் நேரடியாகவே அவதானித்திருக்கின்றோம். இவருக்கு ஐயனாரின் பேரருள் என்றென்றும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இப்பெரும் பணியை செய்யும் சிற்பிகளில் மூவர் எம்பெருமான் ஐயப்பனின் பக்தர்கள். இவர்கள் இக்காலப்பகுதியில் எம்பெருமானை வழங்குதலும் சவரிமலை ஐயப்பனை வணங்குதலும், பக்கிபாமாலைகளை பாடுதலும், ஐயனாரின் ஓர் அவதாரமான சபரிமலை ஐயப்பனைக்கூட தரிசித்து வந்தார்கள். அரிகர புத்திர ஐயனாரின் அருட்கடாட்சத்தால் இக் காலத்தில் திருப்பணி சபையினரால் ஒன்பது கூட்டங்களும் அடியார்கள் பங்குபற்றிய சிரமதானங்களும் நடைபெற்றது.

செயல் இலக்கு காலத்திலேயே 12.06.2013 கும்பாபிஷேகம் நடைபெற இறையருள் கைக்கூடியது. இப்பெரும்பணியை நிறைவு செய்த சிற்ப கலைஞர்களுக்கும், இக் கும்பாபிஷேகத்தை நடாத்திய அந்தணப் பெரும்மக்களுக்கும் இப்பெரும் நிகழ்வு நடைபெற உதவி புரிந்தவர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கியவர்களுக்கும் ஐயனாரின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுகின்றோம்.

திருப்பணியின் மகிமை

திரு. பொ. ஜெகதீஸ்வரன்
தலைவர், திருப்பணிச் சபை

எமது அன்பிற்குரிய அண்ணன் தலைவர் திரு. பொ. பஞ்சலிங்கம் அவர்கள் குறிப்பிடுவது போல ஆலயங்கள் சிறப்புற அமைத்து மக்கள் பணிக்கு ஏற்புடையதாக இருக்கும் பொழுது மக்கள் அச்சமின்றி குடியிருக்கமுடியும். எங்கள் ஊர் மீண்டும் புத்துயிர் பெற்று மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக அமையவேண்டுமானால் ஆலயங்கள், பொது நிறுவனங்கள் புனரமைக்கப்பட வேண்டும். என்ற எண்ணக்கருவுக்கு இயைவாக புலத்தில் வாழும் நாமும் செயற்பட வேண்டும் என்பதில் எமக்குள் ஒருமித்த கருத்து நிலவுகின்றது. இதன் பொருட்டு கடந்த 2010–2011 ம் ஆண்டு சோளாவத்தை ஞானவைரவர் ஆலயத்தை புனரமைத்து திருக்குடமுழுக்குப் பெருவிழா செய்வதற்கு திருவருள் கைக்கூடியிருக்கிறது.

தற்போதைய நிர்வாக சபையின் முனைப்பு

கடந்த வருடம் திருப்பொலி கட்டுவன்வான் ஐயனார் ஆலய அறங்காவற் சபையினர் பிரான்சில் வதியும் திரு.செ.கந்தசாமி அவர்களின் ஆலோசனையுடன் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மணிக்கூட்டுக்கோபுரம், வசந்தமண்டபம் என்பவற்றை புதுப்பொழிவுடன் மெருகூட்டி அமைக்கும் கைங்கரியமும், மண்டப முகப்பு கொட்டகை அமைக்க தீர்மானித்திருந்தனர்.

மூலஸ்தானத்தை கருங்கல்லால் நிர்மாணிப்பதற்கான எண்ணக்கரு உருவாக்கம்.

பல நூற்றாண்டு காலம் மூலஸ்தானம் புதிதாக நிர்மாணிக்கப்படாமல் பல காலமாக மெருகூட்டப்பட்டே வந்துள்ளது. இதனால் ஐயனார் அடியார் எல்லோர் மனதிலும் மூலஸ்தானம் புதிதாக அமைக்கப்பட வேண்டுமென்ற ஆவல் இருந்த போதும் அதற்கான சூழலோ, திருவருளோ எட்டாமலே போய் கொண்டிருந்தது.

கடந்த வருடம் திரு.சி.தயாபரன் அவர்கள் லண்டன் சென்றிருந்த போது அங்கு பிரான்சிலிருந்து வருகை தந்திருந்த திரு.செ.கந்தசாமி அவர்களும்,

மற்றும் திரு.த. வாசகன், திரு.தே.மகேஸ்வரன் ஆகியோரது சந்திப்பின்போது எமது ஐயனார் ஆலயத்தின் திருப்பணி தொடர்பாக கலந்துரையாடுவதற்கு திருவருள் கூடியிருந்தது. அந்த சந்தர்ப்பத்திலேயேதான் திரு.சி.தயாபரன் அவர்கள் மூலஸ்தானத்தை கருங்கல்லால் கட்டுவதற்கான ஆலோசனையை முன்வைத்தார்.

இத்திருப்பணிக்கான செலவு மதிப்பீடு அண்ணளவாக ரூபா 3.5 மில்லியன் என தெரிவிக்கப்பட்டபோது அந்நிதியினை எப்படியாவது திரட்டிவிடலாம் என்ற மனவுறுதி எல்லோர் மனதிலும் இறையருளால் ஏற்ப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக திரு. சி. தயாபரன் அவர்கள் அறங்காவல் சபையுடன் கலந்துரையாட வேண்டுமென்று அச்சந்தர்ப்பத்தில் கேட்டு கொள்ளப்பட்டதுடன் அதற்கான நிதி சேகரிப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன்பொருட்டு திரு. சு. பாஸ்கரன், திரு.கு பிரதீபன், திரு.சி. கண்ணதாசன் ஆகியோரை சந்தித்து அவர்களின் மனமுகர்ந்த ஆதரவுடன் நிதி சேகரிப்பு பணி ஆரம்பமாகியது.

கலந்துரையாடல் (18.03.2012 மாலை 3.00மணி)

யாழ்ப்பாணத்தில் திரு.க.இரசலிங்கம் அவர்களின் இல்லத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின்போது மூலஸ்தானத்தை கருங்கல்லால் ஸ்தாபிப்பதில் உள்ள சாதக பாதகமான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டது. அறங்காவற் சபையின் சார்பில் ஏலவே தீர்மானிக்கப்பட்டபடி மூலஸ்தானத்தையும் ஏனைய மண்டபங்களையும் மெருகூட்டுவதோடு முன்கொட்டகையை பூரணப்படுத்தி கும்பாபிஷேகத்தை நடத்துவதே தற்போதைய சூழ்நிலையில் சாலச் சிறந்தது என்ற கருத்து உறுதியாக இருந்ததோடு மூலஸ்தானத்தை கருங்கல்லால் ஸ்தாபிப்பதில் உள்ள சிரமங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவையாவன :

01. தண்ணீர்ப் பிரச்சினை
ஆலய சூழலில் குடிநீர்உட்பட திருப்பணிவேலைக்கான தண்ணீரும் பற்றாக்குறை அல்லது இல்லையென்ற நிலை

02. நிதிப் பிரச்சினை
இவ்வளவு பெருந்தொகையான நிதி சேகரிப்பது இலகுவான காரியமல்ல என்றும் நிதிமுழுவதும் சேகரித்தபின்பே திருப்பணிவேலைகளை ஆரம்பிப்பதே பொருத்தமானதாக இருக்குமென்ற நிலைப்பாடு

03. மின்சாரம் இல்லை
கருங்கல் வேலைகளுக்கு மின்சாரத்தின் உபயோகம் மிக அவசிமானது. ஆலயத்திற்கான மின் இணைப்பு முற்றுமுழுதாக அற்றுப்போயிருந்ததால் ஆலய முன்றலில் வைத்து கருங்கல் வேலைசெய்வது இயலாத காரியம்.

04. பாதுகாப்பு இன்மை
ஆலய அயலில் (குடிகள் இல்லை) உபகரணம் மற்றும் பொருட்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்தமுடியாது.

05. திருப்பணிகள் பங்குப்பற்றுவது

தற்போதைய சூழலில் பெரும்பாலோர் என்று கூறுவதைவிட எல்லோருமே ஊருக்கு வெளியே வசித்து தொழில் செய்துகொண்டிருப்பவர்கள். ஆதலால் அத்திருப்பணி வேலைகளில் கிரமமாக பங்குப்பற்றுவது மிகவும் கடினமான காரியம்.

இப்படியான சிரமங்களுக்கு மத்தியில் எப்படி இப்பெருந்திருப்பணியை நிறைவேற்றலாம் என்ற வினா எல்லோர் உள்ளத்திலும் எழுவது இயல்பானது. இந்த சந்தர்ப்பத்திலே தான் திருவருள் சக்தியின் மகிமையை வியந்தேயாக வேண்டியுள்ளது. எல்லோருக்கும் வேலைப்பளுவும் வேறுபல சிரமங்களும் இருந்த போதிலும் திருப்பணிச்சபை ஒன்றை உருவாக்குவதற்கும் அதன் உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டது. இத்திருப்பணியில் கூடுமானவரை அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிவர்களை தாமாகவே இணையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அப்படி கேட்க்கப்பட்ட போதும் சாதகமான பதில் கிடைக்கவில்லை இச்சந்தர்ப்பத்தில் அங்கிருந்த சிலரால் பின்வருவோர் இத்திருப்பணிச்சபைக்கு அனுபவங்களும், ஆற்றல்களும் பெற்றுள்ளவர்கள் எனக்குறிபிடப்பட்டு இவர்கள் மனமுகர்ந்து இத்திருப்பணியை பொறுப்பேற்கவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. பிரஸ்தாபிக்கப்பட்டவர்கள் திரு.பொ.ஜெகதீஸ்வரன், திரு.சுமகேந்திரன், திரு.வ. நாவேந்தன், திரு.பா. முகிலன்

நிதி உதவி

திரு.செ.கந்தசாமி அவர்கள் திருப்பணிச்சபை அங்குரார்ப்பணம் செய்த நாளிலிருந்து இன்று வரை எந்நேரமும் எம்மோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனைகளை வழங்கியும், எல்லோரையும் தொடர்புபடுத்தும் ஊடகமாக விளங்கியும், சதா காலமும் ஐயனாரின் திருப்பணியை சிந்தித்த வண்ணம் சர்வதேகம் எங்கும் வாழும் எம் ஊரவர்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் நிதி வழங்க உந்து சக்தியாக விளங்கியும் ஆற்றிய பணிகள் என்றென்றும் எம் மனதில் நிலைத்திருக்கும்.

எமது ஆலயத்தில் ஸ்தாபகர் பரம்பரையை சேர்ந்த திரு.கெ. பாலகுமாரன், மற்றும் திரு.தி.திருஞானசேகரன் மற்றும் திரு.ம.திருமாறன் ஆகியோர் பிரான்ஸ் மண்ணிலிருந்து ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாத கருங்கோவிலாக நிலைத்திருக்கும்.

மேலும் கனடாவில் தலைவராக திரு.பொ.பஞ்சலிங்கமும் செயலாளராக திரு. த.சௌந்தராஜனையும், பொருளாரராக திரு.ச.விக்னேஸ்வரனையும் கொண்டு இயங்கிவரும் ஆத்திசூடி ஒன்றியம் எமது இத்திருப்பணிக்கு அளவிடக்கறிய

அரும்பணி ஆற்றியது. இவர்களின் அற்பணிப்புடனான பணி எமது திருப்பணி வேலைகளை தொடர்ந்து இலகுவாக செய்வதற்கு ஊக்கமளித்தது. இவர்களின் ஒருங்கமைப்பினான செயற்பாடும் மற்றும் திரு. ச. விக்னேஸ்வரன் அவர்களின் ஆலோசனை வழிக்காட்டல்கள் எங்களை சோர்வில்லாமல் இயங்கவைத்தது என்பது மிகையாகது.

லண்டனில் வசிக்கும் திரு.ஆ.சீவரத்தினம் அவர்கள் இயல்பாகவே எம்மூர் ஆலயங்களின் பால் பற்றுக்கொண்டவர். சோளாவத்தை ஞானவைரவர் ஆலயத்திற்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்துகும்பாபிஷேகம் செய்வித்தது போல் இவ்வாலயத்தின் நிதி சேகரிப்பிற்காக லண்டனிலுள்ள பலரிடம் நேரிலும் தொலைபேசி மூலமும் சந்தித்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தது மாத்திரமின்றி தனது குடும்ப உறுப்பினர்களை நிதியுதவியளிக்க வைத்தும் அவர் ஆற்றிய பணி பாராட்டுக்குரியது. மற்றும் திரு.கை.திருநீலகண்டம் அவர்களின் ஆரம்பகால நிதி பங்களிப்புத்தான் ஆர்வத்தையும், செயற்பாட்டையும் மேலும் தூண்டியது எனலாம். அத்துடன் திருமதி. கந்தசாமி புவனம்மா அவர்களின் நிதியுதவி அவசர வேலைகளுக்கு எமக்கு கைகொடுத்தது. அவுஸ்ரேலியாவில் வசிக்கும் திரு. மாணிக்கவாசகர் செய்த நிதி உதவிகள்

· காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

என்ற பொய்யாமொழிக்கு சான்றாக விளங்கியது.

கொழும்பில், வவுனியாவில் வதியும் சோளாவத்தை பள்ளம்புலம் மக்களின் நிதியுதவிகளும் அவர்களின் ஈடுபாடுகளும் எங்களுக்கு ஆரோக்கியமான பலனைத் தந்தது. ஊரில் வாழும் மக்களின் சிரமதான பணிகளும், அக்கறைகளும் அவர்களின் அருட்கிடாட்சத்துக்கு ஆளாகியுள்ளமையை வெளிப்படுத்திக் காட்டியுள்ளது.

இத்திருப்பணியை நிறைவேற்ற ஊன்டுகோலாக இருந்து செயலாற்றிய திரு.சி. தயாபரன் அவர்களுக்கும் மற்றும் கும்பாபிஷேக மலரை சிறப்பாக வெளியிட்டு தந்த விகடன் அச்சகத்தாருக்கும் ஐயனாரின் அருட்கடாட்சம் கிட்டுவதாக.

பூரணை புஷ்கலை சமேத அரிகர புத்திர ஐயனாரே சரணம்

சரவணை கிழக்கு மயிலப்புலம் திருப்பொலி கட்டுவன்வான்,
அருள்மிகு ஐயனார் திருக்கோயில் ***ஆலய அறங்காவற் சபை,***

சீரிலங்கை வடபால் திகழும் சப்த தீவுகளுக்கும் தலையாக மிளிர்வது வேலணை வரலாற்றுச் சிறப்பும், இலக்கிய பின்னணியும், ஆன்மீக வளர்ச்சியும் நிறைந்த இத்தீவினிலே, சரணடைந்தோரை சடுதியில் காக்கும் தெய்வமாக அருள்புரிபவர் சரவணை மயிலப்புலம் திருப்பொலி கட்டுவன்வான் அருள்மிகு ஐயனார். சிந்தனையும் வந்தனையும் எங்குளதோ அங்கு செந்துருவாய் அமர்ந்து வேண்டும் வரத்தை சிந்தாமல் சிதறாமல் பூரணை புஷ்கலை சமேதராக அள்ளி வழங்கும் எம்பெருமானின் ஆலயம் மிக நீண்ட வரலாற்றுப் பெருமை கொண்டது.

1976 – 1978 காலப்பகுதியில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1990களிலே போர் மையம் கொண்ட வேளை ஊரிழந்து. உறவிழந்து உடமைகள் அனைத்தும் இழந்து, ஏதிலிகளாக உயிரைக்காப்பாற்றும் ஒரே நோக்கோடு "ஆலடியானே அனைத்தையும் நீயே பார் எங்களைக்காப்பாற்று" என்று பொறுப்பளித்து கும்பிடவே மக்களில்லாக் குறையோடு எம்பெருமானைத் தனியே தவிக்க விட்டு பிரியமனமின்றி அனைவரும் வெளியேறினோம்.

அங்கும் இங்கும் அல்லல்பட்டு மீண்டும் 1997– 1998 ஆண்டளவில் புதரோடும் முள்ளோடும் போராடும் எம் பிறந்த மண்ணை அடைந்த போது வேதனையின் எல்லையை விபரிக்கவே முடியாது. மாடி மனை எமக்கு வேண்டாம். எம் இல்லங்களை மீளக்கட்டி அழகுபார்க்கும் எண்ணம் வேண்டாம் குல தெய்வமாம் உந்தன் எழில் கோலம் தான் எமக்கு வேண்டும். என்னும் ஆர்வம் மேலிட ஊர்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மீண்டும் 2000ம் ஆண்டளவிலே மறைந்த கணபதிக்குருக்களின் இளையமகன் மணி ஐயாவின் பூசைக்கிரியைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு நித்திய பூசை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

காலத்துக்கு காலம் பல அடியார்கள் நிர்வாக சபை செயற்பாட்டில் ஈடுபட்டு தம்மாலான பணிகளை ஐயனாரின் அருளினால் நிறைவேற்றி வந்தார்கள். இருந்தும் எம்பெருமான் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து, புதுமெருகூட்டி கும்பாபிஷேகம் காணும் அவா இங்கு வாழ் ஐயன் அடியவர்கள் மனதில் மட்டுமன்றி புலம்பெயர் உறவுகள் மனதிலும் ஆழப்பதிந்திருந்தது. கருங்கல் கொண்டு கர்ப்பக்கிரகம் அமைக்க எல்லோர் மனதிலும் மிகுந்த ஆசை.

ஆனரவம் அற்ற மண்ணிலே மனிதவளம் குறைந்த நிலையிலே இது சாத்தியப்படுமா என அங்கலாய்த்த போது மூலஸ்தான வேலை கட்டாயம்

புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக ஆலய அறங்காவல் சபையினரும் அடியவர்களும் ஒன்றிணைந்தனர் "பாலஸ்தாபனம் செய்யுங்கள் மிகுதியை நானே நடாத்திச்செல்வேன்" என்னும் அருள்கட்டளை ஐயனாரிடம் இருந்து கிடைத்ததும். 30.04.2012 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அனைவரினதும் உள்ளத்திலும் ஒரே சமயத்திலே உட்புகுந்தார் ஐயனார். அனைத்து அடியார்களின் வேட்கை தணிக்க, தன்னை அழகுபடுத்திக் காண ஐயனாரும் உளங்கொண்டார். இதன் பிரகாரம் கருங்கல் கொண்டு கர்ப்பக்கிரகம் அமைக்கும் அவாவுடன் திருப்பணிச்சபை ஒன்று உருவாகியது.

ஆளில்லா ஊரிலே ஆலயம் எதற்கு என்று கேட்போரின் மத்தியிலே தடங்கல் எதுவுமின்றி துரித கதியிலே கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், மணிக்கூட்டுக்கோபுரம் என்பன முற்று முழுதாக புதிதாய் அமைத்திட எம்பெருமான் திருவருள் கை கூடியது. இது திருப்பணிச்சபையினரின் அயராத உழைப்பும் ஐயனின் திருவருள் கடாட்சமுமே எம்பெருமான் தேவியர் சகிதம் அருள்பாலிக்கும் இக்காட்சி என்னே அற்புதம் ஆனந்தம்

இப்புனித கைங்கரியத்திலே வேண்டும் போதெல்லாம் வாரி வழங்கிய வள்ளல்கள் முழுமையாக தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்ட திருப்பணிச்சபையினர் புலம் பெயர் உறவுகள், நிர்வாக சபை உறுப்பினர்கள் இந்த நிர்மாண வேலைகளை திறம்பட செய்து முடித்த ஸ்தபதிகள், சிற்பாச்சாரியார்கள் அனைவரும் நன்றியுடனும் பாராட்டுக்களுடனும் நோக்கற்படத்தக்கவர்களே. எம்பெருமானின் கும்பாபிஷேக கிரியைகளைத் திறம்பட நடாத்தும் அந்தணச் சிவாச்சாரியார்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு எம் ஐயனாரின் பேரானந்த திருவருள் அனைவரையும் சென்றடைய ஆலடியான் முன்னே இருகரம் கூப்பி ஆனந்த கூத்தாடி தொழுவோம் நாம் ஒன்றிணைந்தே.

மகா கும்பாபிஷேகம் உலக அமைதிக்கு வழிகாட்ட பிரார்த்திப்போம்!

தர்மகர்த்தா மரபினர் குருகுல குருமார் மரபு சார்பாக
உ.ம.சு.வே. கெங்காதரம்பிள்ளை குடும்பத்தினரும் உறவுகளும்

சரவணை மயிலப்புலம் கட்டுவன்வான் ஐயனார் கோயில் 1990ம் ஆண்டின் பின்னர் புணரமைப்பு ஏற்று பணிகள் மக்கள் மயமாகி சேவைகள் விரிவாக்குதல் அவசியமாகும். ஊர்காவற்றுறை கோயில் பற்று சரவணை இறை கட்டுவன்வான் ஐயனார் கோயில் வெள்ளைப்புற்றடி விநாயகர் வழபாட்டுடன் தில்லைமேடை சிவனருளால் தோற்றம் பெற்றது.

நாட்டுக்கோட்டை நகரத்தார் வரவு சிவன் கோயில் புணரமைப்புகளுக்கு காரணமாகியது. வாக்கிய பஞ்சாங்க மரபு சிவனடியார்களதும் மக்கள் எழுச்சிக்கும் காலப் பதிவாக்கியது. அரசர்கால நிகழ்வுகள் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிகளினால் வளமாகியது, விரிவுபட்டு வருகின்றது.

திருமுறைகளும், திருப்புகழ் பாடல் பெற்ற தலங்களது தலயாத்திரைகளுக்கும் தீவுப்பகுதி மக்களது தர்மகர்த்தா மரபினரும், குருகுலகுருமாரும் வழிகாட்டினார்கள்.

இதற்கு உ.ம.சு. வேலுப்பிள்ளையின் பரந்த பணிகள் ஐயனார் திருவருளினால் கோயிலார்கள் விழிப்புணர்வு பெற்றார்கள் திருமண உறவுகள் மூலம் தேசிய ரீதியாக வழிகாட்டினார்கள். இதனால் எமது கிராமம் விவசாயம், வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பாக, கடல்,தரை வழிச்சிறப்புக்கள் அமைவுற்றன.

1956ம் ஆண்டிற்கு முன்னர் வேலணை சரவணை அராலித்துறையும் வாணிபன் துறையும் சிறப்பிடம் பெற்றிருந்தன. 1956ன் பின்னர் பண்ணை தாம்போதி நிர்ணயம் இடம்பெற்றது. சுதந்திரத்தின் பின்னர் கோயில்களின் பரிபாலனம் பஞ்சாய முறைகளில் மாற்றம் பெற்றன. இதன்படி 1964ம் ஆண்டு எமது தந்தையாரினால் பிரசித்தி நொத்தாரிசு நடராசா முன்பாக சைவபரிபாலன சபையினர் முகதாவில் தருமசாதனம் வெளிப்படுத்தப்பட்டது.

ஐரோப்பியர் கால பாதிப்புகள் விடுபட இந்துசமய நிறுவனங்கள் சிவனடியார்கள் பரவலாக பல தெய்வ வழிபாடுகளை உருவாக்கினார்கள். இதற்கு இந்து–பௌத்த நல்லுறவும் விவசாய வர்த்தக தொடர்புகளும் வழிகாட்டியமை தனித்துவமாகும். இதில் இஸ்லாமியர்களது பங்களிப்பும் வளமாகியது. சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட தவறுகள் விலக்கப்பட்டு தேசிய சமாதானமும் உலக அமைதியும் ஏற்பட மகா கும்பாபிஷேகம் வழிகாட்ட தொடர்ந்து பிரார்த்திப்போமாக!

ஆலய புனரமைப்பின் அவசியம்

ஐ. பொ. பஞ்சலிங்கம்
தலைவர், ஆத்திகுடி ஒன்றியம் – கனடா.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கேற்ப ஆலயங்கள் சிறப்புற அமைத்து மக்கள் பணிக்கு ஏற்புடையதாக இருக்கும் பொழுதே, மக்கள் அச்சமின்றிக் குடியிருக்க முடியும். எங்கள் ஊர் மீண்டும் புத்துயிர் பெற்று மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக அமைய வேண்டுமானால் ஆலயங்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் புனரமைக்கப்பட வேண்டும். ஊரில் உள்ள இயற்கை வளங்களை அழிய விடாமல் பேணுதலிலும் கவனம் செலுத்த வேண்டும். புலம் பெயர்ந்த மக்களினால் முன்னெடுக்கப்படும் உட்கட்டுமான அபிவிருத்திப்பணிகளால் எமது ஊர் புதுப்பொலிவு பெற்றுத் திகழும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இருநூற்றாண்டுகளுக்கு மேலான வரலாற்றுப் பெருமையைக் கொண்ட இவ்வாலயம் மிக ரம்மியமான சூழலில் அமைந்துள்ளது. ஆலயத்திற்கு வட புலத்தில் சிறுபற்றைகள் நிறைந்துபரவும் அதனைத்தொடர்ந்து பரந்த புற்தரை கொண்ட பெரு வெளியும் உள இவை இக்கிராமக்களின் ஆடு, மாட்டு மந்தைகளுக்கு உணவிற்கும் மேச்சல் நிலமாக பயன்படுகின்றன.

மேற்குப்புறமாக கடும் உழைப்பாளிகளான எமது கிராமமக்களின் வாழ்வாதாரத்திற்குப் பெரும் பங்களிக்கும் புகையிலை, மிளகாய் போன்ற பணப்பயிர்கள் பயிரிடப்பட்டு தோட்ட நிலங்களும் தென்புறத்தில் எமது கிராமத்தின் உணவுக்களஞ்சியமான வளமான நெல்வயல்களும் கிழக்கே சற்றுத்தூரம் சிறு புதர் நிரம்பிய பகுதியும் அதனைத் தொடர்ந்து குடியிருப்புக்களும் அமைந்துள்ளன. ஆலய முற்றலில் நின்ற பரந்த ஆலமரம் கடும் வெய்யில் நேரங்களில் மந்தைகளும், தோட்டங்களில் உழைத்து களைப்படைந்த மக்களும் இளைப்பாற தண் நிழல் வழங்கி வந்தது.

ஆலயத்தின் தென் புறத்தில் ஆலய பூசகரின் வீடும் அமைந்திருந்தது. ஆரம்ப காலத்தில் செல்லையாக்குருக்கள் என்றும் அந்தணர் ஆலய பூசைகள், விழாக்களை நடாத்தி வந்ததாக கூறப்படுகிறது. அவருக்குப் பின்னர் அன்னாரின் புதல்வரான கணபதிக் குருக்கள் ஆலயக்கடமைகளை ஏற்று, விதிமுறைகளை இம்மியும் வழுவாது மிகப்பற்றுறுதியுடன் புரிந்து வந்தமையால் ஊர்மக்களின் பக்திக்கும் மரியாதைக்கும் பாத்திரமானவராக விளங்கினார்.

ஆலயத்தில் சித்திரைப் பூரணை தினத்தில் சித்திர புத்திரனர் கதை படித்தல் களஞ்சிவார்த்தல் நிகழ்வும், அலங்காரத் திருவிழாக்களும் மற்றும் விசேட பூசைகளும் ஊர்மக்களின் முழுமையான பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்று வந்தன.

எனது சிறுபராயம் தொடக்கம் வாலிபப்பருவம் வரை நானும் இந்நிகழ்வுகளில் ஆர்வமுடன் கலந்து ஆனந்தமடைந்துள்ளேன் உற்சவகாலங்களில் இரவுத் திருவிழாக்களில் எனது தந்தையாரின் சமயச் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு மக்கள் ஆர்வமுடன் கூடுவர். வேட்டைத் திருவிழாவின் போது ஐயனார் குதிரை வாகனத்தில் ஆரோகணித்து வேட்டைக்குப் புறப்படும்போது ஊரே ஆனந்தத்தால் ஆர்ப்பரிக்கும். நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக சொந்த ஊரைவிட்டு பின் எம் நாட்டையே விட்டு வெளியேறி அந்நிய தேசத்தில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்ற போதும் இன்றும் உள்ளத்தால் எம் ஊரிலேயே வாழ்கின்றோம்.

போர் காரணமாக எம் நாட்டுக்குள்ளேயே இடம் பெயர்ந்திருந்த மக்கள் போர் முடிவடைந்த இன்றைய நிலையில் மீண்டும் ஊர்திரும்பி வெறிச்சோடி சீரழிந்து போயிருந்த எமது கிராமத்தை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மீள் நிர்மானம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவ்வகையில் அவர்கள் ஆலயங்களின் புனருத்தாரணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந் நற்பணியில் வெளிநாடுகளில் வதியும் நாமும் எம்மால் இயன்றவரை உதவி வருகின்றோம். கனடா தேசத்தில் வாழும் சோளாவத்தை கிராமத்தைச்சேர்ந்த நாம் ஆத்திசூடி ஒன்றியம் என்னும் நாமத்தில் ஓர் அமைப்பை உருவாக்கி அதனூடாக எமது கிராமத்தின் முக்கிய தேவைகளுக்கு எம்மாலானவரை உதவி வருகிறோம்.

அந்த வகையில் இவ்வாலயத்தின் திருப்பணிக்கும் திருக்குடமுழுக்குப் பெருவிழாவிற்கும் கனடா ஆத்திசூடி ஒன்றியமும் தனது பங்களிப்பை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமை நாம் செய்த பாக்கியமாகும். ஆலயம் மீண்டும் திருப்பொலிவு பெற்று பூசைகள், விழாக்கள் காலந்தவறாது கிரமமாக நடைபெற்று எமது கிராமம் மீண்டும் எழுச்சிபெற இறையருள் பாலிக்க வேண்டுமென மயிலை ஹரிஹரபுத்திரரின் பொற்பாதங்களை இறுகப்பற்றி இறைஞ்சுவதோடு ஆலயபுனருத்தாணத்திற்கும், குடமுழுக்குப் பெருவிழாவிற்கும், இச்சிறப்பு மலரை ஆக்கி வெளியிடுவதற்கும் பங்களிப்பு நல்கிய அனைவருக்கும் அருளாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். திருகுடமுழுக்கு விழா சிறப்புற நடந்தேற எமது மனமாரந்த வாழ்த்துக்கள்.

வரகு மான்மியம் (புனைவுக் கட்டுரை)

ஆசி கந்தராஜா
(நன்றி : ஞானம்)

கோயில் குருக்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக மனைவி சொன்னாள். கோயில் கும்பாபிஷேகத்துக்கு வரகு வேணுமாம்! "வரகுக்கு இங்கிலிசிலை என்ன பெயரெண்டும் ஐயர் கேட்டவர்...., கோயில்விஷயமப்பா...., சாட்டுச் சொல்லித் தப்பாமல் எடுத்துக் குடுங்கோ..." மனைவியின் குரலில் கட்டளையின் தொனி இருந்தது. கோயில் குத்தம், குடும்பத்துக்கு கேடு வரும் என்ற பயம் அவளுக்கு. விவசாய பேராசிரியரான ஒருவர் வரகு எங்கே கிடைக்கும்....? என்ற தகவல் உட்பட, விவசாயம் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களிலும் சகலகலா வல்லவனாக இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு அவுஸ்ரேலியாவிலே கோயில் மணியோசை எழுப்பும் குருக்களுக்கு!

கோயில் கோபுரத்தின் உச்சியிலே அதன் உயரத்துக்கும் அகலத்துக்கும் ஏற்றவாறு ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று... என ஒன்றை இலக்க எண்ணிக்கையில் கலசங்கள் உண்டு. கலசங்களுள் வரகு, நெல்லு, சாமை, குரக்கன், போன்ற தானியங்கள் கும்பாபிஷேகத்தின் போது நிரப்பப்படும். சில கோயில்களில் வரகை மாத்திரம் எல்லாக் கலசங்களிலும் நிரப்புவார்கள் இடியையும் மின்னலையும் தாங்கும் சக்தி வரகுக்கு உண்டென்றும், அது ஒரு இடித்தாங்கியாக செயற்படுமென்றும் இதற்கு காரணம் சொல்லப்படுவதும் உண்டு. இது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கோபுர கலசங்களிலுள்ள தானியங்கள், பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும். கும்பாபிஷேகத்தின் போது மாற்றப்பட்டு, புதிய தானியங்கள் நிரப்பப்படும் மரபினைக் கோயில் குருக்களும் உறுதி செய்தார்.

இந்தியாவிலுள்ள பிரபலமான கோவிலொன்றின் கும்பாபிஷேகத்துக்கு விவசாய துறைப் பேராசிரியர் ஒருவருடன் கடந்த ஆண்டில் சென்றிருந்தேன். அந்த கோயிலின் கட்டிட அமைப்பு பன்னிரண்டாம் நூற்றாண்டின் தமிழ்க் கட்டக் கலை சார்ந்தது என்று சொன்னார்கள். சரியான தகவல் தெரியவில்லை. பேராசிரியரின் தந்தை அந்தக்காலத்தில் இந்தியத் திரைப்பட விநியோகஸ்தராய்க் கொழும்பில் வாழ்ந்தவர். தனது பட்டப்படிப்பை பேராசிரிய நண்பன் இலங்கையில் மேற்கொண்டபோது யாழ்ப்பாணத்துப் பெண்ணைக் காதலித்து திருமணம் செய்தவர். இந்த உறவின் காரணமாக எங்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டிருக்கலாம். பேராசிரியர் பணிபுரியும் பல்கலைக் கழக உபயத்தில், அவரே தர்ப்பை அணிந்து கும்பாபிஷேகத்துக்கு தலைமை ஏற்றதால், கோபுரத்தின் உச்சிக்குச் செல்லும் சந்தர்ப்பம் வாய்த்தது.

பதின்மூன்று பாரிய கலசங்களிலிருந்த பல்வேறு வகையான தானியங்களை மற்றும் சடங்குகள் அங்கே நடந்தன. பின்னர் நடுவிலுள்ள பெரிய கலசத்தில் வரகை மாத்திரம் நிரப்பினார்கள். இரண்டு கலசங்களிலே ஒரு தானியம் என்கிற கணக்கில் மற்றைய கலசங்களில் ஆறு தானியங்கள் நிரப்பப்பட்டன.

"வரகு இடிதாங்கியாக செயற்படுவதாகச் சொல்கிறார்களே உண்மையா...?" என்று என் சந்தேகத்தைப் பேராசிரியரிடம் கேட்டேன். சொல்லதுண்டு. இதில் இருக்கும் உண்மைத்தன்மை ஆராய்ச்சிக் குரியது. தானியங்களை நிரப்புவதன் உண்மைக் காரணம் அதுவல்ல. இது Germplasam conservation எனப்படும் பரம்பரை அலகுகளைப் பாதுகாக்க, சைவத் தமிழர்களான நமது மூதாதையர் செயற்படுத்திய நடைமுறை என்பது ஐதீகம். முற்று முழுதாக விதைகளை நம்பியே பண்டையகாலங்களில் விவசாயம் நடந்தன. விவசாயத்தில் விதைகளின் வாழுமையும் (viability) வீரியமும் முக்கியமானது. இதனால் விதைகளின் "முளைக்கும் திறனை" நீடிக்க நம்முன்னோர் சில முன்னேற்பாடுகளைச் செய்திருக்கலாம். நீங்கள் தான் பரம்பரை அலகுகளைப் பாதுகாக்கும் தொழில் நுட்பத்தில், நிபுணராச்சே! கலசங்களுள் இருந்தெடுத்த பழைய தானியங்களின் "முளைக்கும் திறனை" எனது ஆய்வுகூடத்தில் சோதித்துப்பாருங்களேன், உண்மை தெரிந்துவிடும் என்றார் நண்பர்.

அநேகமான விதைகளுக்கு அதன் முளைக்கும் திறன், ஓர் ஆண்டுகாலம் மட்டுமே நிலைத்திருக்கும். முதல் வருடத்திலிருந்த வீரியம் அடுத்த வருடத்திலிருக்காது. மாங்கொட்டையின் முளைக்கும் திறன் மூன்று மாதங்கள் மட்டுமே. விளா, விம்பம், கருவேப்பிலை, தோடை, எலுமிச்சை, நாரத்தை ஆகியன ஒரே குடும்பத் தாவரங்கள். இவற்றின் விதைகளைப் பழத்திலிருந்து பிரித்த ஒரு சில வாரங்களுக்குள் விதைக்க வேண்டும்.

இவற்றை விஞ்ஞான யுகத்தில் மழை, வெள்ளம், புயல், இடி போன்வற்றினால் ஏற்படும் இயற்கை அழிவுகளினாலோ, யுத்தங்களினாலோ, அல்லது நோய்களினாலோ, பயிர்கள் அனைத்தும் அழிந்துபோனால் பரம்பரை அலகுகளைப் பாதுகாக்கும் நிலையங்களிலிருந்து (Germplasam bank) விதைகளையோ தாவரங்களையோ பெற்று விவசாயத்தைத் தொடரமுடியும். இதற்கு இப்போது பல நவீன தொழிநுட்பங்கள் உள்ளன. பரம்பரை அலகுகளைப் பாதுகாக்கும் வங்கியில் விதைகளாகவோ, கலங்களாகவோ, (cells) அல்லது இழையங்களாகவோ (Tissue) இவை பாதுகாக்கப்படுகின்றன. திரவ நைதரசனில் −180 பாகை சதமளவு உறைநிலையில், இவற்றைப் பலநூறு வருடங்களுக்கு சேதமுமின்றிப் பாதுகாக்கும் முறையும் பயிற்சியில் உள்ளது. கலசங்களிலிருந்து சேகரித்த தானியங்களுடன்,

AIYANAAR

(Truths and Views of Aiyanaar in Internets)

Ayyanar (Tamil:அய்யனார் or ஐயனார்) is a regional Tamil male deity who is popular among the rural social groups of South India, speci y Tamil Nadu. In the old Tamil literature he is mentioned as Sathanar and in Vedic stories, Ayyanar is considered as one of the several local manifestations of Sastha. The deity is also popular among vast majority of South Indian & Sri Lankan (read Dravidian) Hindus and some Buddhists in Sri Lanka. He, along with his two female consort deities, is the central deity surrounded by 21 associate folk deities identi as the Kaval Deivam (guardian angel). Ayyanar temples are found in almost every minority Tamil village in Sri Lanka.

Ancient Tradition

In ancient Tamilakam, people venerated the Veerargal and had the formless stones (Veera Kal or Veerakkal) erected in memory of these fallen warriors or any person who sacri his life for a good cause such as protection of welfare of the society or community. The Veera kal that have fully morphed into culticshrines can be found across South India and especially Tamil Nadu.

This has slowly transformed into the Ayyan or Saathan (Tamil for Sanskrit sasthan) worship system with a symbolic horse riding along with the venerated departed soul. Later transformed into the Vedic phase, Ayyanar has beendepicted with two consorts - Poorna and Pushkala. Ayyanar is believed to protect the poor and ensure justice and self-discipline among its believers. Thus there are several local manifestations of Ayyanar along with two consorts in several villages near thick forests and water reservoirs each having its own folk tale.

The unique and inspiring popularity of the system is that the Ayyanar worship system provides an opportunity to its mass followers to trace their place of origin, ancestral roots, native culture and character and clan lineage even after several generations. Such family clan followers of Ayyanar worship system install new Ayyanar worship centres in sacred groves (called as Sastha kavu in Kerala and Kanyakumari districts and vanams or paimbozhil in Tamilnadu) in new locations with the permission obtained from the native Ayyanardeity through an oracle system during the Annual mass conventions.

Worship

Large sculpture of Ayyanar riding a horse at a village shrine. Ramanathapuram District, Tamil NaduAyyanar or Sathanar worship is a very ancient ancestral clan-based worship system linked to nature and fertility worship. The festivals of Ayyanars are celebrated in Sacred Groves during spring season by all the related clan. Ayyanar shrines are usually located at the peripheries or boundaries of rural villages and the deity is seen riding a horse with a sword. Weapons such as a trident

or a lance are also associated with the shrine. Most of priests are non-Brahmins and derive from local lineages that had initiated the cult centers generations ago.

The worship pattern is non-agamic and is associated with sacri offerings of pure vegetarian food. However animals such as chicken and goats are offered to few of the selected 21 associate deities (Kaval deivangal) such as Karuppa samy, Sudalai Maadan samy and some other Amman deities located within Ayyanar temple for favors. In return the local priest might offer holy wers or Veeputhi (holy ash) to the worshippers. Folk Tales like Koothhu and Folk arts like Villupattu are enacted to bring out the message of the Ayyanar folk story to one and all.

In South India, Aiyanar God worshipped in open grounds surrounded by trees holds an important position in the local villages because of the values installed in family and community life. Aiyanar System is the base for forming large family clan associations and maintaining family values in rural areas.

Aiyanar worship represents a non-learned, non-Vedic form of worship. Often community life and family values are valued than individualist life mode. So a large number of gods at least 61 divine servant agents are present along with at least 18 to 21 associate deities. A family life or community life cannot be smooth and happy only if there is place to accept and accommodate every kind of people.

But with the divine nature, Often Aiynar is pictured riding on a white horse, hting against demons and evil gods that are threatening the village.

An Aiyanar temple, various clay e and idols re the social hierarchy which exists in the villages of Tamil Nadu. The gods are ranked according to the social and economical hierarchy in the village, and as in social life, the highest ranking gods are vegetarian, whereas the lower ranking ones are non-vegetarian. A temple is often not a building, but one or more es giving importance to each and every ancestral local god who are collections of people belonging to various community groups.

Owing to assimilation and syncretism, Sinhalese Buddhist people of Sri Lanka also venerate Ayyanar, calling him Ayyanayake.

SASTHA, AIYYANAR-AYYAPPAN

The Subject—Matter of "Ayyappa" is classi under the three major heads SASTHA (As per puranas) AYYANAR (as per legends) and AYYAPPAN (as per traditional story based on Historic events)

In various puranas like SKANDAM, LALITHOPAKYANAM, BKAHMANDA PURANAM etc, it is said that Lord Hariharaputhra was born to Shiva and Mohini (Vishnu) after PALAZHI MADHANAM, which dates back to krutha yoga. Why Sastha was born of two positives Shiva & Vishnu? A Demoness MAHISHI was perpetrating attrocities in this world and in the nether worlds. She got a boon from Brahma that

slain should be killed by a child born of two positives, Hari and Hara, that too after the child's undergoing servitude to a human being for a period of 12 years. To ful the boon got by Mahishi and to destroy that evil force, Sastha was born of Shiva and Vishnu. Skandam says that Lord Sastha with His two consorts appeared before Indra and lndirani to protect them.

This appeared even before the avatar of Lord Muruga. References of Sastha appear in various Puranas and Upa-Puranas spreading over the other three yugas, including Ramayana and Mahabaratha. As the story goes, Lord Hariharaputhra was wedded to Pushkala Devi and then won the hands of Poorna subsequently. To comply with the boon of Mahishi, He took the birth of a son for servitude to a human being. He materialised himself the shape of a tiny child called "MANIKANTA" on the banks of Holy River Pambha, brought up by Pandala King, healed the deaf and dumb boy of HIS Guru, gone to the dense forests as per evil designs of His stepmother, slained Demoness Mahishi, brought leopard milk for His step-mother and took to Brahmacharya yoga at Sabari Hills.

The legendary tales on Lord Dharma Sastha of Sabhari Hills are well known, and worldwide that "He was born of Hari and Hara, manifested Himself as Manikanta on the banks of Holy River Pambha. Brought up by king of Pandalam, he brought leopard milk to cure His ailing mother.

On redemption, Mahishi requested the Lord to marry her. Lord replied: "In this Avatar as Manikanta, I'm a Brahmachari. I shall opt to marry you when no kanni Ayyappa (one who is trekking Sabari Hills for the time`) turns upto the Hills; until such time, you may join me in doing penance near my temple as Maligapurathu M a n j a M a t h a .
From the above, we can understand that the Lord is a Brahmachari as well as a wed. As per traditional songs, and Dhyana slokas, Lord has taken Eight Avatars and Eight Roopas.

Lord Dharma Sastha Himself designed the shrine and the image; selected the spot for the shrine; the image was, installed by Parasurama; Agasthiya Rishi initiated the Poojas there. The Hill was named after the great Tapaswini Sabari of Ramayana fame. The sanctity of the Sabari Hill would be same as Varanasi and the nearby Pampa 'River would equal another Ganges in sanctity. Those who climb the Holy 18 steps with irumudi on their heads are blessed with immortality and raised to the State of Nirvana.

SASTHA WITH HIS CONSORTS

Worshipping Lord Sastha with His consorts has been in vogue in Tamil Nadu and Kerala from time immemorial. ln countryside temples spread over Tamil Nadu, Sastha is being called "AYYANAR" with His two consorts. ln Kerela too, Sastha is worshipped with His consorts for eg. Noorani, Thirunilay, Achankoil etc. ln one of the ve Abodes of Sastha, at ARYANKAVU (near Shencottah) Sastha Thirukalyanam is being performed By TRAVANCORE DEVASWOM BOARD. With all religious rites on

the night of l0th of Dhanur Masya (prior to Mandalabhishegam day) every year, for ages past.

He has lieutenants like Karuppan, Veeran, Madurai Veeran, Kathavarayan - Bhootha Kanas, based on Shilpa Sastra, and dhyana slokas, the images of Parivara - Devathas are drawn. Some folk stories among many about Ayyanar are visualised. One based on Dhikshitha Vijayam by Appayya Dhikshithar – a Veteran Saivite Exponent, another based on Mahabaratha episode where Arjuna fought with Shiva in disguise of a Kiratha (hunter) before getting npasupathasthra. A role is played by Sastha here.

Ayyappan - a human being like ours, whose living period dates back by 950 years i.e. 1125 to 1150 A.D. in Kerala. However, so many books are written on this story by Srivaraham E. V. Pillai, Ramavaram Sri Murali (famous E Malayalam author) Dr. Sridharan Nair, author Negavalli, Devaswom Board publication, Bhavans Journal Publication on "A Pilgrimage to Sabhari" by Sri K. R.Vaidyanathan etc. No devotee seems to have attached any signi or importance that has to be given to this, to allay so many misgivings on Makara Jyothi, Vavar etc. Successors of Pandalam dynasty, Poonjar palace and some other living generation add credence to this story. Some monuments, historical Places of interest, folk songs in Malayalam put together vouch for this story, which is enumerated in detail in the page mentioned below.

Chithakoor Ayyanar (Sevuga Perumal)

Ayyanar is the main guardian deity of the villages of Tamil Nadu. Normally this imposing terracotta e is seen in the boundary of the village. Surrounding him would be the colorful terracotta war steeds. In some temples the idols of Poorna and Pushkala who are his consorts are also present. Along with him normally Goddess Karuppu (black) is also present. He is also called Kari, Purathuvan, Kadal vannan, Chathan, Poosanaikelvan, Putkalai manavalan, Masathan, Kondayuthan, Arihara kumaran etc.

Chithakoor is a small village in the Pudu kottai district of Tamil Nadu near Avudayar Kil. He presides over more than one hundred villages surrounding Chithakoor. He is called Sevuga Perumal ayyanar(Ayyanar who is a servant god).

It seems he was once upon a time the presiding deity of Singanam puri which is about 80 km from Chithakoor. One day he rode on his war steed and reached Chithakoor. He liked the pleasant environment of Chithakoor. He tied his horse near the water source of the village and went in to the village, knocked the doors of rich people and told them, " I have decided to stay near your water source. Please build a hut for me." When they refused to believe it seems he told, "Tomorrow, you go to the water source . You will my steed there. "At the strike of morn the entire village rushed to the water source and saw the statue of the horse,. Then they realized that the man who came and woke them up was indeed Ayyanar. They immediately started the job of building a hut and started collecting leaves and sticks for that purpose. It seems one stranger who was passing through the village that day , happened to take

one of those sticks. It seems he lost his eye sight as soon as he came out of the village. He ran to the water source and told Ayyanar that it was his mistake. He promised to return 1000 sticks instead of the one stick he has taken. It seems he regained his eye sight. From then onwards , the villagers realized that their Ayyaanar was a very serious God and would punish them if they do a mistake. Even to this day he is the court of last resort to all the villagers of Chithakoor. Whenever they have a problem regarding another person they go to the temple of Ayyanar , pay Rs 12.50 and lodge a complaint on either a Tuesday or Friday.. It seems their problem is immediately solved. Since people believe that the punishment of Ayyanar is terrible, they tell the truth in front of him, ask an apology if they have committed a mistake etc.
Several miraculous events are supposed to have happened the village. It seems once their water source went dry. All villagers went and complained to the Ayyanar. The Samiyadi (person in whom God has entered) entered in to a trance and asked them, "Do you want a rain or do you want your water source to be up?". It seems the villagers chose the second alternative. Next day morning their water source was full without a single drop of rain.

Chithakoor Ayyanar it seems is very particular about his dues. It seems one day, he appeared in the dream of a rich man and asked him, "Why have not the given me bath with the orange which was given by a devotee?". Next day the rich man rushed to the temple located the orange and got the sacri bath done.

The Ayyanar statue at this place has a whip in his hand. ,He is surrounded by Pooranam and Pushkalam , who are his consorts. On his right side there is a temple for Big Karuppu and Small Karuppu and surrounding the temple are Adambur Kali, Sannasi, Sidhi Vinayaga, Anjaneya, Valli etc. It seems initially Ayyanar was housed in a thatched shed. One day he appeared in the dream of a villager and wanted him to build a tiled temple for him. This was immediately carried out.The temple festival is on Chithra Pournami day. Ten days before the festival Ayyanar is taken to his original village Singanampuri.

ஆலயங்களின் அமைப்பு

ஜெயங்கொண்டான் கொளஞ்சி B.E
(நன்றி : ஆற்றல் தரும் ஆலய தரிசனம்)

ஆலயங்களின் வகைகள் பொதுவில் இரண்டாக, மூர்த்தியின் தோன்றல் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றது.



மூர்த்தி என்றால் கோயிலுனுள் உறையும் இறைசக்தியின் திருவுருவம். அது ஆண் தெய்வமாகவோ அல்லது பெண்தெய்வமாகவோ இருக்கலாம். பொதுவில் மூர்த்தி என்பது மூலஸ்தானம் என்கிற கருவறையில் வீற்றிருக்கும் கல்லாலான உயிர்பெற்ற உருவச்சிலை ஆகும்!

- சுயமாக உயிர் பெற்று விளங்கியது சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறது.
- வேத வித்துக்களால் பிராணசக்தி பெற்றது பிரதிஷ்டை மூர்த்தியாக அருள்பாலிக்கிறது.

கற்சிலையில் கடவுளா?

பரம்பொருளின் வியாபகமாகிய பஞ்சபூதங்களில் "ந" காரமாகிய நிலத்தத்துவமாகிய ப்ருத்வி ஆகிய மண்ணில் இருந்துதான் கற்சிலை வடிவமைக்கப்படுகிறது.

"ந" காரத்தில் இருந்து தோன்றிய "ப்ருத்வி" தத்துவமாகிய "மண்" என்ற நிலபூதம்! எனவே "கற்சிலை" என்பது பஞ்சபூத தத்துவப்படி.

"ந" காரத்தின் அம்சமாகும் என்பதுசொல்லாமல் விளங்கும் !! என்னே ஆடல்வல்லானின் அருள் வெளி திருநடனம்!!

ஆகாயத்தை முதலில் படைத்து அதில் வாயு (ஹைட்ரஜன் H2 –நீரக அணு) வை படைத்து அடுத்து அக்னியையும் அதன் பிறகு நீரையும் இறுதியில் நிலத்தை படைத்தான் அருள்வெளி "அருள் நடன நாயகன் நடராஜன்!"

இறுதியாக படைத்த நிலமாகிய மண்ணாகிய கல்லிலிருந்து தான் ஆலயங்களின் அனைத்து அமைப்புகளும் அமைக்கப்படுகிறது. ஆலயத்தின்

படிகட்டுமுதல் தூண்கள், கோபுரங்கள் வரை இன்னும் அனேக அம்சங்களும் "ந" காரம் கொடுத்த கல்லால்தான் உற்பனம் செய்யப்படுகிறது!!!



- கல்லுதான் (ந) கடவுளின் திருவுருவநிலையாகவும், கற்கோயிலாகவும் உருமாறுகிறது.!
- "இந்துமத கோயில்கள்" மட்டுமல்ல "எந்த மத" கோயில்களானாலும் சரி அது கல்லாகிய (ந) மண்ணால் தான் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பது பிரபஞ்ச பரம் பொருளின் கண்டிப்பான விதி!! எனவே எல்லா மதங்களுக்கும் பஞ்சபூதங்கள்தான் பரம அடிப்படை ஆதாரம் என்பதை நினைவு கூர்வோம்!!!

"கல்லே கடவுள் இல்லை"
"கல்லிலும் (ந) கடவுள் இருக்கார்"
இதுவே பரம்பொருள் கூறும் பிரபஞ்ச உண்மை!
ஆம் இறை அன்பர்களே! உண்மை, உண்மை, உண்மை!

பரம்பொருளின் பஞ்சாட்சரங்கள் ஈன்றெடுத்த பஞ்ச பூதங்களில் "ந" காரத்தின் அம்சமாகிய நிலமாகிய கல்லுதான் கடவுள் உருவமாக திருகோயில்களாக உருவெடுத்துள்ளன என்பதை யாவரும் மற(று)க்கலாகுமோ.

சுயம்பு மூர்த்தி

பிரபஞ்சத்தின் மையம் சிதம்பரம் ஸ்ரீ ஆதிமூலநாதர் சுயம்புலிங்கம் இவருக்கு ஆதியந்தம் கிடையா! இவ்வாறு சுயமாக ஆதியந்தமற்ற இறைமூர்த்திகளுக்கு பிராண பிரதிஷ்டை செய்வது சாத்தியமில்லை. அவைகள் இயற்கையிலே சுயமாக அருள் சக்தியுடன் பொலிபவைகள். இவைகளின் அருள் பாலிக்கும் சக்திகள் என்றுமே இருந்து கொண்டே இருக்கும். இதன் வரிசையில் தான் ஒளிரும் தன்மையில் சுயம்பிரகாச ஜோதிர் லிங்கங்கள்! பரஞ்ஜோதியே சுயம்பிரகாச ஜோதிலிங்கங்கள் அருள்பாலிக்கிறது.!!

பிராணப் பிரதிஷ்டை மூர்த்தி

மன்னர்களாலும் மக்கள் நல சமுதாய இறைபணி சித்தம் கொண்டவர்களாலும் உருவாக்கப்பட்டவைகள் தான் பெரும்பாலான திருக்கோயில்களாகிய இன்று நாம்

கண்ணுற்று தரிசிக்கும் ஆற்றல்கள் பல நல்கும் ஆலயங்கள்!

அன்றைய அரசர்கள் அனைவரும் அளப்பரிய ஆற்றல்கள் அளிக்கும் ஆலயங்களை அமைப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். ஆலயங்கள் அமைத்து ஆண்டவனை பூஜிப்பதால் மட்டுமே மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மைகள் உண்டுபண்ணமுடியும் என்ற சற்குருமார்களின் குருவாக்கு பரிபாலனத்தை செவ்வனே கடைப்பிடித்தனர்! கடைத்தேறினர்!!

கோயில் கட்டுவதற்கு தேவையான கற்கள் அனைத்தும் பெரும் மலைகளிலிருந்தே பெறப்பட்டன. மலை கற்களின் தனித்தன்மை பற்றி சற்று விரிவாக பார்ப்போம். அக்னியின் அதீத படைப்புத்தான் மலைகள். ஆம் அதில் உருகுநிலையிலிருந்து (எரிமலைகள்) குளிர்ந்த மண்ணு (ந) தான் மலைப் பாறைகளாக பிறந்தன எனவே இவைகள் அக்கி(சி)னி யால் புடம் போடப்பட்டவை எனவேதான் மலைப்பாறைகள் எந்த ஒரு சூழ்நிலை காரணிகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டு பல காலங்கள் நிலைத்து நீடித்து நிலைநாட்டுகிறது.

அகினியின் அற்புத குழந்தைகள்தாம்.

மலைப்பாறைகள்தான் மன்னர்களாலும் மக்கள் நல சேவகர்களாலும் ஆலயங்களாக உருமாறுகின்றன. பரம்பரையாக காலத்துக்கு காலம் உள்ளவரை அவைகள் ஆலயங்களாக திகழ்வதில் வல்லமை பொருந்தியனவாக அதன் இயற்கை சக்தி அமைக்கப்பட்டுள்ளதை ஆடல்வல்லானின் அதிசயங்களில் அதுவும் ஒன்று!

சிற்ப சாஸ்திரத்தின் கூற்றுப்படி கல்லில் மூன்று வகை உண்டு

01. ஆண் கல் :
ஆண் தெய்வங்களின் (சிவன், விநாயகர், முருகன், பெருமாள்) திரு உருவசிலை செய்வதற்கு "ஆண்கல்லை" தேர்ந்தெடுத்துதான் சிற்பிகள் சிலை செதுக்குவார்கள்.

02. பெண் கல் :
பெண்தெய்வங்களின் (அம்பாள், ஸ்ரீலஷ்மி, சரஸ்வதி சக்தியம்சங்கள்....ets) திரு உருவங்கள் செய்வதற்கு "பெண்கல்லை" தான் தேர்ந்தெடுத்து சிற்பிகள் பெண் தெய்வ திருவுருவங்களை செதுக்குவார்கள்.

03. அலி கல் :
அலி கல்லை கொண்டுதான் ஆலயங்களின் பிற அம்சங்கள் (தூணங்கள், படிகள், தளங்கள், கோபுரங்கள்.... ets) யாகவும் அமைப்பார்கள் சிற்பிகள்!

என்னே ஒரு மாபெரும் ரகசியம் பார்த்தீர்களா இறையன்பர்களே! கோயில் கட்டுவதில் இப்படியும் ஓர் இரகசியம் இருக்கிறது.

சிற்பிகளால் செதுக்கப்பட்ட தெய்வசிலைகள் பிறகு பல்வகையான தானியங்களில் ஒவ்வொன்றிலும் 48 நாட்கள் அதாவது ஒரு மண்டல காலம் அந்த குறிப்பிட்ட தானியத்துக்குள் வைத்து பிரபஞ்ச சக்தியை ஊட்டுவார்கள் பிரபஞ்ச சக்தியை (காஸ்மிக்கதிர் சக்திகள்) கவர்ந்தவைகளே தானியங்கள் அனைத்தும். அருள் வெளிகதிர்கள் தாம் பிரபஞ்ச சக்திகள் எனப்படுகின்றன.

ஒரு மண்டலம் என்பதன் பிரபஞ்ச கணக்கு

இராசிகள்	12
நட்சத்திரங்கள்	27
நவக்கிரகங்கள்	09
மொத்தம்	48

மண்ணும் பேசுமடா!

ஒரு சித்தபுருஷரும் அவரது பரமசீடரும் ஆற்றங்கரை மணலில் நடந்துசெல்லும் போது அம்மஹாபுருஷர் பற்பல ஞான விஷயங்களை தனது சீடருக்கு உபதேசித்த வண்ணம் சென்று கொண்டிருந்தார். அப்போது சீடருக்கு ஒரு எண்ணம் மனதில் தோன்றியது. அது ஒன்றுமில்லை இவ்வளவு மணலை ஏன் ஆண்டவன் (பரம்பொருள்) படைத்தான்? சீடனின் சிந்தனையை சிக்கென பிடித்தார் சித்தபுருஷர். பிறர் மனதில் தோன்றிய தோன்றுகிற தோன்றப்போகிற எண்ணங்கள், சிந்தனைகளை அறியவல்லவர்களே சித்த புருஷர்கள்! ஆம் சீடரின் சிந்தனைக்கு சித்தர் சொன்ன பதில் "மண்ணும் பேசுமடா!"

பிற்காலத்தில் "மண்ணும் பேசும்" என்ற சித்தர் வாக்கு பொய்க்கவில்லை. ஆம் அன்பர்களே அதுதான் குறைக்கடத்தி (semiconductor) என்ற செமிகண்டக்டர்! சிலிகான் கனிமத்தின் மூலம் செய்யப்படுகின்ற "செமிகண்டக்டர்கள்தாம்" இன்றைய நவீன யுகத்தின் "யுகநாயகன்" கம்பியூட்டரின் முக்கிய மூல செயலகம் (processor)!

சிலிகான் (si) ஜெர்மானியம் (Ge) போன்ற கனிமங்கள் இயல்புநிலையில் மின்சாரத்தை கடத்துவதில்லை மாறாக சிறிது மாசு (impure) கலக்கும்போது அவைகள் மின்சாரத்தை கடத்துகின்றன! இங்கு ஜெர்மானியமும் (Ge) சிலிக்கானும் (Si) மண் (நிலம் – பிருதிவி) வகையை சார்ந்தது என்ற விஷயத்தை நன்கு நாம் புரிந்துணர வேண்டும்.

- ஜெர்மானியத்தின் இணைதிறன் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை 4

- பாஸ்பரஸின் இணைதிறன் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை 5
- ஜெர்மானியம் மற்றும் சிலிக்கானோடு சிறிதளவில் பாஸ்பரஸ் கலக்கும்போது அவைகளில் 4 இணைதிறன் எலக்ட்ரான்களும் பாஸ்பரஸின் 5ல் நான்கு எலக்ட்ரான்களோடு சகப்பிணைப்பை ஏற்படுத்தி கொண்டு நிலைப்புத் தன்மையை பெறுகின்றன. மீதமுள்ள ஒரு எலக்ட்ரான் மட்டும் குறைகடத்தியின் மின்கடத்தலுக்கு காரணமாகின்றது. அந்த எலக்ட்ரான்தான் இன்றைய உலக நாயகியாக திகழும் கம்பியூட்டர்!



குறைகடத்தியின் நிறைவான செயல்கள்

பொதுவாக குறைகடத்தியின் பரிணாம வளர்ச்சியைப்பற்றி சிறிது விரிவாக காண்போம். குறைகடத்திகளின் முதல் பரிணாமம் தான் டிரான்சிஸ்டர்.

01. முதல் பரிணாமம் : (டிரான்சிஸ்டர்)

02. இரண்டாம் பரிணாமம் : (தொகுப்பு சுற்று)
இவை இரு அடுக்குகள் (Layers) கொண்டு செய்யப்பட்டுள்ளதை காணலாம்! (Legs) மின்கடத்தும் உலோகத்தால் (Cu,Al) ஆனவை

03. மூன்றாம் பரிணாமம் : (பெரியதொகுப்பு சுற்று) LIC (large integrated Circuit)
தொகுப்புசுற்றின் பெரிய அளவுதான் நீண்ட தொகுப்பு சுற்றாகும். கால்களின் எண்ணிக்கை அதிகரிப்பே பெரிய தொகுப்பு சுற்றாக அமைகிறது.

04. நான்காம் பரிணாமம் : (very Large Integrated Circuit) (VLIC)

(மிகவும் பெரிய தொகுப்பு சுற்று)
நூற்றுக்கணக்கான கால்களை (Pin's) கொண்டது. VLIC எனப்படுகிறது.

இவைகள்தாம் இன்றைய கலியுகத்தை கலக்கி கொண்டிருக்கும் கம்யூட்டர்களின் மத்தியில் செயலகமாக (CPU) செயற்படுகிறது! கம்பியூட்டர்களில் மட்டுமல்ல காதோடு காதாக பேசும் மொபையில் போன்களில் இந்த கல்லாகிய (மண் Si,Ge) மண்ணுதான் முக்கிய மூலசெயலகமாக பணிபுரிகின்றது. இதைத்தான் மண்ணும் பேசமாட என்ற பரிபாஷையில் அச்சித்த புருஷர் சொன்னார் போலும்! என்னே சித்தர்களின் தீர்க்கதரிசன ஞானம்!!

கம்பியூட்டரிலும், கைப்பேசி (Cell Phone) யிலும் கல்லுதான் இருக்கிறது. கற்கோயில்களிலும் கல்லுதான் இருக்கிறது கடவுளின் அம்சமாக என்னவென்ற சொல்வது மண்ணின் (கல்லின்) மகத்துவத்தை! அன்றைய மெய்ஞானிகள் இரு அடுக்கு கல்லின் மையத்தில் யந்திரத்தை வைத்து கடவுளை பிரதிஷ்டை செய்தனர். மக்கள் நலன் பொருட்டு இன்றைய விஞ்ஞானிகள் இரு அடுக்கு கல்லின் மையத்தில் உலோகத்தகடுகளை (pins, Legs- கால்கள்)` வைத்தனர் மக்களின் பணிநலன் பொருட்டு கடவுளும் கம்பியூட்டரும் கல்லிலிருந்துதான் செய்யப்படுகிறது.



கடவுள்	கம்யூட்டர்
கருவறையில் உள்ள மூலஸ்தான மூர்த்திகள், வேத வித்துவான்களின் வேத மந்திரங்களால் பிராணசக்தியை (ஜீவசத்தி) பெறுகின்றது.	ஹார்டுவேர் இன்ஜினியர்களின் கை வினைகளால் செயலகங்கள் (Processor) உருப்பெற்று சா.ஃப்ட்வேர் இன்ஜீனியரின் (Softwarweng) புரொகிராம்மிங் மொழிகளால் (Programing Language) செயல்திறன் பெறுகிறது!
மூலஸ்தானமூர்த்திகளின் தன்மைகளுக்கு (சிவன், பெருமாள், தாயார், அம்பாள், முருகன், விநாயகர்...) ஏற்ப வேத வித்துவான்கள் வேத மந்திரங்கள் ஓதி அந்த மூர்த்திக்கு உண்டான சக்தியை பிரதிஷ்டை செய்கிறார்கள்! அதாவது, உதாரணமாக விநாயகருக்குண்டான வேதமந்திரங்களால் அந்த சக்தியை அந்த உருவசிலையில் நிலை நிறுத்துதல்!	பயனாளி (User) க்கு தேவையான செயல்களை செய்யுமாறு மென்பொருள் (Software) தயார்செய்வார்கள் இங்கு வேதமந்திரங்களைப் போல Programming Languages (C,C++, Java...) பயன்படுத்தப் படுகின்றது சா.ஃப்ட்வேர் இன்ஜினி யர்களால்
கடவுளை பக்தன்அனுபவிக்கிறான்	கம்யூட்டரை பயனாளி (User) அனுபவிக்கிறான்!

புரொகிராம் (Program) – (செயல்திட்டம்)

கம்யூட்டரில் என்ன புரோகிராம் பண்ணுகின்றோமோ அதுதொடர்பான வேலைகளை மட்டுமே அது செவ்வனே விரைவாகவும் (Hish, Spead) மிக சரியாகவும் (accurate) செய்து முடிக்கும்

Speed and accurately இவை இரண்டும்தான் கம்பியூட்டரின் சிறப்பம்சம். இங்கு செயல்திட்டம் (Program) செய்யும் பெஸ்ட் புரொகிராமர் (Best Programmer) மென்பொருள் பொறியியலாளர். (SoftWare Engineer) புரோகிராம் தொகுப்புசுற்றில் பதிவு செய்யப்படுகிறது.

கோயில் கும்பாபிஷேகம்

கோயில் கும்பாபிஷேகங்கள் பலவகைகள் உள்ளன அதில் நாம்இங்கு "நூதன கும்பாபிஷேகம்" பற்றி சிறிது காண்போம் புதிதாக ஒரு ஆலயம் கட்டப்பட்டு அதற்கு குடமுழுக்கு நன்னீராட்டு விழா செய்வதே நூதன கும்பாபிஷேகம் என்ற பெயர்.

யாகசாலை : (ஆற்றல் சாலை)

எந்த வகையான கும்பாபிஷேகமானாலும் சரி அங்கு ஈசான மூலையில் யாகசாலை ஒன்றை அமைத்து பல யாக குண்டங்கள் செய்து அதில் வேதவித்துவான்கள் பலர் ஒன்று கூடி வேத மந்திரங்களை அக்னி சாட்சியாக ஓதுவார்கள் யாக சமித்துகளை பசுநெய்யில் வார்த்து அதற்குரிய மந்திர ஜெபங்களோடு யாக அகினியில் இடுவார்கள். யாகசாலையில் உற்பத்தியாகும் தெய்வீக சக்தியானது "தர்ப்பை கயிறு" என்ற ஓயர்களால் (Wire) ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் தெய்வமூர்த்திக்கு கடத்தப்படும்! பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கு முன் ஓம்கார பிரணவ ஒலிதான் பிண்டம் தோன்றிற்று பல கோடானுகோடி அண்டங்களின் தொகுப்பே பிரபஞ்சம் முதலில் தோன்றியது ஒலிதான் அடுத்து தான் ஒளி (ஜோதி) தோன்றிற்று. பிரபஞ்சத்தின் இரு முக்கிய ஆற்றல்கள் : ஒலி ஆற்றல் (Sound Energy) ஒளி ஆற்றல் (Light Energy). யாகசாலையில் வேதவித்துவான்களின் வேதமந்திர ஜெபங்கள்தான் "ஒலியாற்றல்"!! யாககுண்டத்தில் தோன்றும் பரமஜோதியாகிய அக்னி ஜுவாலைதான் "ஒளியாற்றல்"!! இவ்விரு (ஒலி,ஒளி) ஆற்றல்கள் தாம் "தர்ப்பை கயிறு" என்ற ஆற்றல் கடத்தும் கம்பியின்மூலம் மூலஸ்தான தெய்வ விக்ரகத்திற்கு சென்றடைகிறது. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா! பக்தர்களேஆம் உண்மை இதுதான் அடுத்து "தர்ப்பையை" பற்றி சிறிது விளங்கி க்கொள்வோமா அன்புள்ளங்களே!

தர்ப்பை

பரம்பொருளின் சிருஷ்டிகளில் தர்ப்பை ஒரு பிரம்மாண்டமான தெய்வீக சக்தியை தன்னகத்தே கொண்டுள்ளது. அதுதான் மந்திர ஒலிகளை தன்னுள்ளே கிரகிக்கும் சக்தி மேலும் கிரகண காலத்தில் தண்ணீரில் சிறிது தர்ப்பை சில்லுகளை போட்டுவைத்தால் அந்த தண்ணீர் கிரகணத்தால் பாதிப்பை அடையாமல் அதிலுள்ள தர்ப்பை பாதுகாக்கிறது. என்னே தர்ப்பையின் மகத்துவம் இன்னும் அனேக விஷயங்கள் தர்ப்பையை பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். விரிவஞ்சி இத்தோடு வைப்போம். சுருக்கமாக சொன்னால் செயல்படுகிறது. தர்ப்பை பாயில் அமர்ந்து தியானம் செய்ய மனம் நன்கு ஒரு நிலைப்படுவதை நன்கு உணரலாம்! தர்ப்பை இல்லாத தெய்வீக காரியம் எதுவும் கிடையாது என்றே சொல்லலாம் .

மயிலைப்புலம் அருள்மிகு ஐயனார் ஆலயம்

தில்லைச்சிவன்

(நன்றி : வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்)

இந்தவியாசம், கர்ணபரம்கரையாக வந்த செவிவழிச் செய்திகளையும், 1930 – 2000 ஆண்டு காலம் வரையான கண்டு கேட்ட அனுபவச் சான்றாதாரங்களையும் மேற்கொண்டு எழுதப்பெற்றது.

மயிலைப்புலம் ஐயனார் ஆலய வரலாறு பற்றி எழுத எடுத்துக்கொண்ட காலம் 1800– 2000 ஆண்டுகாலப்பகுதிகளாகும். இரு நூற்றாண்டுகள்

இதற்கு முந்திய காலவரலாற்றுத் தரவுகளைக் கர்ண பரம்பரையாகத்தானும் என்னால் அறியமுடியவில்லை. ஆனால் கீழே குறிப்பிடப்படும் எல்லைப்பரப்பினுள்ளே அறுபது வரையிலான குடியிருப்பு பிட்டிகளும், அவற்றை மூடி வளர்ந்திருக்கும் வேம்பு, இலுப்பை, பனைமரங்களும், கறுப்பு வெள்ளை ஓட்டுத்துணிக்கைகளும், பாசிமணிகளும், வளவோரங்களில் குவித்துக்கிடக்கும் சிப்பி சங்குகளின் எச்சங்களும் காணிநிலங்களுக்கிட்டுள்ள பெயர்களும் இங்கொரு மக்கட்கூட்டம் வாழ்ந்தமைக்குச் சான்றாகும். யாழ்ப்பாண அரசர்களுக்காக இங்கிருந்துபடை உதவி செய்தவர்களும் இருந்தார்கள் எனவும் கேள்வி.

எனது இந்த வரலாற்றுக்கு உரிய நிகழ்விடமாகச் சரவணைகிழக்கையும் வேலணை வடக்கையும் உள்ளடக்கிய பகுதியை எடுத்துக்கொண்டால் பெரிதும் சிறிதுமான பத்துக் குளங்களையும் பலநூறு பரப்பு நெல் வயல்களையும் இதேயளவு மேட்டு நிலங்களையும் ஆங்காங்கே பனந்தோப்புகளையும் அதனோடு சேர்ந்தாற்போல் உள்ள சில குடியிருப்புக்களையும் காணலாம்.

இந்தப் புலங்களுக்கும் பிட்டிகளுக்கும் இட்டுள்ள பெயர்களை ஒல்லாந்தர் காலத்தோம்புகளைப் புரட்டிபார்த்தால் மூக்கில் விரல்வைத்து வியக்க வேண்டியுள்ளது. சத்திரியபுலம் அதனருகே மஞ்சட்கேணி, சூடுவெந்த புலம், ஆவடையார் புலம், ஆவுரந்துலா எனப் புலங்களும் குயவன்பிட்டி, ஆணைமேடு, தட்டான் சீமால், ஆலைக்கிடங்கு, கொல்லன் சீமால் எனக் குடியிருப்பு மேடுகளும் பெயர் பெற்றிருக்கின்றன. இப்பெயர்கள் வரக்காரணமாய் இருந்த சத்திரியர்களையோ கொல்லர், குயவர், ஆலைக்காரர்களையோ வரலாறு குறிக்கவில்லை. மிகப் பழங்காலத்தில் இங்கு வாழ்ந்து மக்கள் புயல், வெள்ளம் கொள்ளைநோய் காரணமாக அழிந்தொழிந்து போனார்களே! அன்றி இன்று போல் அன்றும் ஓர் படையெடுப்பு நடந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றார்களோ தெரியவில்லை. ஆனால் மிச்சசொச்சமாக எஞ்சிமிருந்த மக்களுடன் யாழ்ப்பாணம் பூநகர் தென் இந்தியாவிலி

ருந்து நெடுந்தீவுடாகச் சிலரும் சேர்ந்து கொண்டனர். இம் மக்கட் கூட்டம் சைவம் சார்ந்த அறுவகை மதத்தினராகவும் தமிழ்ப் பௌத்தர்களாகவும் இருந்திருக்கின்றனர். போர்த்துக்கேயரால் வழிப்பாட்டிடங்கள் அழிந்துபோக முன்னோரால் வழிப்பட்டு வரப்பட்ட விருட்சங்களில் தத்தமது இஷ்ட தெய்வங்களை ஆவாகனம் செய்து வழிபட்டனர்.

இவ்வாறாக நம்முன்னோரால் ஆல் கிளுவை ஆகிய மரங்களில் ஆவாகித்து வழிப்பட்ட தலமே மயிலைப்புலம் ஐயனார் ஆலயம்.

காட்டு நொச்சிகள் அதிகமாக இருந்ததால் மயிலைப்புலம் என்ற பெயர் வந்திருக்கலாம். மயிலைக்காட்டு நொச்சி அல்லது மயிலாப்பூர் அந்தணர் ஒருவர் வழிபட்ட இடமாகவுங் கூடும். இவ்வாலயத்தை கட்டுவன் ஐயனார் கோவில் என்றுங்கூறுவர் ஆலயத்தின் தெற்கே கட்டுவன் குளம் இருக்கிறது. இக்குளக்க்ரையை அண்டியுள்ள வயல்களில் நெல்லும் மேட்டுநிலத்தில் உழுந்து, வரகென்ற தானியங்களையும் மக்கள் தம் தேவைக்காகப் பயிரிட்டனர். பனைகளால் வரும் பொருட்களாகிய கிழங்கு, ஒடியல் பாய், கடகம், பெட்டி, என்பனவே இம்மக்கள் பணத்தைக்காணும் விலைப் பொருட்களாக இருந்தன.

சரவணை கிழக்கில் இருக்கும் இக்கோவில் வேலணை வடக்கின் மேற்கெல்லையாகவுள்ளது. 19ஆம் நுற்றாண்டில் தொடக்ககாலத்தில் இருப்பை. நாவல், வேம்பு, புளி, போன்ற பெருவிருட்சங்களும் மஞ்சவொண்ணா, மாவிலங்கை, இலந்தை மரங்களும், நொச்சி, கொன்றை, காண்டை. காரைப் புதர்களும் நிறைந்த வனமாக இருந்தது. காட்டுக்கோழி, கௌதாரி, மணிப்புறா, நாகணவாய், முதலிய பறவைகளும், இவ்வனத்தின் வடக்கில் இருக்கும் கடற்கரையில் கோட்டான் குருவிகளும், கடற்காகம், நாரை,தாரா, கொக்கு எனப்பல பட்சி ஜாலங்களும், ஒலியெழுப்பி ஆசிப்பதை கேட்கலாம். எழிலாட்சி செய்யும் இவ்விடத்தில் ஐயனார் அருளாட்சி செய்கின்றார் என்ற ஐதீகம் நெடுங்காலமாக இவ்வூர்மக்களிடம் உண்டு.

வடக்கில் இருக்கும் ஓட்டைக்கடலைக் கடந்து மேலே சென்றால் பற்றைகள் சூழ்ந்த புல்வெளியைக் காணலாம். அப்புல்வெளி மாரியில் சதுப்பு நிலமாகக் காணப்படும். அங்கு மேற்படையில் ஊரியும் கீழே சிப்பிப்படையும் ஆறடி ஆழத்தில் சங்குகளும் ஏராளமாகக் கிடைக்கும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தை அண்டிய சமுத்திரத்தை நோக்கி கடல் நீர் சென்றதால் இப்பகுதி மேடாக வந்ததென்று கூறும் அறிவியலாளருமுண்டு. எவ்வாறாயினும் கடல், நிலமாகிப் புல்வெளியாகி எம்மூரவர்களின் ஆடுமாடுகள் மேயும் மேச்சற்றரவையானது.

சரவணை மயிலைப்புலத்தை சேர்ந்த மக்கள் தமது ஆடு மாட்டு மந்தைகளை

கடலைக்கடந்து புல்வெளியின் மேயவிடுவது வழக்கம் நாய் நரித்தொல்லைகளுக்கு அஞ்சி மந்தைகளை அடிக்கடி சென்று பார்க்கும் மக்களுக்கு நொச்சிக்காட்டின் மையத்தில் இருந்த ஒரு கிளுவைமரம் கண்ணிற்பட்டது. அதனருகில் செப்பமிட்ட ஒரு சிறுகல்லில் கற்பூரம் கொழுத்திய அடையாளம் தெரிந்ததோடல்லாமல் ஒரு சிறுமண் சுட்டியில் எரிந்ததிரி வேப்பெண்ணைமணம் வீசியது. என்னவோ ஏதோவொன்று பயந்த மக்கள் இரவு வேளைகளில் இம்மரத்தைச்சுற்றி ரம்மியமான ஒளி பிரகாசிப்பதையும் அதனிடையே வெள்ளை உடை போர்த்திய உருவொளித்தோற்றம் தெளிவதையும் நினைத்து பார்த்தனர். திகில் அடைந்தநிலையில் "எத்தனையோ இரவுகளில் மந்திர உச்சாடான ஓசைகள் கேட்டனவே! தேவர்களால் வழிப்படப்படும் தெய்வந்தான் இருக்கிறார்" என்று பேசிக்கொண்டு சென்றவர்களால் ஊர்திரண்டு மரத்தடியில் கூடியது. கூடிய ஜனங்கள் ஒவ்வொருவரும் தாந்தாம் கண்ட தரிசனங்களையும் அற்புதங்களையும் தங்களிடையே பரிமாறி வியந்தனர். உருவேறிய ஒரு மூதாட்டி தெய்வம் வரப்பெற்றவளாய் அரிகரபுத்திரராகிய ஐயனார்தான் இங்கே இருக்கிறார் எம்மையும் எம்மந்தைகளையுமு பாதுகாத்து வரும் காவற்தெய்வம் இவர். இவரை நாம் ஆதரிக்கக வேண்டும். பொங்கிப் படைக்க வேண்டும் என்று ஆவேசமாகக் கத்திக் கொண்டு விழுந்து விட்டாள்.

இச்சம்பவங்களால் கிராமத்து மக்களிடம் பயப்பிராந்தியுடன் கூடிய பக்தியேற்பட்டு விட்டது. ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற காணிக்களைக் கொடுத்தனர். அன்று இராப்பொழுது முற்றும் உரிய ஆயத்தங்களை செய்து பொழுது விடியும் போது பொங்கலிட்டுப் படைத்தனர். அன்று ஆனி அமாவாசைக்கு முந்திய சதுர்த்தி நாள். இன்றும் அத்தினமே இக்கோவிலின் பொங்கற்றிரு நாள் என்பர்.

தொடர்ந்து ஆண்டுக்கொரு பொங்கலும் செவ்வாய் வெள்ளிநாட்களில் விளக்கு வைப்பதுமாகக் கிளுவை விருட்சத்தை வழிப்பட்டுவந்த மக்கள் அக்கிளுவை மரத்தில் ஒரு ஆலங்கன்று முளைத்து எழுவதைக்கண்டு, வியந்து நின்றனர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த ஆலங்கன்று கிளைத்துச் சடைத்துக் கிளுவையை மூடி விழுதுகளைப் பரப்பி நின்றது.

இதனை ஒரு அதிசயமாக கருதி ஐயனார் பெருமையும் புகழும் பெருக வழிபடுவோர் தொகையும் கூடி பொங்கற் பானைகளும் நேர்த்திக்காணிக்கைகளும் அதிகமாயிற்று.

அயலில் மற்றோராலயம் இல்லாத நிலையில், தனி ஆலமரத்தையனாகப் பக்தர்களுக்கு இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இஷ்ட சித்திகளை வழங்கி வந்த

ஐயனாருக்குக் கற்கோவில் எடுக்க வேண்டும் என்ற எண்ணம் நன்னியர் (சுப்பிரமணியம்) என்பவரிடம் ஏற்பட்டது. இவரது காலம் அண்ணளவாக 1850 எனக் கொள்ளலாம். இவரால் தொடங்கப்பட்ட திருப்பணி இவரது மகனும் சோதிடருமான வேலுப்பிள்ளை என்பவரால் மூன்று மண்டபங்கள் கொண்ட மடாலயமாக நிர்மாணிக்கப்பட்டது. கோவிலின் உள்ளே கருவறையில் ஐயனார் கொலுவீற்றிருக்கும் பீடவடிவான இலிங்கம் மட்டுமே வைத்து பூசாகாரியங்கள் நடைபெறலாயின. கோவில் அமைத்த போதும் ஆலமரத்திலேயே ஐயனார் அருவுருவாக இருக்கிறார் என்ற நம்பிக்கை மாறவில்லை. இக்காலத்தில் வைசூரி, வயிறோட்ட நோய்களுக்கு ஆளானவர் ஐயனாரை வழிபட்டு ஆலமரத்தின் கீழ் பாடுகிடந்து நோய்மாறிச் சென்றார்கள் என்பர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளை இக்கிராமத்தின் பொற்காலம் என்பர். கோயில் தென்கோடியில் இரு குளக்கரைகளிலுள்ள சுமார் ஆயிரம் பரப்பு நெல்வயல்களும் மூன்று புசலுக்குக் குறையாத விளைவைத்தந்தன. ஆடு மாட்டுப்பட்டிகள் அடைத்து நிலம் பண்படுத்தப்பட்டிருந்தது. அதனால் உணவுத் தேவை நிறைவுற்றது. கோவிலின் வடக்கிலும் மேற்கிலுமிருந்து காடுகளை அழித்து மேடுகளைச் சரித்துச் சமர்ப்படுத்திச் செய்த புகையிலைப்பயிர் செய்கை பணப்புழக்கத்தைத் தந்தது. மக்கள் கல்வியிலும் புற விடயங்களிலும் மனதைச் செலுத்தினர்.

ஆலயதரிசனத்துக்காகவும் பொழுது போக்காகவும் ஆலடியில் கூடும்மக்கள் கோவிலுக்கு ஒரு குருக்கள் இல்லாத குறையை உணர்த்தினர். ஊருக்க ஒரு புரோகிதர் இல்லையே என்ற கவலை அக்காலத்தில் முடிசூடா மன்னனாகவும் அரச காரியங்களுக்கெல்லாம் அதிகாரியாகவும் அயலவராகவும் இருந்த முத்துமணியகாரரிடம் ஆலோசனை பெற மூன்று நான்கு பேர் சென்றனர். அவரின் பூரண ஆதரவுடனும் ஆசியுடனும் அராலியிலிருந்த பிராமணோத்தமரான செல்லையா குருக்கள் குடும்பத்துடன் கோயிலடியில் குடியேறினார்.

ஊதியமின்றி, ஊர்புரோகிதமே வருவாயாக, 1890 இன்பின் வந்து குடியேறிய குருக்களின் வரலாறும் இக்கோவிலின் வரலாறும் ஒன்றுடன் ஒன்று சங்கமித்து 1970 வரை நீடித்தன.

குருக்களின் வருகையோடு கோயிற் சூழலும் முன்னரைவிட கலகலப்பானது. நோய்பிணி உற்றோருக்கு மந்திரநீறணிந்து சுகப்படுத்துவதும் பேய்பிசாசு அணைந்ததென்று வருவோரை ஆசுவாசப்படுத்தி மந்திர உச்சாடனஞ்செய்து திருநூற் காப்புக் கட்டித் தெளிவு பெறச் செய்வதும் இளஞ்சிறார்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைப்பதும், பிதிர்கடன் செய்யக்கேட்போரின் நிலைமை

கருதிச், சிலருக்குத் தமதில்லத்திலேயே அக்கடமைகளைச் செய்விப்பதுமாக இருந்ததால், ஆலயச் சூழல் அதிகமானோரைக் கவர்ந்திழுத்தது.

1900 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பெருங்காற்றுடன் பெய்த கடும் மழையால் வீடு வாசல்களை இழந்து கோயில் வளாகத்தை வந்தடைந்த மக்களை ஐயர் ஆதரித்து உபசரித்தார். அவர்களுக்காக ஐயர் சமைத்த பாற்கஞ்சி வார்க்க வார்க்க வற்றாதிருந்ததாகப் பலர் கூறிவியந்தனர்.

ஐயனாரின் அருட்செயல்கள், கிராமங்கள் தோறும் பிரபல்யம் பெற்றது. பிள்ளை கேட்டு விரதம் பிடிப்போர், உயிர்ப்பிச்சைக்கேட்டு உபவாசமிருப்போர், தாலிகேட்டு தவமிருப்போர், செய்தொழில் சித்திக்கக் கேட்போரென்றித் திறத்தோர் எல்லாருங் கூடி ஆண்டுதோறும் ஆனித்திங்களில் பொங்கலிட்டுப் படைத்து மகிழும்விழா, பெருங்கோலாகலமாக நடந்து வந்தது.

இவை இவ்வாறாக செல்லையரின் மகன் கணபதி ஐயர் வேதாகம பண்டிதராகிக் குருக்கள் பட்டம் பெற்று தஞ்சாவூர்அம்மையைப் பாணிக்கிரகம் செய்து கொண்டு கோயிற்பூசையையும் ஊர்புரோகிதத்தையும் ஏற்றார். இவர் காலத்தில் கோவில் புதுப் பொலிவினையும் அதிகமகிமையையும் பெற்று விளங்கியது.

புராணங்களைப் படிப்பதும் பயன் சொல்வதுமான புலவர்கள் குழாமும் கேட்டு அனுபவிக்கும் பக்தர் – பாமரக் குழாங்களுமாகப் பலர் கூடும் சூழலில், எல்லோருக்கும் அவரவர் சீருக்கேற்ற உபசரிப்புகளையும் குருக்கள் செய்து மகிழ்வார்.

1922ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோயிலுக்கு அண்மையாக ஒரு பாடசாலை தொடங்கப்பெற்றது. அதன் ஆசிரியராக திரு.சி. அருளம்பலம் பணிபுரிந்த போது திரு. சி.சதாசிவம்பிள்ளை, தான் அவரிடம் படித்ததாகவும் எனக்கு கூறினார். மேலும் அப்பாடசாலை மூடப்பட்ட நாளில் இருந்த இப்பகுதியில் ஒரு பாடசாலை நிறுவும் எண்ணம் தனக்கிருந்ததாகவும் ஆத்திசூடி வித்தியாசாலையைத் தொடங்கி வைத்துப் பேசிய திரு. சி.சதாசிவம்பிள்ளை ஆசிரியர் அவர்கள் கூறினார். 1922இல் உண்டான ஆசை சரியாக முப்பது ஆண்டு கழிந்து நிறைவேறியதில் மகிழ்ந்திருந்த பலரும் இன்று இடிந்தும் சிதைந்தும் மக்கட் குடியிருப்புக்கள் அகன்றுபோய், ஆத்திசூடி மூடப்பட்டுள்ள நிலையை காணின் சகிப்பாரோ! யாரறிவார்?

இது இவ்வாறாக 1952 ஆம் ஆண்டுகாலப்பகுதியைப் பின்னோக்கிப் பார்த்தால் கோவில் குருக்களின் விடாமுயற்சியும் மக்களின் ஒத்துழைப்பும், அப்போது கோவிலின் முகாமையாளராக விருந்த திரு.வே. கெங்காதரம்பிள்ளை அவர்களின்

அனுசரணையும் சேர்ந்து, மடாலயமாகவிருந்த கோவில் மூலஸ்தானப் பண்டிகையும் முடியும்சூடிய ஆகமக் கோவிலானது. இதன்மேல் பொங்கலுக்கு முந்திய எட்டுநாட்களும் அலங்காரத்திருவிழாக்கள் அதிவிமரிசையாக நடைபெற்றும் வந்தன.

இக்காலப்பகுதியில் கோவிலுக்கு வருமானம்தேடும் நோக்கில் ஆடு, கோழி பலியிடும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. கிராமங்களிலே இதற்கான பிரச்சாரமும் முடக்கிவிடப்பட பலர் நேர்த்திகளை நிறைவேற்ற, பலிப்பொருட்களைக் கொணர்ந்தனர். பலியிடுவதைத்தடைசெய்து கணபதிகுருக்கள் விடுத்த கண்டிப்பான கட்டளைக்குப் பணிந்து நேர்த்திப்பலிகளை அப்படியே விட்டுவிட்டு மக்கள் சென்ற மறுநாள் கூடியகூட்டம், கடாக்களையும் சேவற் கோவில்களையும் ஏலங்கூறி விற்று சேர்ந்த பணத்தை உண்டியலில் போட்டனர் எனக்கூறக்கேட்டேன். இந்த வழக்கம் இதன் பின்னும் சிறிய அளவில் நடப்பதைக் காணக்கூடியதாவுள்ளது.

கோயிலின் திருமஞ்சனக்கிணறும் வேறுசில அயற்கிணறுகளும் உவர்நீர் கிணறுகளாகும் இக்கிராமத்தில் நன்னீர், உவர்நீர் கிணறுகள் மாறி மாறி உள்ளன. கோவிற் தேவைக்காக நன்னீரை சற்று தூரத்திலே இருந்தே பெறவேண்டியிருந்தது. மனது வைத்த பண்டிதர் கா.பொ. இரத்தினம் தனது தொகுதி ஒதுக்கீட்டில் இருந்து கொடுத்த பணத்தால் கோயிலருகில் சோ.ப.கி.மு.சங்கம் ஒரு கிணற்றைத் தோண்டிக் கட்டியது அக்கிணற்று நீரே கோவிலுக்கும் ஊருக்கும் உதவுதலையும் ஐயனாரின் புதுமை எனக் கூறுகின்றனர்.

ஐயனார் மீது அளப்பரும் பக்தியும் ஊர் அபிமானமும் உடையாராய் அயராது விசுவாசத்துடன் பூசைபுனற்காரியங்களில் ஈடுபட்டுழைத்த ஐயர் 1970 ஆம் ஆண்டளவில் கோவிலை முகாமையாளரிடம் பொறுப்புக் கொடுத்து விட்டு ஊரை விட்டே வெளியேறிவிட்டார்.

முகாமையாளர் பொதுமக்களைக்கூட்டி கோவில் நிர்வாகத்தைப் பொதுமக்களிடம் கையளித்தார் அன்றிலிருந்து கோவில் மக்களின் சொத்தாகியது. மக்கள் திருப்பணிச் சபை, அறங்காவற்சபை, பூசைநிதிச்சபை எனச் சபைகளை நிறுவித் திருப்பணி செய்வித்தும் கும்பாபிஷேகம் நடத்துவித்தும் பூசகர்களை நியமித்தும் திருவிழா பொங்கற் காரியங்களை நியமம் தவறாமல் செய்து வந்தார்கள். இதன் மறுபக்கமாக ஒன்றினைப் பதிவு செய்யத்தான் வேண்டும்

ஜனநாயகத்தை விட நல்லவன் மிகவல்லவனான ஒருவனின் சர்வாதிகாரம் மிகச்சிறந்தது. நாட்டுக்குஞ்சரி, கோவில்குஞ்சரி எந்த ஸ்தாபனமானாலுஞ் சரி இது பொருந்தும் தமிழ்ச்சமுதாயத்துக்கு வேண்டியதும் இதுவே.

கணபதிக்குகுருக்களின் சர்வாதிகாரத்தில் கோவில் கருமங்கள் கட்டுப்பாடாகவும் கட்டங்கட்டமாகவும்படிப்படியாகவும் வளர்ந்தன. இன்று ஜனநாயகம், எல்லோரும் எஜமானர் என்பதும் இக் கோவிலின் இன்றைய வரலாற்றின் ஒரு பகுதியாகும்.

சிவனின் ஐந்தொழில்களும் ஜப்பானின் 5S எண்ணக்கருவும்

சி. பார்த்தசாரதி

அனேகமாக இலங்கையில் எல்லா அலுவலகங்களிலும் 5S என முகாமைத்துவம் பற்றிய ஜப்பானிய தேசத்து நவீன எண்ணக்கரு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

பிரபஞ்சத்தை முகாமைத்துவம் செய்யும் சிவன் ஐந்தொழில்களை புரிகிறார் 5Sம் ஐந்தொழில்களும் ஒன்றா? அதிசயிக்கத்தக்க வகையில் ஜப்பானியர் சிவனின் ஐந் தொழில்களை முகாமைத்துவ நுட்பங்களாக காட்சிப்படுத்தப்படுகின்றனர்

படைத்தல் –Seiso –இவ்விடத்தே இப்பொழுதே தெரிவுகள்
காத்தல் – Seiton – பொருட்களை உரிய இடத்தில் வை
அழித்தல் – Seiri –தேவையற்றவற்றை அழித்து விடு
அருளல் – Seiketso –தெரிவில் அபிவிருத்தி நோக்கு
மறைத்தல் – Shitsuke –அதுவே ஒழுக்கமாதல்

படைத்தல் – (Seiso) என்பது ஆக்கும் செயற்பாடாகும். ஆக்கும் செயற்பாடு புதுமைகள் நிறைந்தது. கற்பனைக்கு இடமுள்ளது ஒவ்வொரு படைப்பும் தனித்துவமானது. படைத்தல் சலிப்புத்தட்டாத ஊக்கம் அளிக்கின்ற புத்தாக்க செயற்பாடாகும். சிவனின் மந்திரி சபையில் இது பிரம்மாவிற்கு பொறுப்பளிக் கப்பட்டுள்ளது.

காத்தல் – (Seiton) படைக்கப்பட்டவற்றையும், படைத்தற்குரிய கருவிகளையும் பாதுகாக்க வேண்டும் வேலை முடிந்ததும் உடனே சுத்தம் செய்தல் தேவையான பொருட்கள் உரிய இடத்தில் வைத்தல் மூலம் தேவையானவை பாதுகாக்கப்படும் சிவனின் மந்திரிசபையில் இது திருமாலுக்கு ஒதுக்கப்பட்ட இலாகா வாகும்.

அழித்தல் –(Seiton) தேவையற்றவற்றை அகற்றுதல் மற்றும் அழித்தல் மூலம் புதிய படைப்புக்களுக்கான வெளி ஏற்படுத்தப்படுகின்றது. சிவனின் அமைச்சரவையில் இது உருத்திரனிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

அருளல் (Seiketso) படைக்கப்படுவனற்றின் தொடர்ச்சியான தரம் பேணப்படுதற்கு படைத்தலின் போது தர உறுதிப்பாடு பேணுதல் வேண்டும். புதிய கற்பனைக்கு இடம் வைத்து முன்னர் படைக்கப்பட்டவற்றை விடவும் சிறப்பானவற்றைபடைப்பதற்கு முன்னர் படைக்கப்பட்டவற்றில் உள்ள குறைப்பாடுகளை இனம் கண்டு பூரணத்துவமானவற்றைப் படைப்பது அதற்கான ஆற்றலை தக்கவைப்பது அருளுதல் ஆகும்.

மறைத்தல் (Shitsuke) இவ்வாறு செய்யும் தொழில் செம்மை பெற முயல்பவர்களுக்கு அதுவே ஒழுக்கமாக (Discipline) ஆகிவிடுகின்றது. ஒழுக்கம் உள்ளத்திற்குரிய பொருளாக மறைந்து இருக்கிறது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், இந் நான்கும் வெளிப்படையானது. ஆகவே நவீன முகாமைத்துவ கோட்பாடாக போதிக்கப்படும். ஜப்பானிய 5s எண்ணக்கரு சைவசமயத்தில் போற்றப்படும். சிவனின் ஐம்பொருள் தொழில்களுக்கு ஒப்புமையானது.

அவ்வாறே கடவுளை அடையும் வழிகளாக நான்கு வழிகள் சைவசமயத்தில் விதந்துரைக்கப்படுகின்றன. அவையாவன சரியை, கிரியை, யோகம், ஞானம்.

திருநாவுக்கரசர் கோவில்களில் உளவாரத் தொண்டு செய்து சரியை வழியில் இறைவனை அடைந்தார் எனக் கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் விக்கிரக வழிபாடுகள் மூலம் இறைவனை உருப்படுத்தி பூசை செய்து கிரியை வழியில் இறைவனை அடைந்தார் எனவும் சுந்தர் இறைவனை நண்பனாக அடையபெற்ற யோகமுடையவர் என்றும் குன்டையத்தூரில் பெற்ற நெல்லை வீட்டுக்கு எடுத்துவர சிவனை ஈடுபடுத்திய யோகமுடையவர்.

திருவாசகர் அருளிய மாணிக்கவாசகர் ஞானமார்க்கத்தில் ஒழுகினார். தந்ததென்றன்னைக் கொண்டது நின்றன்னை சங்கரா யார் கொலே சதுரர்? என அறிவு வழியில் சிவனுக்கு சவால் விடுத்தவர்.

இம்மார்க்கங்களில் உயர்வு தாழ்வு எதுவுமில்லை மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கிரியா யோகத்தில் நிலைத்திடல் அருள்வாய் என வேண்டினார். இவ்வாறே மாணவர்களிலும் நான்கு வகையான மாணவர்கள் உள்ளனர் சரியை வழி (Acticist) மாணவர் செயற்பாடு மூலம் கற்பவர்கள் குழுச் செயற்பாடுகளில் பொருட்களை நேரடியாக கையாளும் மாணவர்களை Acticist ஆக இனங் காணலாம்.

கற்கும் சந்தர்ப்பங்களில் அல்லது செயற்பாடுகளில் அது போன்ற வேறு நிகழ்வை பின்னோக்கி பார்ப்பவர்கள் கற்பனையில் சஞ்சரிப்பவர்கள் Re (கிரியை) ஆவர். அவர்கள் உடலால் வகுப்பறையில் இருந்தாலும் உள்ளத்தால் வேறு உலகங்களில் சஞ்சரிப்பவர்கள்.

கற்கும் விடயத்தை நடைமுறை உலகில் எவ்வாறு பயன்படுத்தலாம் எனப் புத்தாக்க சிந்தனையில் இருக்கும் மாணவர்கள் யோக மார்க்கத்தை Praematic பின்பற்றுபவர்கள் ஆவர். வகுப்பறையில் 1ம் 2ம் 3ம்வகை நெம்பு கோல்களை ஆசிரியர் படிப்பித்துக்கொண்டிருக்கின்ற போதே ஒரு சீன மாணவன் nail cutter (நகவெட்டி) புத்தாக்கத்தை உருவாக்கினான்.

ஞான வழியில் கற்பவர்கள் வெளி உலகில் பரிசோதனைகளை செய்து பார்ப்பதில்லை அவர்களது நுண்மதியில் ஆய்வுகள் நிகழுமாம் ஐன்ஸ்ரைன் அணுவை உடைக்கிறபோது $E=mc^2$ சக்தி வெளிப்படும் என துணிந்து சொல்லும் முன் எத்தகைய வெளியுலக பரிசோதனைகளையும் செய்து பார்க்கவில்லை பின்னர் அமெரிக்க வல்லரசு அணுவை சிதைத்து வெளிப்பட்ட சக்தியை அளவிட்ட போது ஐன்ஸ்ரைனின் சமன்பாடு சரியாகத்தான் இருந்ததாம்.

ஞானவழியில் நின்றாலும் நியூட்டன் சில பரிசோதனைகளையும் செய்து பார்த்தார். ஆகவே வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மாணவர்கள் தங்கள் கல்வியை அடைவதற்கான மார்க்கத்தை மாற்றிக்கொள்ளக் கூடும்.

வகுப்பறையில் ஆசிரியர்கள் விரிவுரைமுறையில் கற்பிக்கும் போது ஞானவழியில் நிற்கும் ஆகக்கூடிய 25 மாணவர்களை மட்டுமே சென்றடையமுடியும்.

வகுப்பறையில் உள்ள எல்லா மாணவர்களையும். சமகாலத்தில் சென்றடையும் பொருட்டு ஆசிரியர் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியமார்க்கங்கள் ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்ற வேண்டி இருப்பது ஒரு சவாலாகும். இதற்காக சிவ பெருமானின் ஐந்தொழில்களை அதாவது ஜப்பானிய 5S முகாமைத்துவ கோட்பாட்டை மனதிற் கொண்டு வகுப்பறை முகாமைத்துவம் செய்து பார்க்கலாம்.

ஐந்தொழில்கள்

படைத்தல் : இவ்விடத்தே, இப்பொழுதே!

காத்தல் : பொருட்களை உரிய இடத்தில் வை

அழித்தல் : தேவையற்றவற்றை அழித்துவிடு

அருளல் : தெரிவு, அபிவிருத்தி நோக்கு

மறைத்தல் : அதுவே ஒழுக்கமாதல்.

சிவாலயங்கள் நிறைந்த சிவபூமியில் ஐயனார் வழிப்பாடும் அதன் முன்னோடிகளும்

செல்வி ஹேமா யோகநாதன்
கணக்காளர்.

சிவாலயங்களின் சீர்குலைவில் அவற்றை மீள்புரைமைக்க சைவ வைணவ சமரச கொள்கையாக ஐயனார் வழிபாடு அறிமுகமாகியது. சிவபெருமான் இடத்திலுள்ள சக்தியில் ஒன்று திருமால் சக்தி. அன்புக்கு எல்லாம் ஊற்று சிவசக்தியின் பரஸ்பர அன்பே ஆகும். சக்தியாகிய திருமாலிடம் சிவபெருமான் உமிர்க்கப்பட்டார். அரியும் அரனினதும் அருந்தவ புதல்வரே கரிகாலபுத்திரன் இவரை ஐயனார் என்றும் ஐயப்பன் என்றும் திருநாமம் கொண்டு அழைப்பர். இவர் உருத்திரர்களில் ஒருவராக திகழ்வதால் எந்த துன்பங்களிலும் எம்மையெல்லாம் காத்தருளும் தெய்வமாக விளங்குகின்றார்.

அராலி வண்ணபுரத்து சிவன்கோவில் ஊடாக தீவுப்பகுதி ஆலயங்களின் வளர்ச்சியில் மயில்வாகனம் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை மரபினர் மண்கும்பான் வெள்ளைபுற்றடி பிள்ளையார் கோயில் அமைப்பில் ஊக்கமளித்தனர். இவர்கள் சரவணை தில்லைமேடை சிவனருளால் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம் வள்ளியம்மையை திருமணம் செய்தார். இவர்கள் ஆலய தோற்றத்திற்கு பெரும்பங்காற்றினர்.

தெங்கங்குளத்திலிருந்து நீரானது வழிந்து வாய்க்கால் வழியாக கட்டுவன் குளத்தை வந்தடைகின்றது. அக்கட்டுவன் குளத்தின் வடமேற்கு பக்கத்தில் நீர்வளமும் விவசாய வளமும் நிறைந்த சூழலில் ஐயனார் கோயில் அமைந்துள்ளது. ஆலய சூழலை பற்றி வித்துவான் வேந்தனார் அவர்கள் தெய்வமார் செந்தமிழை தேர்ந்து நான் கற்ற இடம் ஐயனார் கோயிலடி ஆலில் என வர்ணிக்கின்றார்.

வினாசித்தம்பி நொத்தாரிசு (சேதுகாவலன்) அவர்கள் தீவுப்பகுதி முழுவதற்கும் நொத்தாரிசு ஆக சேவையாற்றிய அக்காலப்பகுதியில் சைவதலங்களிற்கு உரித்தான நிலங்களிற்கான உறுதியை பதிவதற்கான ஒழுங்கமைப்புக்களை செய்தார். அராலி செல்லையா குருக்கள், அவர்களின் மகன் கணபதி குருக்களை குறித்த ஆலயத்தில் பூசகர்களாக அமர்த்தி ஆலய வழிபாடுகளை மேற்கொண்டனர்.

வேலுப்பிள்ளையின் பின்னர் அவரது ஒரே மகனாகிய கெங்காதரம்பிள்ளை அவர்கள் அவர் தம் சகோதரிகளினதும் உறவினர்களினதும் ஒத்துழைப்புடன் ஆலய வளரச்சிக்கு பெரும்பங்காற்றினார். 1959ம் ஆண்டுஆவணி மாதம் 29ம் திகதி

பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் கணபதி குருக்களின் வழிக்காட்டலிலும் கெங்காதரம்பிள்ளையின் தலைமையிலும் புனருத்தாபன மகாகும்பாபிஷேகம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆலய வளர்ச்சிக்காக ஆலய பரிபாலனத்தை 1964ம் ஆண்டு முதல் ஆலய பரிபாலன சபையின் மேற்பார்வையில் குறித்த ஆலயத்தை பொது நிர்வாகத்தின் ஊடாக செயற்பட ஊக்கமளித்தார். தீவுப்பகுதி மக்களின் விவசாய பொருளாதார அபிவிருத்திக்கு ஊக்கமளிக்கும் வகையில் சரவணையின் பணப்பயிராகிய புகையிலை வியாபாரத்தில் ஊர்மக்கள் ஊக்கம் பெற இலங்கையின் பலபாகங்களிலும் சந்தைப்படுத்துதலை மேற்கொள்ளும் முகமாக குருத்து, காயத்துகம எல்லிடியவில் தனது வியாபாரம் தலத்தை அமைத்துக் கொண்டனர். ஐயனாரின் அருளினாலும் திரு.வே. கெங்காதரம்பிள்ளையின் அன்பும், பண்பும், அவரது சிவந்த தோற்றத்தினாலும் அவர் தமிழ் மக்களால் மட்டுமல்ல சிங்கள மக்களாலும் விரும்பப்பட்ட ஒருவராக திகழ்ந்தார். இனக்கலவரத்திலும் சிங்கள மக்கள் சகோதரர் போல் பராமரித்து வந்தனர்.

திரு. வே. கெங்காதரம்பிள்ளையின் மூதாதையரின் ஊக்கத்தினால் தோற்றமளித்த ஐயனார் ஆலயமானது இன்று பல தடைகளையும் தாண்டி ஆலய பரிபாலன சபையின் ஊக்கத்தாலும் பொதுமக்களின் அனுசரணையினாலும் உருவாக்கப்பட்ட திருப்பணிசபையினால் ஆலயம் புனரமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. ஆலய கற்பகிருகம் கருங்கல்லினால் அமைக்கப்பட்டமை பெருஞ் சிறப்புக்கு உரிய ஒன்றாகும். தொடர்ந்தும் ஐயனாரின் திருப்பணிகளை நிறைவேற்றி ஐயனாரின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் ஆலய ஆரம்பகர்த்தாக்களின் குடும்ப வாரிசுகளாகிய நாம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஐயனார் அருள்வேட்டலும், திருவூஞ்சலும்

தில்லைச்சிவன்

ஐயனார் அருள் வேட்டல்

காப்பு

வெள்ளைப்புற் றாமடியில் விக்கினங்கள் நீக்கியருள்
பிள்ளைக் கணபதியே பெட்பாள – நல்லூராம்
கட்டுவன்வான் ஐயன்மேற் கிவிபாடச் சொற்பொருளில்
முட்டின்றிக் காக்கமுன் வா.

ஐயனார் அருள் வேட்டல்

பொன்னொளிர் சடாமுடிப் புனிதன் கருங்கடல்
வண்ண மேனியன் வாரண வாகனன்
அன்ன மெல்நடைப் பூரணை புட்கலை
அரிவை யர்மண வாளன் திருமிகு
மன்னு கட்டுவன் வான்பதி மேதகு
மகா சாத்தாதன் அருளினை வேண்டிநாம்
துன்னு காதலால் ஆயிரந் தோத்திரம்
சொல்லு வோம்புவி வாழ்வு சுவைக்கவே.

ஆலங்கால விடத்தினைத் தானுண்டு
அமுதை விண்ணவர்க் காக்கிய எம்பிரான்
காலகாலன் விரும்பிடச் சக்தியாம்
கரியமால்தரு கார்மேக வண்ணனே
கோல மார்திருக் கட்டுவன் வான்இளங்
குயிலுங்கிள்ளையும் பூவையுங் குலவிவாழ்
அழ(கு) ஆல் மரச்சோலையுட்கோயில் கொண்
டமரு மாறிங்கு அறைகுதல் ஆகுமோ.

உலகம்மூன்றையும் புரந்தளித் துவகைகொள்
உருத்திரன்வெள்ளை யானையை ஊர்திகொண்
டுலவுநாயகன் கார்மணி மேனியன்
உக்கிரன் ஒளி வச்சிரச் செண்டுளான்
குலவுசாரதர் தம்மொடும் பூரணை
குமிலிபுட்கலை யாளொடுங் கோயில்கொண்
டருளுங்கட்டுவன் வான்பதி சென்றுநாம்
அர்ச்சனைபுரிந் தவனருள் வேண்டுவாம்.
காக்குந்தெய்வம் நாம் கண்கண்ட தெய்வம்நற்
கருணைத்தெய்வம் கடல்நிறத் தெய்வஞ்சீர்

ஆக்குந்தெய்வம் அறிவொடு செம்பொருள்
அளிக்குந்தெய்வம் அபயம் எனவரின்
பார்க்குந்தெய்வம் பருவங்கள் நேருறப்
பணிக்குந்தெய்வம் பயன்தொழில் மேவிட
ஊக்குந்தெய்வம் உளதென்றாற் கட்டுவன்
உறையுந்தெய்வம் அரிகர ஐயனே.

கள்மால்எழில் விஞ்சுபேர் அழகுடன்
கவினுலாவுமோர் மோகினி வடிவுகொண்
டுள்ள மார்கர்வத் துடன்சிவ நிந்தைசெய்
துலவுதாருகா வனத்துறை அந்தணத்
தெள்ளிலாமுனி யோர்களை மாணழித்
தெருட்டிவென்றிகொள் திருவெழில், ஒப்பிலா
வெள்ளந்தாழ்சடை வேதியன் முயக்கினை
விரும்பத்தோன்றினன் அவனருள் வேண்டுவான்.

சசிகை பற்றி அசமுகிகையறத்
தடிந்தவாளினால் துன்முகி கையையும்
விசையில் வாங்கிய வீரமா காளரின்
வேந்தன் ஒப்பிலா அரிகரபுத்திரன்
வசியும் வன்மையும் வீரமுந்தந்துயர்
வண்டமிழ்க்குறு பகையொடு நலிவுசெய்
பசியும்போக்கி அபயம் அளித்தருள்
பாலிக்கக் கட்டுவன் வான்பதிமேவுவாம்.

ஐயழலம் கட்டுவன் வான்உறை
அழகழலம் சதுர்மறை போற்றிடும்
மெய்யழலம் கருங்கடல் மேனியாய்
மிளிர்பொற்பூரணை புட்கலை பக்கமார்
வெய்யசெண்டுகைக் கொண்டப யந்தர
வீரமாகாளர் ஆம்பூத கணங்களோ
டுய்யளம்துணை யாய்நிற்கும் ஒருவனே
ஒப்பிலா வீரர் நாயகத் தேவனே.
கண்ணம்மாதனைக் காதலித் தேசிவன்
கருதிப்பெற்ற ஒருதிருப் பாலனே
பன்னன்சூரற் கருள்செய்து வெற்புகொள்

மயலன்வேலனோ டானை முகத்தவன்
அண்ணராக அவதரித் துலகெலாம்
ஆளுப்பெற்றிகொள் அரிகர புத்திர!
விண்ணுலாம்புகழ்க் கட்டுவன் வானுறை
வீரதேவநின் அருளினை வேண்டுவாம்.

வானவர்சுரர் வணங்கிடும் தெய்வமே
வளமையோடென்றும் இளமை வழங்குவாய்
மானம்பேணும் உரத்தொடு அன்பறம்
மருவுசெல்வமும் கல்வியும் நல்குவாய்
ஈனமிக்குற அடிமையாய்ப் பிறர்புகழ்
ஏத்திவாழ்கின்ற வாழ்வினை எற்றியே
ஞானவாழ்வினைப் பெற்றிடக் கட்டுவன்
ஞாலம்வாழ்இறை நற்றுணை செய்தியால்.

"ஏவர்இங்குள்ளார் இவர்க்குறு துணை" யென
எண்ணிவெம்பகை எமைத்தொடும் வேளையில்
"காவல்உண்டு இவர்க்" கென்று படுந்துயர்
கடிதில் நீக்கிடக் காளரை ஏவுவாய்
பாவவல்வினை போக்கிடக் கட்டுவன்
பதியில் ஏர்திருக் கோவில்கொண் டேயருள்
மேவுநாயக கரிகர புத்திர
விஞ்சையஅடி தஞ்சமென் றர்கட்கே.

ஐயனார் திருவூஞ்சல்

காப்பு

செந்தமிழும் சிவநெறியும் சேர்ந்துவாழும்
திருவிடமாம் சரவணைக்கட் டுவன்வான்மேவி
சந்ததமும் அருள்மாரி பொழிந்துகாக்கும்
சதுர்வேதப் பொருளான ஐயனாருக்கு
சுந்தரமாம் பூரணைபுட் கலையினோடு
துய்யதிரு வூஞ்சற்பா யாத்துப்பாட
தந்திமுகன் நந்திமகன் ஐங்கரன் பூந்
தாள் பணிந்தோம் குறைநீக்கிக் காப்பதாமே.

அறிவரின் அருமறைகள் நான்குங் காலாய்
ஆகமங்கள் சட்டமதாய் அமையப் பூட்டி
பொருளினிய உபநிடத விட்டங் கட்டி
பொருந்துகலை எண்ணெட்டும் வடமதாக்கி
மருளகற்று மந்திரவா சனம் அமைத்து
மங்கையர் ஈர் பாகமுற ஊஞ்சல்மேவி
அருள்மிகுகட் டுவனைய ஆடீர் ஊஞ்சல்
அருந்தமிழில் இசைபாட ஆடீரூஞ்சல்

பொங்குகருங் கடல்எழுந்து வெண்சங்கூத
பூதகணம் எக்களித்துத் தாளங் கொட்ட
மங்கலநற் றாலிபுனை மாதர் நல்லார்
மலர்தூவித் திருவடியை வழுத்திநிற்க
சிங்கஇளம் மறவர்குலம் திருச்சீர்பாட
சேமிழையர் பூரணைபுட் கலையோடார்ந்து
கொங்கலர்பொற் கொன்றைமிகு கட்டுவன்வான்
குலவியருள் ஐயனே ஆடீரூஞ்சல்.

திங்கள்ஒளிக் குடைதூக்கி முன்னே நிற்கத்
தினகரவேள் உடனிருந்து சேவித்துய்ய
பொங்கரவச் சடைமுடியோன் அரனும்மாலும்
புண்டரிகத் தயனும் அயல்நின்று வாழ்த்த
செங்கமலத் திருவனையார் அருளார் பொற்புத்
தேஜஸ்உறு பூரணைபுட் கலையுஞ்சேர
மங்களஞ்சேர் கட்டுவான்வான் திருத்தலங்கொள்
மழைவண்ணத் தையனே ஆடீரூஞ்சல்.

செண்டாடு திருக்கரமும் திருவெண்ணீறு
திகழ்நுதலுஞ் செஞ்சடையும் ஆட ஆட
கொண்டாடும் சாரதர்கள் கூடி ஆர்க்கக்
குயில்பாட மயில்ஆடக் கவரிவீச
வண்டாடி முகையூதி இசைமிற்பாட
வனிதையர் ஈர் பக்கமிருந் தருளில்நோக்க
பண்பாடு மிகுசைவக் கட்டுவன்வான்
பதிகொண்ட ஐயனே ஆடீரூஞ்சல்

மாகாளன் வாள்தூக்கி வரிசை கூற
மயல் உண்ட மங்கையர்கள் கலைகொண்டாட
வாகான தோளுயர்த்திக் கணங்கள் சேர்ந்து
வாழ்த்திசைக்க வேதியர்மந் திரங்கள் ஓத
பாகான மொழிமடவார் பரதமோடு
பண்பாடப் பூரணைபுட் கலையுஞ்சேர
ஆகாவென் றுவகையுறு கட்டுவன்வான்
அமர்ந்தருள்செய் ஐயனே ஆடீரூஞ்சல்.

செக்கர்ஒளி வேணியனே ஆடீரூஞ்சல்.
செண்டோச்சு திருக்கரத்தாய் ஆடீரூஞ்சல்
மக்கள்துயர் மாற்றிடுவாய் ஆடீரூஞ்சல்
மாலரற்குத் திருமகனே ஆடீரூஞ்சல்
புக்கனையும் பூரணையும் பக்கஞ்சேர்த்துப்
பூங்கரங்கள் அரவணைக்க ஆடீரூஞ்சல்
உக்கிரனே கட்டுவன்வான் உறையுந்தேவே
உலகோப்பும் ஐயனே ஆடீரூஞ்சல்

அன்புடைய அடியார்கண் அருவிசோர
அந்தணர்கை நறியபுது மலர்கள் தூவ
துன்பகல்சீர் இதயர்திரு முறைவாய் கூற
தூயதிரு முறைகேட்டுச் செவிகள்ஆர
விண்டெரியும் கற்பூரம் மேனிநாற
விளங்குசுவை நாசிநுகர்ந் துள்ளம்பூக்க
இன்பளிக்கும் இருவருடன் கட்டுவன்வான்
இருந்தருளும் ஐயனே ஆடீரூஞ்சல்.

இந்திரனும் சசியும் வந்(து) தமக்கமைந்த
இடர்கூறி அபயம்கேட் டிறைஞ்சி நிற்க
வந்தனைசெய் மாகாளர் ஏவல் கேட்க
மாமருப்பு வாரணம்வந் தயலில்நிற்க
சுந்தரமார் பூரணைபுட் கலையினோடு
சுடர்காலுந் திருவூஞ்சல் மீதிருந்த
நந்திதரு மகாசாத்த கட்டுவன்வான்
நாயகமே ஐயனே ஆடீரூஞ்சல்.

அரிகரற்குப் புத்திரனாய் அவதரித்து
அவனிபுரந் தளிக்கவொரு ருத்திரராசி
பெருகுபல வரங்களினை இறைவன்ஈயப்
பெற்றதினால் பெருவீரத் தெய்வமென்றே
உருகுபல உளங்களெலாம் உறைந்துநீல
ஒளிகாலும் எழில்வண்ண சக்தியான
இருவோரும் அருகாகக் கட்டுவன்வான்
இருந்தருள்செய் தையனே ஆடீரூஞ்சல்.

உள்ளுபவர்க் குள்ளொளியாய் ஆடீரூஞ்சல்
ஊர்காக்கும் கரியோனே ஆடீரூஞ்சல்
தெள்ளுதமிழ்ப் பாவாணர் பாடக்கேட்டுத்
திளைத்தாட்டும் செஞ்சடையாய் ஆடீரூஞ்சல்
கிள்ளைமொழி யாருவக்க ஆடீரூஞ்சல்
கிளர்வேட்டைக் கிளவோனே ஆடீரூஞ்சல்
வள்ளல்அருள் நாயகமே கட்டுவன்வான்
வதிவிடங்கொள் ஐயனே ஆடீரூஞ்சல்.

வாழி

வாழிகட் டுவன்வான் ஐயன் வாழ்திருக் கோவில் சூழல்
வாழிசெந் தமிழ்நல் லாட்சி வளநகர் நாடா நாடு
ஆழிசூழ் உலகம் யாவும் அமைதிபூண் டருளிற் றுய்த்து
ஊழிதோ றூழி ஐயன் உறுபுகழ் பனைந்து வாழி.

தீவகம் வே.இராசலிங்கம்

மயிலப்புலம், திருப்பொலி கட்டுவன்வான்

அருள்மிகு ஐயனார் அருட்பாமாலை

திருப்பொலி ஐயனார் போற்றித் திருவகவல்

விநாயகர் காப்பு!

கட்டுவன்வா னையனார் காப்புப் பெருங்கதையைத்
தொட்டு முரசாக்கித் தூரலிட–முட்டும்
பனியுலகுந் தோன்றியருள் பாலிக்கும் பிள்ளைக்
கனியமுதன் ஐங்கரனே காப்பு!

அவையடக்கம்!

காவில் இருந்துலவிக் காக்கும் அரிகரர்க்குப்
பாவில் மருங்கிசைத்துப் பண்ணார்க்கும்–ஆவற்
பதிப்புலமே ஈது! பசும்புலமை இல்லான்
நொதிப்பென்று கொள்ளாதீர் நுண்!
பாடற் பொழுதும் படுதுயரின் மீக்கோடும்
வாடற் சருகாய் வளையவரும்–கூடற்
புலத்தா னொருவன் பெருந்துருவ முற்றும்
நிலத்தைப் பணிந்தான் நினை!

நூற்சிறப்பு!

சேவிப் பவர்க்குச் சிறப்பீவார் தொண்டாக்கிக்
கூவிப் பவர்க்குக் கொடைசெய்வார்–பாவிதனால்
சஞ்சார மாயுறையச் சாயுச்யம் சேரிட்டு
அஞ்சேல் எனவருவான் ஐயன்!
*சாயுச்யம்–ஆன்மா கடவுளொடும் ஐக்கியமாகும் நிலை
சித்திரைப் பௌர்ணமிச் செப்பார் திருநாளில்
முத்திவ் வகவல் மெருகார–வைத்து
இசையில் வடித்து இயங்குவார்க் கென்றும்
மிசையாகும் ஐயன் விருப்பு!

நூல்!

தீவகத் தாயின் திருப்பொலிப் பதியில்
மேவி அருள்செயும் மெய்யே போற்றி!
ஈழத் திலங்கை இருக்கும் வடபால்
ஆழப் புனல்மண் அகத்தாய் போற்றி!

யாழாம் புண்ணிய யாப்பின் மரபில்
வேழமாய் நின்ற வித்துவா போற்றி!
தமிழொடு பூக்குந் தார்மிகம் ததும்ப
அமிழ்தெனப் பூக்கும் ஐயனே போற்றி!
உயிர்க்குப் பவவினை ஒடுக்கும் அற்புத
மயிலப் புலமார் மன்னவா போற்றி!
போவோர் வருவோர் புகலுளார் தரித்துத்
தேவே என்குந் தீபா போற்றி!
எழில்மா காளை இழுக்கும் வண்டிகள்
வழிபா டியற்றும் மாண்புளாய் போற்றி!
பேரிருள் மாட்டுப் பேய்களைத் துரத்தி
ஊரினைக் காக்கும் ஓம்பவா போற்றி!
பூரணை புட்கலை பெய்வளை யாருடன்
ஆரருள் பொழியும் அச்சுதா போற்றி!
கிளுவையிற் தோன்றிக் கூடாய் ஆல்மரம்
தளுக்கவீற் றிருந்த தாட்சண்யா போற்றி!
கற்புரம் எரியக் காட்டியே உன்றன்
அற்புதம் கொடுத்த அஞ்சுகா போற்றி!
தெற்கில் நீள்வயல் துரவுகள் வடதாய்
சுற்றவீற் றிருக்கும் சித்திரா போற்றி!
பற்றைக் காட்டுப் பசும்புல் வெளிகாண்
அற்றைப் பசுக்களின் அம்பா போற்றி!
காவலிற் காவலாய் காத்து ஊர்மனைச்
சேவகன் ஆகிய சேந்தனே போற்றி!
பொன்போல் விளையும் பூமிப் பயிர்கள்
நன்செய் மருத்துவ நம்பியே போற்றி!
திண்தோள் காவும் தூருமண் வெட்டி
கொண்டோர்க் குதவும் குருவே போற்றி!
நெற்றியில் நீறும் நினைந்துள வீறும்
பற்றிய சீலரின் பக்தனே போற்றி!
சிவனார் அருளும் திசைகரன் பொறியும்
தவமாய்க் கொள்ளும் தத்துவா போற்றி!
நன்மைக் கனிவாய் நவின்றிடா விடத்தும்
அன்பையே பெருக்கும் அமுதா போற்றி!
இன்மய ராயினும் இறைத்துறை சாரும்

சின்மயர்க் குதவும் சிவகரி போற்றி!
நன்மை புரியார் நலமிலார் திருத்தித்
தின்மைத் தீயரைத் தீய்ப்பவா போற்றி!
சித்திர குப்தன் திருத்துறைப் புராணம்
கொத்தும் உரையுங் கேட்பவா போற்றி!
சித்திரைக் கஞ்சிமிற் செறிந்த மக்களைச்
சத்துடன் நிமிர்த்தும் சம்யுகா போற்றி!
தைப்பாற் பொங்கல் தாங்கிய விழாவில்
உப்பரி யூர்ந்து ஒளிர்பவா போற்றி!
வயல்நெல் குவித்த வாறாய் அவிசு
அயலொடும் களிக்கும் அம்பலா போற்றி!
பால்பழம் வெற்றிலை பாக்கொடு படையல்
ஆல்மரம் காண அருள்பவா போற்றி!
பொந்துஆல் இருந்து பொங்குபாற் சுளையெலாம்
சிந்திட உண்ணும் சுகுணா போற்றி!
மைந்தர்கள் வந்து மாநிழல் கற்கச்
சிந்தெனத் தமிழைச் சேர்ப்பவா போற்றி!
அந்திப் பொழுதில் ஆநெய் விளக்கில்
சிந்துபே ரொளியின் சோதியே போற்றி!
அய்யக் கலம்பகம் அணியுலாச் சந்தம்
செய்யக் கிடைத்த செண்பகா போற்றி!
வேட்டைத் திருவிழா வெளிக்கிட் டூர்ந்து
பாட்டும் பசனையும் படைப்பவா போற்றி!
வீடு வாசல்கள் வெளிவலம் பற்றிக்
கோட்டமாய் உலாவரும் கோவே போற்றி!
செம்பவ ளத்துறைச் சீர்மலி கின்றநற்
கும்பமந் திரத்துக் கோமகா போற்றி!
பனுவலும் பொழிப்பும் பகரநற் பூசையும்
மனுமுகம் பார்க்கும் மகேசா போற்றி!
கலையும் கூத்துங் கருத்தும் இசையும்
நிலைபெற் றுயர்ந்த நித்தியா போற்றி!
கரகம் மத்தளம் கம்பதீ யாடிடும்
நிரைக்குள் மகிழ்ந்திடும் நீதனே போற்றி!
ஆதன விளைச்சலும் அகல்நீர் வளமும்
சோதனைச் சித்தியும் சேர்ப்பவா போற்றி!

பாவம் பொடிபட பரிகர ணங்கள்
நீவத் தழிக்கும் நித்தியா போற்றி!
கட்டுவன் பாய்ந்து கரையுடைத் தோட
தொட்டுன் மருங்கிடும் தோத்திரா போற்றி!
மயிலஅம் புலமாய் மகிழ ஊர்ந்திடு
குயிலாய் ஒலிக்கும் கூத்தா போற்றி!
தயிரும் நெய்யும் தந்த பூமியின்
பயிராய் நின்ற பார்த்தனே போற்றி!
வேந்தனார் கற்ற விழுதாற் கோவிற்
காந்தனாய் இருந்த கற்பகா போற்றி!
ஆனிஅ மாவாசை யதற்குமுன் சதுர்த்தி
தேனிற் பொங்குநாள் தேர்ந்தவா போற்றி!
நேர்த்தி வைத்து நிசத்தொடு ஆக்கச்
சேர்ப்பார் திரளும் திருமுகா போற்றி!
அய்யங் கொடுத்து அகத்தொடு மாந்தி
மெய்வந் துறைய விஞ்சுவாய் போற்றி!
காக்க காக்க கடும்பேய் உருட்டி
மீக்குறச் செய்யும் மேதகா போற்றி!
நாதஞ் செறிந்த நாதத்துள் நாதமாய்
கீதஞ் செறிந்த கீர்த்திகா போற்றி!
திரிகர ணத்துள் தீய்ந்த உளமொடும்
புரிகர ணஞ்செய் போதகா போற்றி!
நன்னியர் பின்னே நவிர்பல் லோரொடும்
பின்னிய ஆலயப் புகலுளாய் போற்றி!
வேலுப் பிள்ளை விளங்குகெங் காதரன்
சாலிடப் புரமாய்ச் சார்ந்தவா போற்றி!
நோய்வந் தெற்றினும் நுவன்றிடத் துன்பம்
பாய்வந் துளலினும் பார்ப்பவா போற்றி!
அவுணன் பரசுனை அழிப்பதற் கென்றே
நிபுணத் தோன்றலாம் நிமலா போற்றி!
ஐயனார் தோன்றி அருட்பலம் மேப்படும்
ஐயப்பன் ஆகிய அப்பா போற்றி!
தோன்றலர் பொய்கைத் துட்பொருள் ஆகித்
தான்தோன் றியாகிடும் தம்பிரா போற்றி!
ஆன்ற மலங்கள் அழித்து நவையிலாத்

தோன்றல் ஆக்கிடும் தீட்சிகா போற்றி!
ஈன்ற விளக்கொடு இருளிலே வந்து
ஊன்றும் மனைவழி உலவுவாய் போற்றி!
நேர்வழிப் பின்தெரு நிசவழி நினைனைப்போர்
ஊர்வழி அபயம் ஓம்புவாய் போற்றி!
உத்தம மகளிர் உலாவந் தேற்ற
நித்தமும் ஒளிதரும் நேர்முகா போற்றி!
துரவிலே நின்று துலாமிதிப் போரை
அரவம் பேய்படா(து) தணைப்பாய் போற்றி!
கற்பனை கனல்மொழி கணிதம் ஆக்கிட
அற்புதம் செய்யும் ஐயனே போற்றி!
அம்பா இம்பா உம்பா நம்பா
எம்பா வென்கும் எம்பிரா போற்றி!
கும்பத் தெய்வநீர் கோமமாய் ஆக்கியெம்
செம்புலம் பரப்பும் தீர்த்தா போற்றி!
மாணவ மணிகள் மடைதிறந் தாற்றும்
பேணவா விழாவின் பிதாமகா போற்றி!
தில்லைச் சிவனார் தீரா வேட்கைக்
கல்லையிற் பூத்த கற்பகா போற்றி!
தில்லை நாதத் தீம்புலப் புலவன்
முல்லைத் தமிழில் முகிழ்ப்பவா போற்றி!
தேன்கவி முகிலன் தீரா துழன்றும்
வான்கவி பாட வைத்தவா போற்றி
பண்டிதர் பாவலர் எண்ணிலார் ஏற்றத்
தண்தமிழ் தந்த தம்பிரா போற்றி!
விடியதி காலை வெள்ளி முளையிட
நெடியதாய் ஆல்தரும் நிழலே போற்றி!
பச்சைக் கிளிகள் பவளவாய் மைனா
உச்சியிற் பறக்க உலங்குவாய் போற்றி!
கொம்பில் ஓடிக் குஞ்சு அணில்கள்
உம்பர் ஆக்கிய ஓங்கரா போற்றி!
திரிகரணம் நீக்கித் தீர்த்து மும்மலப்
பரிகரணம் காட்டும் பரமா போற்றி!
கன்னியர் காளையர் காந்தத் திருநிலம்
முன்னகக் காவல் முதல்வனே போற்றி!

திருவுலாப் போந்து தூயேழ் மடவார்
உருகும் மனவெளி உலாவே போற்றி!
பூரணை புட்கலை பெய்வளைத் தெய்வார்
ஆரணங் கோடுறும் அம்நிலா போற்றி!
பேரலை வார்கடல் புக்குவாய் காக்கும்
காரலை மைந்தக் கடற்கோ போற்றி!
கந்தகத் தீயில் கருகிடா நின்ற
அந்தமிற் கோவில் அச்சுதா போற்றி!
ஆத்தி சூடி ஆகியொன் றியத்தால்
ஏத்திடும் கோவில் ஏரொளி போற்றி!
கண்டதும் கனிந்ததும் விண்டதும் நோக்க
விண்டிறல் தந்த வியாபகா போற்றி!
மண்கும் பாரிள நீரொடும் குளித்து
எண்திறல் முழுக்கு இடுபவா போற்றி!
கதலி வாழைநற் கனிமா பலாவும்
அதர்வினாய்ப் படைக்க ஆள்பவா போற்றி!
நான்மறை வேதம் நவின்றமந் திரங்கள்
பான்ஒளிப் பூட்டும் பஞ்சரா போற்றி!
பால்முழுக் காடிப் பஞ்சா மிர்தத்
தால்கனிந் தாக்கிடும் தாட்சண்யா போற்றி!
மயல்உறு மாந்தர் மனவெளி புகுந்து
கயல்எனப் பாயும் கருத்தனே போற்றி!
பாடிய பாட்டும் ஏடிடும் கலையும்
சூடிடக் கனிந்த தேவா போற்றி!
அத்துவா காட்டி பித்துளம் போக்கித்
தத்துவம் காட்டும் தங்கனே போற்றி!
ஊனிற் பெருவலிக் குள்ளொளி காட்டி
தேனிற் பிறவி துய்ப்பவா போற்றி!
சித்திர புத்திரன் திருக்கதை யாக்கி
முத்தியைக் காட்டும் மேலவா போற்றி!
பெருங்கதை பாட விரிவுரை கூற
மருங்குலார் கேட்க வைத்தவா போற்றி!
வான்இறைத் தேவ வண்ணமும் காட்டி
நான்அகங் காரம் நத்துவாய் போற்றி!
முன்னர் வினையும் மூடிய வினையும்

நன்னெறி யாக்கி நல்குவாய் போற்றி!
ஆனியிற் றலைக்கும் அலையென மக்கள்
பானையிற் பொங்கும் பரிமளா போற்றி!
அடைக்கலம் காத்த அய்யனா ராகிப்
படைக்கலம் வைத்த பகலவா போற்றி!
கறுப்பு ஐயனார் கானவீ ரப்பராய்
நொறுக்கிடும் சேனை நிலமுளாய் போற்றி!
சாஸ்தா என்கச் சபரி யூர்ந்தவர்
ஆஸ்தா னத்து அம்புஜா போற்றி!
உலகுக்கு முந்திய ஓர்நூற் றாண்டிலும்
புலவு காததநற் பிரணவா போற்றி!
பேய்கள் சூனியம் புதர்கள் அண்டிய
நோய்களும் நீக்கி நூர்ப்பவா போற்றி!
ஆர்க்கா டுறையூர் அருஞ்சொல் ஐயனார்
கூர்க்கல் வெட்டுக் கூத்தனே போற்றி!
ஐயா என்றும் அய்யனே என்றும்
கைவாள் கொண்டு காப்பவா போற்றி!
குதிரைமா ஏறிக் கொம்பருட் புகுந்து
அதிருமணி காத்த அடற்பரி போற்றி!
அடைக்கலம் காத்த அய்யனார் என்று
படைக்கலம் கொண்ட பார்த்திபா போற்றி!
வெள்ளைக் குதிரை வீரனாய்ச் சுற்றிக்
கள்ளரைத் துரத்தும் கருத்தா போற்றி!
சேவகப் பெருமாள் செய்யனார் என்றும்
காவகம் செய்த காப்பியா போற்றி!
திருப்பொலி வீரா தெய்வப் புலவா
இருப்பிலே கட்டுவ னிருப்பே போற்றி!
மயிலப் புலத்து மாதவா பள்ளம்
பயிர்ப்புல வனத்துப் பாலகா போற்றி!
கெங்கா தரனின் கீழ்நிலம் ஆகிபின்
பங்காய் மக்களைப் படர்ந்தவா போற்றி!
ஏற்பார் நூற்பார் ஆர்ப்பார் காப்பார்
நோற்பார் போற்றிடும் நித்தியா போற்றி!
ஐயனார்த் தோன்றல் ஐயப்ப னாகி
மையலாய் மாறிய மணிகண்டா போற்றி!

சாதா போற்றி! சம்யுகா போற்றி!
போதார்ப் பொலியே போற்றி போற்றி!

ஐயனார் விண்ணப்பத் திருவுளப் பாடல்கள்!

பள்ளம் புலத்தும் மயிலப் புலத்தும் மகிழ்ந்துலவி
அள்ளக் கவரும் திருப்பொலிக் கட்டுவன் ஆலயத்தும்
தெள்ளத் தெளிவாய் உருகிப் பொலிந்து தெளிந்தநிலம்
வள்ளற் கரமாய் வழங்கப் பொலிந்தாய் மணிக்கரனே!

ஊரும் பரவத் துலகும் பரவத் தொளிர்வதனம்
பேரும் பரவப் புகழும் பரவப் புரிதுதியில்
வேரும் பரவ விளங்கும் தமிழார் விரிகவியிற்
சேரும் திரவியத் தோரொடு மானாய் சிவனரியே!

அச்சில் வடித்தவர் ஆலயச் சிற்பிய ராமொடுபல்
மெச்சும் கலையுள மேன்மையர் பற்பல மெய்யுழைப்பார்
துச்சமென் றாகத் திருப்பொலி அய்யனைச் சுமந்தவர்கள்
உச்சிகள் மோந்து உனதருள் ஈவாய் அரிகரனே!

இந்தநற் பாவொடும் ஈர்த்துரைத் திட்டவர் ஏற்பநின்று
வந்தறம் தந்தவர் வாருழைப் பாக்கிய வண்ணமுளார்
பந்தறும் பாகப் பவவினை எல்லாம் பகுத்தெடுத்து
அந்தமில் லாரருள் ஆக்குவை யாமெங்கள் அய்யனாரே!

ஆத்திசூடி மக்களின் ஒன்றியம் ஆக்கும் அணித்தொடர்
ஏத்தி யிருத்தப் பொலிகிற தாமுயர் இன்பணிதான்
வாத்தியார் ஆக நினதருள் ஆக்கும் வனிதமதின்
சூத்திரம் அன்றோ? திருவருள் செய்வாய் திருக்கரனே!

பஜனைப் பாடல்கள்

01. ஓடிவா ஓடிவா அய்யனாரே

உள்ளம் இனிக்குதடா ஐயனாரே!–எங்கள்
ஊரும் களிக்குதடா ஐயனாரே!
வெள்ளைக் குதிரையிலே ஐயனாரே!–பவனி
வெளிச்சம் வருகுதடா ஐயனாரே! – உள்ளம்

பார்க்கும் இடங்களெல்லாம் ஐயனாரே–உந்தன்
பாதம் தெரியுதடா ஐயனாரே!
வேர்க்குள் உதித்துவந்த ஐயனாரே–உன்றன்
விருட்சம் தழைக்குதடா ஐயனாரே! ! – உள்ளம்

கற்பூரம் மணக்குதடா ஐயனாரே–உன்னைக்
கண்டமனம் சிலிர்க்குதடா ஐயனாரே!
அற்புதத் திருப்பொலியில் ஐயனாரே–உன்றன்
அலங்காரம் ஜொலிக்குதடா ஐயனாரே! ! – உள்ளம்

ஓடிவா ஓடிவா அய்யனாரே–உனக்கு
ஊர்சிறக்கப் பொங்கலுண்டு அய்யனாரே!
கூடிவந்தார் பாடிவந்தார் அய்யனாரே–உன்றன்
கூட்டமொன்று சேர்ந்ததடா அய்யனாரே! – உள்ளம்
காண மனமினிக்கும் அய்யனாரே!–உன்றன்
காட்சி தெரியுதடா அய்யனாரே!
வாண வெளிச்சமொடு அய்யனாரே–நீ
வந்தருளைத் தந்துவிடு அய்யனாரே! ! – உள்ளம்

02. ஓடிவா ஓடிவா அய்யனாரே ஓடிவா!

பூரணை புட்கலை ஆரணங்கார்!–சேரப்
பொலிய வலம்வரும் வாரணனே!
ஊரின் முனையெலாம் காவலிடும்–அய்யன்
உலங்கும் ஊர்தியாம் காரணனே!
வெள்ளைப் பரிதியில் துள்ளிப் பறந்துமே

அள்ளும் நிலத்தைநீ காத்திடுவாய்!
உள்ளப் படுகையில் உன்னை மிதித்தவர்
முள்ளுச் செயலைநீ நீக்கிடுவாய்!

மதிப்பவர் தம்மைநீ மதித்துவா–ஓடி
மிதிப்பவர் தம்மைநீ விலக்கிவா!
கதிப்புயல் நீக்கிடும் கரிகரா–எங்கள்
நொதிப்புயல் நீக்கநீ ஓடிவா!

சாத்தா மேத்தா சம்யுக்தா–நீ
சங்கரன் அரிபிள்ளை அல்லவா!
ஆத்தையே காத்திடும் அரிகரா!–உன்னை
ஆடிப் பாடினோம் ஓடிவா!

மணிகண்டா மாதாபி தாவன்றோ–நீ
வாஞ்சைக் காவலன் தானன்றோ!
அணிகொண்ட கருஞ்சாமி ஆளன்றோ!
ஆடினோம் பாடினோம் வாவன்றோ!

03. மயிலப்புலம் ஐயனாரே!

பல்லவி

ஆலமரம் அடியிருக்கும் ஐயனாரே–மயிலைக்
கோலநிலம் காவல்செய்யும் ஐயனாரே..ஐயா.. –ஆலமரம்

அனுபல்லவி

காலமெல்லாம் காரிருளும் காக்கவருவாய்–உன்னைக்
கைதொழுது கண்டவன்யான் பார்க்கவருவாய் ..ஐயா –ஆலமரம்

சரணம்

சோலைநிலம் உந்தனுக்குச் சொந்தமல்லவா–நீ
சுற்றிவந்து பார்வையிடும் வேந்தனல்லவா!
காலையிலும் மாலையிலும் மணியொலிக்குமே–அந்தக்
கணப்பொழுதில் ஊர்முழுதும் உனைநினைக்குமே! –ஆலமரம்
நீயிருந்த அன்னைமண்ணில் உன்னைவிட்டேன்–நில
நெருப்புவந்து சூழ்ந்ததினால் என்னைவிட்டேன்
தாயிருந்த தேசமண்ணில் தீயிருக்கவோ–ஐயன்
தங்கநிலம் தறிகெடநீ பார்த்திருப்பதோ..! –ஆலமரம்

சோதிமய மானவெங்கள் ஐயனாரே–நீ
சூழ்ந்ததுன்பம் நீக்கிடுவாய் ஐயனாரே
ஆதிமுதல் தெய்வமெங்கள் ஐயனாரே–எங்கள்
அன்னைமண்ணின் துயர்களைவாய் ஐயனாரே! –ஆலமரம்

04. வேட்டைக்குப் புறப்பட்டு வாருமையா!

தொண்டர் குழாமெழுந்(து) ஆர்க்க ஆர்க்க
தேவாரப் பண்கொண்டு ஆர்க்க ஆர்க்க
வண்டு மகளிர்கள் வந்து பார்க்க
வாராய் உலாக்கொண்டு அய்ய னாரே!

வேட்டைக்குப் புறப்பட்டு வாரும் ஐயா!–உன்றன்
வெள்ளைக் குதிரையிலே வாரும் ஐயா!
கோட்டையின் காவலாய் வாரும் ஐயா!–தமிழ்க்
கூத்து ஒலித்திட வாரும் ஐயா!

ஊருக்குள் உன்னுலாக் காணவென்று–ஒன்றாய்
எல்லோரும் வீதியிற் கூடிநின்று
நேருக்கு மடையொடு அமுதுமிட்டு–தீப
நேர்த்தி வைத்தாரையா வாரும் ஐயா!

மாடுகள் கட்டி நெல்லடிக்கும்–அந்த
மாணிக்க மண்ணைநீ பாருமையா!
ஆடுகள் பாற்பசு நிலம்நனைக்கும்–அந்த
அழகான பூமியைத் தாருமையா!

கைத்தாளம் போட்டுக் கரகங்கள் ஆடி–மயில்
காவடி யோடுவுன் குதிரை பின்னோடி
அத்தா அத்தாவென் றழைத்திடப் பாடி–உலா
ஆக்கிடும் கூட்டத்தை வந்திடு தேடி!

05. அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் அய்யனாரே சரணம்!
ஆடிப் பாடிக் காணவந்தோம்
அய்யனாரே சரணம்–திருப்பொலி

அய்யனாரே சரணம்!
கைய்யில் ஒரு உடுக்கெடுத்துக் கானமொடு வீணைசெய்து
காணவென்று ஓடிவந்தோம் அய்யனாரே!–உன்னைக்
காணவென்று ஓடிவந்தோம் அய்யனாரே!

அய்யனாரே சரணம்

நெய்யிலொரு விளக்கெடுத்துத் நெய்வேத்தி யழுதும்செய்து
மையல்கொண்டு வாசல்வந்தோம் அய்யனாரே!–மயிலைக்
கோவில்வந்து ஆடுகின்றோம் அய்யனாரே!
தையல்இரண்டு பாகம்கொண்டு தானைப்பரி மீதுநின்று
தங்கமுகம் தந்தருள்வாய் அய்யனாரே–உன்றன்
பொங்குமருள் வேண்டுகின்றொம் அய்யனாரே!

அய்யனாரே

தம்பிமயில் முருகன்வந்து தங்கவடி வேலும்கொண்டு
அம்பியுன்னைக் கண்டுநிற்பான் அய்யனாரே–தமிழ்
அள்ளுமிசை பொங்கநிற்பான் அய்யனாரே!
எங்கதுயர் நீயும்கொண்டு இன்னலுள்ள ஊரும்கண்டு
ஏறும்பரி மீதுவாராய் அய்யனாரே–பரி
காரமென காவல்செய்வாய் அய்யனாரே!

அய்யனாரே சரணம்

06. குருவே சரணம்!

அய்யனாரே சரணம் ஓம் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் ஓம் அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் சிறீ அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் சிறீ அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் குரு அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் குரு அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் மணி அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் மணி அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் ஈழ அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் ஈழ அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் தேவ அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் தேவ அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் காவல் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் காவல் அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் பூரணை அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் புட்கலை அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் சோதி அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் சோதி அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் காவல் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் காவல் அய்யனாரே சரணம்!

அய்யனாரே சரணம் அருளும் அய்யனாரே சரணம்!
அய்யனாரே சரணம் அருளும் அய்யனாரே சரணம்!

07. காவலா! சேவகா!

காவலா சேவகா கருப்புசாமி போலவா
ஆவலாய் உள்ளோம் அய்யா
அய்யனாரே வாவாவா —காவலா

தேவனே வாவாவா திருப்பொலி வாவாவா
தீமையைக் காய்க்கவே
துள்ளித்துள்ளி வாவாவா! —காவலா

கட்டுவன் ஐயனே காணக்காண ஓடிவா!
கொட்டுமுர சார்க்கவே
சாத்தாநீ வாவாவா —காவலா

மயிலப்புல மன்னவா மாபரியில் ஏறிவா
தமிர்மத்து ஓசையிலே
தங்கநடம் ஆடிவா! –காவலா

பள்ளம்புல வேந்தாவா பயிர்நிலம் செழிக்கவா!
உள்ளமே சிலிர்க்கவா
உவப்பாக இனிக்கவா! –காவலா

ஆத்திசூடி மன்றாவா ஆலயத்துட் பொன்னேவா!
ஏத்தியேத்தித் தொழுதோம்வா
எழிற்கோவில் ஆனவா! –காவலா

ஆலமரத் தாயவா அரும்தோன்றல் ஆனவா!
காலகாலா வாவாவா
கரிகரா வாவாவா! –காவலா

08. அழகான கோவில் அய்யாவா!

மாணவர்கள் விழாவெடுக்க மகிழும் தேவனே
ஆணவத்தைப் போக்கிவினை அழிக்கும் தேவனே! –மாணவர்கள்

காணவெனக் காட்சிநல்கும் காவல் நாயகா!
மாணவிளக் கெடுத்துச் செல்லும் மணிகண்டா! ! –மாணவர்கள்

சோழாவத்தை ஆத்திசூடி செல்லும்வீதி மருங்கெலாம்
சூழநின்று காவல்செய்யும் சிவன்கரியின் புத்திரா! –மாணவர்கள்

வேட்டைக்கு வாவாவா வெள்ளைப்பரி மீதுவா!
கோட்டைக்கு ராசாவா கொள்ளுமணி கண்டாவா! ! –மாணவர்கள்

கலைகளிலே வாழ்வோய்வா காவடிகள் ஏற்போய்வா!
அலையெனவே தோத்திரங்கள் ஆக்கிடவே கேட்கவா! –மாணவர்கள்

வாழ்ந்தநிலம் மீளமீண்டும் வாழவென்று வாவாவா!
ஆழ்ந்தபற்று மைந்தர்கோவில் ஆக்கிவைத்தார் வாவாவா! –மாணவர்கள்

அய்யாவா மணிகண்டா வா
சாத்தாவா சங்கு ஆர்க்கவா!
வெள்ளைக்குதிரை வீரா வா!
வீரக்கருசாமித் தேவா வா! !
–மாணவர்கள்

09. அகிலமெலாம் வாழுகின்ற தேன்தமிழா!

அகிலமெலாம் வாழுகின்ற தேன்தமிழா–மயிலை
அய்யனார் கோவில்காண வாவா..வா –
அகிலமெல்லாம்

சுகிமடைமில் பொங்கல்கண்ட ஆலயத்தைச்
சோதிமய மாக்கி வைத்தார் காணவா வா.. –
அகிலமெல்லாம்

ஊனுறக்கம் இன்றிமைந்தர் ஓர்மமுற்றார்–எங்கும்
ஓடியோடி பொருள்குவித்துப் புதுக்கிவைத்தார்!
பூனைகளும் ஓடிவிட்ட புகழ்நிலத்தை–இன்று
புதுக்கிவைத்தார் செழிக்கவைத்தார் புகழவைத்தார் –
அகிலமெல்லாம்

வெள்ளைப்பரி மீதுறைவான் எங்கள் தேவன்–மழை
வெள்ளமெலாம் சூழுமனை நின்று காப்பான்!
அள்ளுமக்கள் சூழநிற்க அருள் கொடுப்பான்–புது
ஆலயத்துள் வந்துவிட்டான் காணவாரீர்! –
அகிலமெல்லாம்

10. தமிழ் தந்து என்னை..!

அய்யனாரு ஆலயத்தை
வந்துபாருங்க!
அட வந்துபாருங்க! –அய்யன்
வண்ணமுகம் கொண்டபதி
வடிவைப் பாருங்க!–அய்யா
வந்து பாருங்க!
–அய்யனாரு

நெய்யிலபி ஷேகம்தன்னை
நெஞ்சில் காணுங்க!
நீங்க நெஞ்சில் காணுங்க–தீபம்
நெக்குருகிக் காணும்சோதி
நிசத்தைப் பாருங்க!–நீங்க
நிசத்தைப் பாருங்க! –அய்யனாரு

கையிலுடுக் கடித்தடித்துக்
கானம்பாடுங்க!–அய்யன்
கானம் பாடுங்க!
கடலைப்போலே அருளைக்காட்டும்
காட்சிபாருங்க!–அவன்
கண்ணைப் பாருங்க! –அய்யனாரு

வெள்ளைக்குதிரை மீதுஏறும்
வீரன்பாருங்க–அந்த
வீரம் பாருங்க!
வேட்டையாடி நாட்டைக் காக்கும்
வேளை பாருங்க–அவன்
விருதைப் பாருங்க! –அய்யனாரு

தாள மேளம் நாதவெள்ளம்
ததும்பும் பாருங்க–அரிகரத்
தாடல் பாருங்க!
சூழும் மக்கள் பொங்கலிடும்
தெய்வம் தானுங்க–அய்யனார்த்
தெய்வம் தானுங்க!

பாடல்கள்

ஐயனே உன் கருணை ஒளி வேண்டும்

தீவகதியாகன்

கட்டுவன்வான் பதியமர்ந்த காவல் தெய்வமே – எங்கள்
கண்விழிநீர் காயவினை ஓட்டும் ஐயனே (கட்டுவன்வான்....)

ஆலமரச் சோலைகொண்டு நின்ற தெய்வமே – அங்கு
அடிதொழுது நின்றுருகும் அன்பர்தம்குறை
விட்டெழுந்த வேலெனவே விரட்டும் உன்விழி – கண்டு
விரைந்தடைந்தோம் உன்திருத்தாள் ஐயந்தணை (கட்டுவன்வான்....)

வடதெருவின் கடல் அருகாய் வந்தமர்ந்தெமை – ஐய
வாட்டும்பகை கொடியவினை வாட்டி நின்றநாள்
தேற்றியெமை எழுந்திடமுன் நின்ற தெய்வமே – அப்பா
தேனுனக்கு ஈடெதடா...? எங்கள் ஐயனே (கட்டுவன்வான்.....)

வேட்டையிடத் தோளிலுன்னை வேண்டி நின்றநாள் – இன்றாய்
வேதனைதான் கொள்ளுதடா வேண்டி அந்த நாள்
போட்டியிட்டுக் காவவுன்னைப் பொழுது இல்லையே –எம்
புண்படுமே மனதுபொங்கும் வேளை வல்லையே (கட்டுவன்வான்....)

சித்திரை நாட் கஞ்சியின்னும் தேடுது அப்பா – ஐய
சிற்பரனே சிவகரியின் செல்வ மைந்தனே
அற்புதனே இளநீர் அபிஷேக மீதியை – நாமும்
அடித்துடைத்துத் தின்றதிரு நாள் இன்றில்லையோ...? (கட்டுவன்வான்....)

ஓடி ஓடி ஓடிநின்ற போதிலும் உன்னை – நாமும்
ஓர் நொடிதான் மறந்தும் இல்லை ஐயதெய்வமே
வேண்டி நிதம் வேண்டிநின்றோம் எம் வேதனை சொல்ல – இன்று
வேளையுனக் குற்றதடா நின்றது கொல்ல (கட்டுவன்வான்....)

கோடி கோடி கோடிசெல்வம் குவித்து ஐயனே – உன்னை
குதூகலமாய்த் தூக்கிவைத்தோம் கோவில் கொண்டுமே
ஆக அதுகல்லடா ஐயதெய்வமே – உந்தன்
அடியரது அன்புமலை வாசல் தானடா (கட்டுவன்வான்....)

பித்தெனநாம் பித்தெனநாம் பிதற்றி நின்றிட – எம்மைப்
பெற்றவனே கட்டுவனின் பிரிய மைந்தனே
கொட்டிவிழி தான் சொரிந்தோம் கொடியதாம் இருள் உள்ளக்
கோயிலெழுந் துற்றவனே கொய்து கார் எம்மை (கட்டுவன்வான்....)

கட்டுவன் வான் ஐயனார் பாடல்

பா. சசிகுமார்

கட்டுவன் வான் பதி ஐயனாரே
தங்கத் தாமரை பூமுகம் மலர்ந்தவனே
கிளுவையில் ஒளியாய்த் தெரிந்தவனே
எம்மை அழுதிடா வண்ணம் காப்பவனே
பூரணை புற்கலை நாயகனே
இந்த புவனத்தை நீதானே காப்பவனே
ஆலமரச் சோலையில் வாழ்பவனே
எம்மை ஆளவந்து கோயில் கொண்டு அருளும் ஐயனே
காவலுக்கு உன்போல் தெய்வம் இல்லை
உன்னைக் கைதொழுதார் வாழ்வினிலே துன்பம் இல்லை
எங்களுக்கு உன்னை விட்டால் யாரும் இல்லை
ஏழைகட்கு அருளுகின்ற அழகுத் தெய்வமே.
சங்கர நாரணன் பெற்ற பிள்ளையே
சர்வலோகம் ஆளவந்து அமர்ந்ததிங்கயே
நாங்கள் வரம் கேட்பது ஒன்றுதானே
துன்பமில்லா வாழ்வு ஒன்று மட்டும் தானே
அன்பு கொண்ட இதயத்துக்கு அருளும் நாதனே
எங்கள் கட்டுவன் வான் பதி உறையும் தெய்வமே
தங்கமே உந்தனது தாழ் பணிந்தோம்
தாமரை முகம் மலர்ந்து அருள் தருவாய்
சோலையில் வாழுகின்ற சுடர் நிலவே
இந்த ஏழையின் நெஞ்சமதில் அமர்ந்திடவே
வாழ்வினில் எல்லாம் வளம் பெறுமே – என்றும்
வசந்தம் என்னோடு வந்து சேருமே
வடதெருவின் அருகே கடல் மோதும்
இங்கு செந்தமிழில் தானே குயில்பாடும்
சிற்பம் நிறை சிங்காரக் கோயில் உறையும்
சிவகரியின் மைந்தனே உன் அருளே வேண்டும்.
சலசலக்கும் நீர் ஓடையில் சங்கீதம்
சரண கோஷம் போடுதய்யா எந்நாளும்
கட்டுவன் குளத்து மீன்களெல்லாம்
ஐயனை வாழத்தியே பாட்டிசைக்கும்.

சுவாமியே சரணம் ஐயப்பா

நினைவழியா நாட்கள்

நினைவிருக்கா – ஐயா – நினைவிருக்கா
நின்னடிமை என்னைத் தெரிகிறதா
கேட்கிறதா ஏழை என் முனகல்
புரிகிறதா ஐயா தெரிகிறதா

சின்ன வயதிலே உன் ஆலம் விழுதிலே
ஊஞ்சலாடினேனே – மறந்தனையோ
வண்ண மொழி பேசி பள்ளி செல்கையில்
உன்னைப் பார்த்துச் செல்வேன் நினைவிருக்கா
என் வாசல் கதவு திறந்துன் வண்ண முகங்கண்டு
நாளும் மகிழ்வேனே நினைவிருக்கா
உன் நாமம் வாயார ஓயாது சொல்லி
வந்தனை செய்தேனே நனைவிருக்கா...

நட்ட நடு நிசியில் நாச்சிமார் கோவில்வரை
நாளும் சென்று வருவாயே
பட்டப் பகலிலும் பூட்டிய கருவறையில்
பல கதை பேசிச் சிரிப்பாயே
பாவி மனம் என்றும் புலம்பித்தவிக்கையிலே
பார் என்னை என்று சொல்வாயே
ஆவி போகையிலும் கூவி அழைப்பேன் நான்
ஐயனே நின் சேவடி சேர்த்திடுவாயே.

தான் தோன்றி அம்மனின் வாகனம் உந்தனுக்கு
கசந்ததோ இல்லை கடுப்பாகியதோ
வானுடன் வண்டிலை மோதிட வைத்துனக்கு
வாகனம் சொந்தமாய் தேடினாயே
கானுறையும் தெய்வமே ஆலமரத்தடியானே உனை
காண ஆயிரம் கண் போதாதே
ஊனுடம்பு நீக்கி உன் சேவடி சேர்த்திட
உறுதியாய் என்னுடன் இருப்பாயோ...

உன் அலங்கார உற்சவம் காண மறுத்தவரை
உக்கிரமாய் எழுந்தே உணர வைத்தாய்
கண்முண்னே ஆலங்கொப்பை வீழ்த்தியே
கடிதென சம்மதம் செய்ய வைத்தாய்
வீண்வாதம் செய்து விலகி நின்றோரும்
வந்தனை செய்திட வரமளித்தாய்
என் ஐயனே பூரணை புஷ்கலை நாதனே
உன் அற்புதங்கள் கோடி கோடி மறப்பேனா

ஓலைப் பிழாவிலே சித்திரைக்கஞ்சி குடிக்க
ஓடி வருவோமே நாமெல்லாம் கூடி
வழுக்கல் தேங்காய் குத்திச் சாப்பிட்டு
வயிற்று வலியிலும் சிரித்திருப்போம்
வாழை வெட்டும் வேட்டைத்திருவிழாவும்
வாசல் தோறும் பரப்பிய மடையும்
ஆழமாய் பதிந்தே அலற வைக்குதே
ஆலடியானே இதெல்லாம் இனி எப்போ...?

வண்ண விளக்குகள் வாண வேடிக்கைகள்
வடக்கு வீதியில் வைரமுத்து நாடகங்கள்
கணபதி ஐயரின் கடலை அவல் சுண்டல்
கண்முன் நிற்குதே பொரித்த மோதகம்
முல்லைச் சோதரிகளின் மதுர கீதத்தில்
முத்துச் சப்பறத்தில் உந்தன் வீதியுலா
அல்லல் நீக்கி அருள்மழை பொழிந்த
அருங்காட்சி என்னே.... மறக்கமுடியலயே

தென்றல் தவழ் உந்தன் முன்றலிலே
தெம்மாங்கு பாடி சிகரம் கட்டி
சின்ன மேளமொடு சின்னமணி வில்லுப்பாட்டும்
சின்னராசா வோடு கூடலூர் வடிவேலும்
இனிதே "புன்னாகவராளி" இங்கிதமாய் வாசிக்க
எங்கிருந்தோ நீயும் ஊர்ந்து வந்தாயே
நின்றோர் மெய் சிலிர்க்க அடையாளம் காட்டி
அருள் கொடுத்து மறைந்தாயே... நினைவிருக்கா....

ஊர்முழுக்க நடந்து ஒவ்வொரு ரூபாவாய் சேர்த்து
உன் கோயிலை மெருகூட்டிப் பார்த்து விட்டு
ஊர் விட்டு ஓடிப்போனோமே கூட்டமாய்
தனித்திருந்து நீயும் என்ன செய்தாயோ...
ஊரிழந்து, உறவிழந்து, உடமைகளுமிழந்து,
உணர்விழந்து, நின்றோமே திகைத்து
பார் முழுதும் பரவி நாம் பரிதவித்து நிற்கையிலே
பார்க்குமிடமெல்லாம் வழித்துணையாய் நின்றாயே...

கும்மிருட்டு வேளையிலே சுடலைவழி போகையிலே
கூடவே முன்னால் வழிகாட்டினாய்
கூட்டத்தை விட்டு நடுக்காட்டில் தவிக்கையிலே
வாட்ட சாட்டமாக வந்தாயே துணையாக
ஆழக்கடலிலே படகோடு பரிதவிக்கையிலே
பாலனாய் வந்து தோள் கொடுத்தாய்
காலமெலாம் பாவிநாம் போகும் இடமெலாம்
கூடவே வந்துன் பங்கும் கேட்டாயே

போரின் வடு மறந்து பிறந்த ஊர் புகுந்த போது
பொறுக்கவில்லையே மனம் பொசுங்கி போனதே
காரையும் முள்ளும் கறையான் புற்றும் கூடவே
புறாவின் எச்சமும்.... ஐயா.. உனக்கிவையாதுணை
எண்ணெயின்றி, தண்ணியின்றி இருக்க நல்லிடமின்றி
என் அப்பனே.... உனக்கா... இந்தநிலை
கண்ணில் நீர் வழிய இதயம் விம்மியழ
காட்டினாயே ஒளியை... மறக்கமுடியலயே

ஒளி மங்கும் கருவறையில் எம் ஐயன் குடிமிருக்க
அவனருளால் வளமாய் நாம் வாழவோ
தெளிவாய் முடிவெடுத்து கருங்கல் கொண்டு
திவ்விய ஆலயம் சமைத்தோமே இன்று
துணிந்து செய் துணை நிற்பேன் என்று நீ
துல்லியமாய் உறுதியளித்து நின்றாய் .
இன்று உன்னைக் குடியிருத்தி கும்பாபிஷேகம் செய்து

இன்னுருள் வேண்டுகிறோம் இணைந்தேநாம்

சத்தம் எதுவமின்றி கச்சிசதமாகவே உந்தன்
சங்கதிகள் அத்தனையும் முடித்திட
நித்தம் வந்தென் நித்திரையைக் குழப்பி
ஆயிரம் கதை சொல்லி நின்றாய்
கள்ளக்கிழவா... இன்னும் உன் தேவை என்ன?
கலங்கோம் நாம் சொல்லு நீ
உள்ளங்கவர்ந்தவனே உன்னையன்றி வேறுதுணை
எமக்கேது சொல்லப்பா நீ சொல்லப்பா

சீரழிந்து சிதறி நின்றாலும் சிந்தை ஒருமித்து
சித்தம் குளிர உன்முன் நிற்கிறோம்
சீர்பெறு கல்வியும், சிறப்புறு வேளாண்மையும்
செல்வமாய் பெற்று நாம் இங்கே
உன்னருகே என்றும் எமை வாழவைப்பாயோ...
உன் பாதம் வேண்டி விம்முகிறோம்
ஐயனே என் அப்பனே ஆலடியானே....
மெய்யனே இதற்கொரு வழி திறவாயோ

பொங்களுடன் பூசை அலங்காரம் அன்னதானம் அத்தனையும்
பொலிவுறு நாளும் நடந்தேற...
எங்கள் குல தெய்வமே ஏக்கங்கள் போக்கி
இன்னருள் தந்து வழி நடத்திடுவாயே
சிங்காரப் பொன்வதனா உன் புதுமைகளை
மென்கவியில் பாடுந்திறன் எனக்கில்லை
அன்பு மேலிட்டால் அரற்றிப்பணிகின்றேன்
அடிமைதனை உன்னருகே சேர்த்துவிடு

என்றும் உன் அடிமை

ஐயப்பா சரணம்

மயிலப்புலம் உறையும் ஐயப்பா சரணம்
மனமிரங்கி காப்பாயப்பா ஐயப்பா சரணம்
கட்டுவனில் வீற்றிருக்கும் ஐயப்பா சரணம்
காத்தருள வேண்டுமப்பா ஐயப்பா சரணம்
ஆலமரத்தடியில் ஐயப்பா சரணம்
அரி பாலகரே ஐயப்பா சரணம்
கருங்கல்லால் கோயிலப்பா ஐயப்பா சரணம்
கண்ணனவன் பாலகரே ஐயப்பா சரணம்
வெள்ளை மனத்துடனே ஐயப்பா சரணம்
உனை வேண்டித் துதித்தாலே ஐயப்பா சரணம்
வெள்ளை வேட்டி சால்வையுடன் ஐயப்பா சரணம்
வேண்டினோர் முன்நிற்பாய் ஐயப்பா சரணம்
பூரணையின் நாயகனே ஐயப்பா சரணம்
புட்கலையின் மன்னவனே ஐயப்பா சரணம்
புலி மீது அமர்ந்தவனே ஐயப்பா சரணம்
புண்ணியனே மணிகண்டனே ஐயப்பா சரணம்
வனத்தினிலே உறைபவனே ஐயப்பா சரணம்
வந்து அருள் புரிவாயப்பா ஐயப்பா சரணம்
ஐங்கரனின் தம்பியவன் ஐயப்பா சரணம்
ஐயம் எல்லாம் தீர்ப்பாயப்பா ஐயப்பா சரணம்
வேலவனின் தம்பியவன் ஐயப்பா சரணம்
வேண்டும்வரம் தருவானப்பா ஐயப்பா சரணம்
ஏகாந்தமானவனே ஐயப்பா சரணம்
ஏழைகளைக் காப்பவனே ஐயப்பா சரணம்
வில் ஏந்தி நிற்பவனே ஐயப்பா சரணம்
வீர மணி கண்டனப்பா ஐயப்பா சரணம்
பகவானே உன் தாயப்பா ஐயப்பா சரணம்
பரமசிவன் தந்தையப்பா ஐயப்பா சரணம்
பார் போற்றும் உத்தமனே ஐயப்பா சரணம்
பக்தர் குறை தீர்ப்பாயப்பா ஐயப்பா சரணம்
கல்வி செல்வம் தந்திடுவாய் ஐயப்பா சரணம்
கருணையுடன் காத்தருள்வாய் ஐயப்பா சரணம்
வல்வினைகள் போக்கிடுவாய் ஐயப்பா சரணம்

வஞ்சனைகள் அகற்றிடுவாய் ஐயப்பா சரணம்
கலியுக வரதனப்பா ஐயப்பா சரணம்
கடும்பிணி நோய் தீர்ப்பாயப்பா ஐயப்பா சரணம்
ஊரைவிட்டு அலைவோம் என ஐயப்பா சரணம்
உன் திரைச் சீலை தீப்பிடிக்க காட்சிதந்தாய் ஐயப்பா சரணம்
தெய்வீக பாலனப்பா ஐயப்பா சரணம்
தேடி வந்தோரை காத்தருள்வாய் ஐயப்பா சரணம்
பொங்கல் கண்டு களித்திடுவாய் ஐயப்பா சரணம்
பொங்கிவரும் துயர் துடைப்பாய் ஐயப்பா சரணம்
மன்னவனே மணிகண்டனே ஐயப்பா சரணம்
எம்மக்களை நீ காத்திடுவாய் ஐயப்பா சரணம்
உன் பாதம் தேடிவந்தோம் ஐயப்பா சரணம்
எங்கள் பாவம் தீர்க்கவேணும் ஐயப்பா சரணம்
சோதி வடிவானவனே ஐயப்பா சரணம்
எமக்கு சோமல்லா வாழ்வளிப்பாய் ஐயப்பா சரணம்

காமம், வெகுளி, பேராசை, குரோதம், ஆணவம் முதலிய இவற்றை எல்லாம் வெல்ல "ஐயப்பா சரணம்" என தூய மனதுடன் ஓதி ஐயனது அருட்கடாசத்தைப் பெற்றுஉய்வோமாக.

Printed By :

VIHADAN PRINTER

541/2, Galle Road, Wellawatta, Colombo -06.
Tel : 2504370, Fax : 2361329
E-mail : vihadanpr@yahoo.co.uk
Web : www.vihadan.com